பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 25 வெள்ளிக்கிழமை (10.12.2004) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் 14

'ஜனநாயகத்தைக் கொல்லாதே' என்ற கோஷத்துடன்

# தமிழ்க் கூட்டமைப்பினர் நாடாளுமன்றத்துக்குள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்!

## செங்கோலை எடுத்துவரவிடாமல் தடுத்தனர்

கொழும்பு,டிசெம்பர்10

சில அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் சபையில் விவாதமின்றி நிறைவேற்றப்படுகின்றன என்று நேற்றுமுன்தினம் மாலையில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டதற்கு நேற்றுச் சபைக்குள் கடும் எதிர்ப்புக் காட்டினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள்.

"கொல்லாதே! கொல்லாதே! ஜனநாயகத்தைக் கொல்லாதே!" - என்று கோஷமிட்டபடி நாடாளுமன்றுக்குள் நேற்றுக்காலை அவர்கள் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தால் சபைப் பணிகள் சுமார் ஒன்றே கால் மணிநேரம் தடைப்பட்டன.

சபைக்குள் செங்கோலை எடுத்துவர விடாமலும் அவர்கள் வழிமறித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நேற்றுக்காலை சபா பீடத்திற்குச் செங்கோலைக் கொண்டுவரவிடாமல் தடுத்து சபா பீடத்தின் முன் அமர்ந்து ஆர்ப்பாட்டம் செய்தபோது மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்களான பெ. சந்திரசேகரனும், பெ.இராதாகிருஷ்ணனும், ஐ.தே.கட்சி உறுப்பினரான தி.மகேஸ்வரனும் அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

அச்சமயம் இலங்கைத் தொழிலாளர் காங்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொலீஸ் கான்ஸ்டபிள் நேற்று மட்டக்களப்பில் சுட்டுக்கொலை!

ஏறாவூர்,டிசெ.10

மட்டக்களப்பு - திருமலை பிரதான வீதியின் பாரதி லேனில் வைத்து பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் நேற்று மாலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

காத்தான்குடிப் பொலீஸ் காவல் நிலையத்தில் கடமையாற்றும் கைலேஸ்வரன் (வயது - 40) என்பவரே இவ்வாறு சுட்டுக் கொலைசெய்

(18ஆம் பக்கம் பார்க்க)

## மீராவோடையில் துப்பாக்கிச் சூடு!

வாழைச்சேனைப் பொலீஸ் பிரிவுக்குட்பட்ட மீராவோடை, பாடசாலை வீதியிலுள்ள வீடொன்றின்மீது நேற்று அதிகாலை இனந்தெரியாத நபர்களினால் சரமாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகாலை 4.45 மணியளவில் இந்த வீட்டுக்கு வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரிகள் வீட்டின் உரிமையாளரை அழைத்துள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரன் எம்.பியின் பாதுகாப்பு விலக்கப்பட்டது

கொழும்பு.டிசெ.10

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டுவந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் எந்தவித முன்னறிவிப்பும் இன்றி அகற்றப்பட்டுள்ளன. நேற்று அதிகாலைமுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்திலிருந்து விடுக்கப்பட்ட விசேட பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று

(18ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவுக் கடற்பரப்பில் வைத்து 13 இந்திய மீனவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.10

நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் ஊடுருவி நேற்று நண்பகல் 12 மணியளவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 13இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மூன்று படகுகளில் வந்த இவர்கள், இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த சமயம், ரோந்து வந்த கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள் பின்னர் கடற்படையினரால் ஊர்காவற்றுறைப்பொலீஸாரிடம்ஒப்படைக்கப்பட்டனர். ஊர்காவற்றுறை நீதிமன்றில் இவர்கள் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களை விளக்கமறியலில்வைக்கும்படிநீதிவான் உத்தரவிட்டார். (ஏ-3)

## நாடாளுமன்றச் சிறப்புரிமை நடவடிக்கை தமிழ் எம்.பிக்களுக்கு எதிராகப் பாயும்!

### கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு.டிசெ.10

தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோரது சபையின் செயற்பாடுகளுக்கெதிராக சிறப்புரிமை நடவடிக்கைகளை எடுப்பது குறித்து நேற்று கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சபையில் பிரேரணையொன்றைச் சமர்ப்பிப்பதற்கு சபை முதல்வர் மைத்திரிபால சிறிசேனவிற்கு கட்சித் தலைவர்களின் கூட்டத்தின்போது அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் சபாநாயகர் டபிள்யூ ஜே.எம்.லொக்குபண்டாரவின் தலைமையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அமைச்சர்களான டியூ குணசேகர, தினேஷ் குணவர்த்தன, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, மைத்திரிபால சிறிசேன, நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், மஹிந்த சமரசிங்க, விமல் வீரவன்ஸ ஆகி

(18ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை அனுமதி வெட்டுப்புள்ளி இன்று இணையத்தளத்தில்!

கொழும்பு.டிசெ.10

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. (உயர்தரப்) பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையிலான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி விவரம் இன்று வெளியாகவிருக்கின்றது.

வெட்டுப்புள்ளி விவரங்களை இன்று மாலை 4 மணிக்குப் பின்னர் ucg.ac.lk என்ற இணை

(18ஆம் பக்கம் பார்க்க)

## கத்திக்குத்துக்கு இலக்கான நிலையில் யுவதியின் சடலம் பருத்தித்துறையில் மீட்பு

கரவெட்டி,டிசெ.10

பருத்தித்துறை வி.எம்.வீதியில் உள்ள வீடு ஒன்றில் நேற்று நண்பகல் 12 மணியளவில் கத்திக் குத்துக்கு இலக்கான நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அதேயிடத்தைச் சேர்ந்த செல்வி முருகேசு எழிலரசி (வயது-22) என்ற இளம் பெண்ணே உயிரிழந்தவராவார்.

உயிரிழந்தவர் வெளியில் சென்று இருந்தார் என்றும் - பின்னர் அவர் சமையல் அறைப்பக்கமாக வீட்டுக்குள் வந்திருந்தார் என்றும் -

அச்சமயம் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த நாம் சிறிது நேரத்தில் சமையல் அறைக்குப் போனபோது, அவர் இரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் -

அவரது சகோதரியான இளவரசியும், தாயாரான புனிதரத்தினமும் பொலீஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

தாவளை, இயற்றாலை பகுதி மக்கள்

## ரூ. 25 ஆயிரம் வழங்குமாறு கோரி செயலகம் முன்பாக நேற்று மறியல்

யாழ்ப்பாணம்,டிசெ.10

மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவைத் தமக்கு உடனடியாக வழங்குமாறு கோரி வரணிப் பிரதேசத்தின் தாவளை, இயற்றாலைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் யாழ். செயலகத்துக்கு முன்பு மேற்கொண்ட மறியற் போராட்டம் காரணமாக செயலகப் பணிகள் பாதிக்கப்பட்டன.

நேற்றுக்காலை 6 மணியளவில் செயலகப் பகுதிக்கு வந்த மேற்படி மக்கள் செயலகத்தின் வாயில் கதவுகளைப் பூட்டிவிட்டு அவற்றின் முன்னால் நின்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் தமது பணிகளுக்காக வந்த செயலக உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் உள்ளே செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அவர்கள் வீதி ஓரத்திலும் அங்குள்ள மரங்களின் கீழும் நின்றனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## முகாமைஅகற்றுமாறுகோரி பெண்கள் மகஜர் கையளிப்பு

திருகோணமலை,டிசெ.10

திருகோணமலை நகரின் புறநகர்ப் பகுதியான சிறிமாபுரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமை அகற்ற நடவடிக்கை எடுக்கும்படி யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கோரப்பட்டுள்ளது.

சிறிமாபுரத்துக்கு அயல் கிராமமான திருக்கடலூரைச் சேர்ந்த பெண்களே இக்கோரிக்கையை விடுத்துள்ளனர்.

திருக்கடலூரில் இருந்து ஊர்வலமாகச் சென்று கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்

(18ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றைப் பாவித்து ஆட்சியை நீடிக்க சந்திரிகா முயற்சி ஆனால் அவரின் ஆட்சியைப் பிரபாகரனே தீர்மானிப்பார்

### மஹிந்த விஜயசேகர கூறுகின்றார்

கொழும்பு.டிசெ.10

நீதிமன்றத்தைக் கொண்டு தனது ஆட்சியைத் தொடர சந்திரிகா முயல்கின்றார். ஆனால், அவரின் ஆட்சியைப் பிரபாகரனே தீர்மானிக்க வேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்த விஜயசேகர. எதிர்க்கட்சித் தலைவரின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் அனைவரும் கடவுள் அல்லர். நீதிமன்றம் கள்ளர் கூட்டம் நிறைந்ததென ஜனாதிபதி சந்திரிகா கூறியபோது, அவர் நீதிமன்றத்தை அவமதித்தார் என எவரும் கருதவில்லை. ஆனாலும், பின்னர் ஜனாதிபதி வெளியிட்ட சிறு குறிப்பை ஏற்று இந்த விடயத்தை எவரும் பெரிதுபடுத்தவில்லை.

(18ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# புதுடில்லியில் இன்று ஆரம்பமாகும் தென்னாசிய ஊடகத்துறை மாநாடு

யாழ்ப்பாணம்,டிசெ.10

தென்னாசிய மனித உரிமைகளுக்கான அமைப்பும் 'த அதர் மீடியா' (மற்ற ஊடகம்) என்ற அமைப்பும் இணைந்து நடத்துகின்ற பத்திரிகாசிரியர்கள் மற்றும் ஊடகத்துறையினர் கலந்துகொள்ளும் மூன்று நாள் மாநாடும் செயலமர்வும் இன்று புதுடில்லியிலுள்ள சர்வ தேச நிலையத்தில் ஆரம்பமாகின்றன.

இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய, சண்டே ஒப்சேவர் பத்திரிகையின் ஆலோசனை ஆசிரியர் லக்ஸ்மன் குணசேகர மற்றும் 'உதயன் - சஞ்சீவி' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் ஆகியவர்கள் கலந்து கொள்கின்றார்கள்.

"சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு நிலைமைகளில் ஊடகங்களின் நிலைமை'' என்ற கருப்பொருளில் இடம்பெறும் இந்தச் செயலமர்வில் நெருக்கடியும் கவலையுமிக்க நிலைமைகளில் ஊடகங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சுயாதீனப் பிரச்சினைகளும் மாற்றத்துக்குரிய நிலைப்பாடுகளும் என்பது பற்றிய விரிவுரையொன்றை 'உதயன் - சஞ்சீவி' பிரதம ஆசிரியா ம.வ.கானமயில்நாதன் நிகழ்த்துவார்.

மனித உரிமைகளுக்கான தென்னாசிய ஊடக அமைப்பு நேபாளத் தலைநகர் காத்மண்டுவிலிருந்து செயற்பட்டு வருகின்றது. 'த அதர் மீடியா' என்ற அமைப்பு புதுடில்லியிலிருந்து செயற்படுகின்றது.


இன்று ஆரம்பமாகும் 5ஆவது தென்னாசிய செயலமர்வில் பத்திரிகையாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பிரசுரிப்பாளர்கள், ஒலிபரப்பு தொழில் அதிபர்கள் மற்றும் சில சமூக விஞ்ஞானிகள் உட்பட 30 அல்லது 35 பேர் கலந்து கொள்கின்றார்கள்.

தென்னாசியாவில் பிணக்குகள் தொடர்பான விடயங்களை அறிக்கை செய்வது தொடர்பாக இவர்கள் வெளிப்படையாக கலந்துரையாடுவதுடன் பத்திரிகைத்துறையை மேம்படுத்துவது தொடர்பாகவும் ஆலோசனை நடத்துவார்கள்.

பாகிஸ்தான், நேபாளம், ஸ்ரீலங்கா, பங்களாதேஷ் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றார்கள்.

ஆரம்ப நிகழ்வில் செயலமர்வின் நோக்கம் விளக்கப்படுவதுடன் பிணக்குகளை அறிக்கையிடுவது தொடர்பான ஒரு கைந்நூலும் எல்லை கடந்த ஊடகங்கள் என்பது பற்றிய ஒரு கைந்நூலும் வெளியிடப்படும். இதில் உள்ளூர் ஊடகவியலாளர்கள் உட்பட 80பேர் வரை கலந்துகொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)





புதுக்குடியிருப்பு - ஆனந்தபுரம், கிளிநொச்சி - கனகபுரம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவுகளுக்கு யுனிசெவ், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் அதிகாரிகள் விஜயம் மேற்கொண்டனர்.

'யுனிசெவ்' அமைப்பின் பிரதிநிதிகளான பற்றீசியா, சட்டத்தரணி கங்காதரன் ஆகியோர் புதுக்குடியிருப்பு - ஆனந்தபுரத்தில் உள்ள சீர்திருத்தப் பிரிவுக்குச் சென்று தடுப்பில் உள்ளவர்களைப் பார்வையிட்டுக் கலந்துரையாடல் நடத்துவதை முதலாவது படத்திலும் -

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகளான பமிலா, டங்கன் ஆகியோர் கனகபுரம் சீர்திருத்தப் பிரிவுக்குச் சென்று தடுப்பில் உள்ளோரைச் சந்தித்தபின் கலந்துரையாடுவதை அடுத்துள்ள படத்திலும் - காணலாம். சீர்திருத்தப் பிரிவுப் பொறுப்பாளர் சொ.நரேன் உட்பட சீர்திருத்தப் பிரிவைச் சேர்ந்தோர் இக்கலந்துரையாடல்களில் பங்கேற்றனர். (3)

# குருநகர் ஐந்து மாடி முன்பாக மீண்டும் பொலீஸ் நிலையம்

## வைபவ ரீதியாக நேற்றுத் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

குருநகர் பகுதியில் நிரந்தரப் பொலீஸ் நிலையம் ஒன்று நேற்றுத் திறந்துவைக்கப்பட்டுள்ளது.

குருநகர்ப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களையடுத்துப் பொலீஸ் நிலையம் திறந்துவைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

வடபிராந்திய உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் வானகுருவின் உத்தரவினபேரில் குநகரில் ஐந்து மாடிக் கட்டடத்துக்கு முன்பாக பொலீஸ் நிலையம் இயங்கிய கட்டடத்தில் இந்தப் புதிய நிரந்தரப் பொலீஸ் நிலையம் நேற்றுக் காலை வைபவரீதியாகத் திறக்கப்பட்டது.

குருநகர்ப் பொலீஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக பொ.ப.அபயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி பொலீஸ்நிலையத்தில் சுமார் 50 பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என யாழ். பொலீஸ் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

1985ஆம் ஆண்டுக்குப் பின்னர் பொலீஸ் நிலையம் அதே இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-7)

## வடபகுதியில் காணாமல் போன

# ஒன்பதுபேரின் ஆள்கொணர்வு வழக்குகள் விசாரணைக்காக யாழ். நீதிமன்றுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

1996 - 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன ஒன்பதுபேர் தொடர்பான ஆள்கொணர்வு வழக்குகள் விசாரணைக்காக மேல் நீதிமன்றத்தினால் யாழ். நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சுண்டுக்குளியைச் சேர்ந்த என்.ஏ.வில்ரன், குருநகரைச் சேர்ந்தவர்களான துரைசிங்கம் குணசேகரம், ஐ.ஆர்.கே.ராஜா, யாழ். தண்ணீர்த் தாங்கியடியைச் சேர்ந்த ஏ.ஆர்.கியூ.ராஜ்குமார், யாழ். பிரதான வீதியைச் சேர்ந்த ஜனார்த்தன் ரவீந்திரன், யாழ். மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த தேவதாஸ் சுரேஸ்குமார் -

அரியாலையைச் சேர்ந்த செல்லையா பத்மநாதன், செல்லத்துரை குமார், ஆறுமுகம் சிவாஜினி ஆகியோருடைய வழக்குகளே யாழ். நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பான விசாரணைகள் நேற்றும், நேற்றுமுன்தினமும் யாழ். மேல் நீதிமன்றில் நீதிபதி கே.பி.எஸ்.வரதராசா முன்னிலையில் இடம்பெற்றன.

இவ்வழக்குகளில் எதிர்மனுதாரர் சார்பில் அரசசட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமியும், மனுதாரர்கள் சார்பில் மனித உரிமைக்கும், அபிவிருத்திக்குமான நிலையச் சட்டத்தரணி எம். றெமீடியஸும் மன்றில் ஆஜராகி தமது தரப்பு வாதங்களை முன்வைத்தனர்.

இவற்றைச் செவிமடுத்த நீதிபதி மேற்படி வழக்குகளில் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக முதற்தோற்றப்பாட்டிலேயே இம்மனுக்கள் மீது விசாரணைகள் நடத்தக்கூடியதாகவுள்ளதனால, இவ்வழக்கை விசாரித்து அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு யாழ். நீதிவானுக்குப் பணிப்புரை விடுத்தார். அத்துடன், சம்பந்தப்பட்ட மனுதாரர்களைக் குறித்த தவணையில் யாழ் நீதிமன்றில் ஆஜராகுமாறும் நீதிபதி தனது உத்தரவில் தெரிவித்தார். (எ-5)

# மனித உரிமைஆணைக்குழுவின் முன்பாக யாழ். அன்னையர் இன்று உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சர்வதேச மனித உரிமைகள் தினமான இன்று யாழ். மாவட்ட அன்னையர் முன்னணியினர் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட அலுவலக முன்றிலில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

1996ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டுக் காணாமற்போன தமது உறவுகள் தொடர்பாக அரசு நல்லதொரு பதிலைத் தரவேண்டும் எனக் கோரியே அவர்கள் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபடவுள்ளனர்.

இன்றுகாலை 8மணிக்கு ஆரம்பமாகவுள்ள உண்ணாவிரதம பிற்பகல் 3 மணிவரை இடம் பெறும் எனவும் -

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் காணாமற்போனோரின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கலந்துகொள்ளவேண்டும் என்றும் - அன்னையர் முன்னணித் தலைவி செ.கனகாம்பிகை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை -

சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று யாழ். குடாநாட்டிலும் மற்றும் கிளிநொச்சியிலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

குடாநாட்டில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்துடன் இணைந்து யாழ். மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் சில, மனித உரிமைகள் தினத்தைக் கொண்டாடுகின்றன. இன்று காலை தொடக்கம் மாலைவரை யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சென்று அங்குள்ள மக்களைப் பொது இடங்களில் ஒன்றுதிரட்டி அவர்களுக்கு வினாவிடைப் போட்டிகளை நடத்திப் பரிசில்கள் வழங்கவுள்ளனர்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் மனித உரிமைகள் தொடர்பாகப் பத்திரிகைகளில் வந்த கட்டுரைகளில் இருந்தே வினாக்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன - என்று உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களுக்கான விசேட செயற்றிட்டத்தின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி வல்லிபுரம் வேழினி தெரிவித்தார்.

### கிளிநொச்சி

இதேவேளை, வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வுகள் இன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.

மனித உரிமைகளின் நிலைப்பாடு தொடர்பான விசேட கலந்துரையாடலும் இடம்பெறும்.

இந்த நிகழ்வில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான மனித உரிமைகள் மூத்த ஆலோசகர் றொகான் எஜிரிசிங்க மற்றும் கொட்பிறி குணதிலக ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். சமூக செயற்பாட்டு மையம் மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகிறது.

(எ-10-7-6-190)

# குடிதண்ணீர் ஏற்றுமதிக்கு அனுமதி பெறப்பட்டது என்கிறது 'சுவிஸ் மினரல்'

## மாநகர ஆணையாளரின் கூற்றுக்கு மறுப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.10

'தண்ணீரை ஏற்றுமதி செய்வதாயின் முறைப்படி அனுமதி பெறவேண்டும் - யாழ். மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்து' - என்னும் தலைப்பில் நேற்றைய உதயனின் 5ஆம் பக்கத்தில் வெளியாகிய செய்தி தொடர்பாக -

குடாநாட்டிலிருந்து குடிதண்ணீரை சுத்திகரித்து ஏற்றுமதி செய்யும் ஒரேயொரு நிறுவனமாகிய 'சுவிஸ் மினரல்' (Swiss Mineral) நிறுவனம் நேற்று செய்திக் குறிப்பு ஒன்றை விடுத்திருக்கின்றது.

குடிதண்ணீரைச் சுத்திகரித்து விற்பனை செய்யும் தமது நிறுவனம் சம்பந்தப்பட்ட தரப்புகளிடமிருந்து உரிய முறையில் அனுமதி பெறப்பட்ட பின்னரே ஆரம்பிக்கப்பட்டது என்றும்-

தமது நிறுவனம் தொடர்பாக 'உதயன்' செய்தியில் மாநகர ஆணையாளர் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனவும் -

'சுவிஸ் மினரல்' நிறுவனத்தை இயக்கும் 'குளோபல் பிஸ்னஸ் நெற்வேர்க்' (Global Business Network) நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சி.பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்.

'எமது நிறுவனம் உரிய முறையில் அனுமதி பெற்று ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். அத்துடன், யாழ். மாநகர சபை ஊடாகவோ அல்லது ஆணையாளராலோ இதுவரை எமக்கு எந்தவித அறிவுறுத்தல்களும் வழங்கப்படவில்லை.

எமது நிறுவனத்துக்குரிய அனைத்து அனுமதிகளையும் யாழ். மாநகர சபையே 30.11.2004 அன்று உத்தியோகபூர்வமாக வழங்கியது - என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

**ஆசிரியர் குறிப்பு:**

'குளோபல் பிஸ்னஸ் நெற்வேர்க்' நிறுவனத்தின் இந்த மறுப்புத் தொடர்பாக யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவருடன் தொடர்புகொண்டு கேட்டபோது -


குறிப்பிட்ட நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட அனுமதி ரத்துச் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அவர் உறுதிசெய்தார். எனினும் யாழ். மாநகர சபை ஆணையாளர் கொழும்பு சென்றிருப்பதால் இந்த விடயம் தொடர்பான மேலதிக விளக்கத்தை உடனடியாக - உத்தியோகபூர்வமாக வெளியிடமுடியாது என்றும் தெரிவித்தார்.

மாநகரசபை ஆணையாளரின் விளக்கம் பின்னர் உதயனில் வெளியாகும். (ஐ)





வரணி இயற்றாலை, தாவளை இயற்றாலைப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் மீள் குடியமர்வுக் கொடுப்பனவாகிய 25 ஆயிரம் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். செயலகம் முன்பாக நேற்று மறியற் போராட்டத்தில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: வசந்தன்)*



கலிபோர்னியாவில் உள்ள கடற்படை முகாமுக்குச் சென்ற அதிபர் புஷ், வீரர்கள் இடையே உரையாற்றிய பின், முகாமில் உள்ள உணவு விடுதியில் மதிய உணவை வாங்கி சாப்பிடுகிறார்...

ஈராக் சிறைகளில்

# கைதிகளுக்கு நேர்ந்த கொடுமைகள்; மேலும் ஆதாரங்கள் வெளியாகின!

வாஷிங்ரன்,டிசெ.10

ஈராக்கில் பக்தாத் அருகே அபுகிராய்ப் சிறையில் கைதிகளாக இருக்கும் ஈராக்கியர்களை அமெரிக்க இராணுவத்தினர் துன்புறுத்துவது போன்ற புகைப்படங்கள் கடந்த சில மாதங்களுக்கு முன் வெளியாகிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தின. இந்த நிலையில் ஈராக் சிறைக் கைதிகள் துன்புறுத்தப்பட்டது பற்றிய மேலும் சில ஆதாரங்கள் வெளியாகி உள்ளன.

இதுதொடர்பாக அமெரிக்கக் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் இராணுவப் புலனாய்வுத்துறைக்கு எழுதிய கடிதங்கள் உட்பட சில ஆவணங்களை அமெரிக்க சிவில் உரிமைகள் சங்கம் வாஷிங்ரனில் வெளியிட்டுள்ளது. கைதிகளின் முகத்தில் குத்துவது, அவர்களுடைய உடலில் ஏற்பட்டுள்ள காயங்கள் ஆகியவை பற்றிய தகவல்கள், சிறையில் நடந்தவற்றை வெளியே கூறக்கூடாது என்று கைதிகள் மிரட்டப்பட்டது போன்ற தகவல்களும் அதில் இடம் பெற்றுள்ளன. (8)

# ஈராக் தீவிரவாதிகளுக்கு ஆதரவு வழங்குவதாக சிரியா மீது அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்ரன்,டிசெ.10

ஈராக்கில் உள்ள தீவிரவாதிகளுக்கு சிரியா ஆதரவு தருவதாக அமெரிக்க இராணுவ உளவுப் பிரிவினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பலூஜா நகரைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காகத் தாக்குதல் நடத்திய போது சிரியா ஆதரவுக்கான ஆதாரங்கள். கிடைத்தன என்றும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

தீவிரவாதிகளுக்கு ஆயுதம், பணம் ஆகியவை கொடுக்கப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

சதாம் ஹுசைனின் பாத் கட்சியினர் சவூதி அரேபியாவில் உள்ள தனிநபர்களிடம் இருந்து நிதி திரட்டித் தீவிரவாதிகளுக்கு அனுப்பியதும் தெரியவந்தது.

சிரியா வழியாகத்தான் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் ஈராக் நாட்டுக்குள் நுழைவதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# சான்பிரான்சிஸ்கோ உயிரியல் பூங்காவில் யானைகளை வளர்ப்பதற்குத் தடை


சான்பிரான்சிஸ்கோ,டிசெ.10

அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ உயிரியல் பூங்காவில் யானைகளுக்குத் தடை விதிப்பது பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

தற்போது அந்த உயிரியல் பூங்காவில் யானைகளுக்கு 63 சதுர மீற்றர் பரப்பளவு மட்டும் ஒதுக்கப்பட்டு உள்ளது. யானைகளுக்கு மற்ற விலங்குகளை விட கூடுதல் இடவசதி தேவைப்படுவதாகவும், அப்படி இடவசதி ஒதுக்க முடியாத பட்சத்தில் யானைகளை அங்கிருந்து வன விலங்கு சரணாலயத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் வன விலங்குப் பாதுகாப்பு ஆர்வலர்கள் வற்புறுத்தி உள்ளனர். இதற்கான சட்டமும் அங்கு உள்ளது. எனவே, உயிரியல் பூங்காவில் யானைகளுக்குத் தடை விதிப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையே நகர கண்காணிப்பாளர்கள் வாரியம் உயிரியல் பூங்காவில் யானைகளுக்கு 15 ஏக்கர் நிலம் ஒதுக்கும் யோசனையை தெரிவித்து இருக்கிறது. (8)

# நடுத்தர ரக அணுவாயுத ஏவுகணை பாகிஸ்தானில் வெற்றிகர பரிசோதனை



பாகிஸ்தானில் 700 கிலோமீற்றர் இலக்கைத் தாக்கக்கூடிய நடுத்தர ரகப் புதிய அணு ஆயுத ஏவுகணையைக் கடந்த புதன் கிழமை வெற்றிகரமாகப் பரிசோதனை செய்து பார்த்தனர்.

'ஷாகின்'எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த 'பாலிஸ் டிக்' ஏவுகணை. தரையிலிருந்து புறப்பட்டு 700 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மற்றொரு தரை இலக்கைத் தாக்கும் ஆற்றல் படைத்தது.

அணு ஆயுத முகப்புகள் மற்றும் மரபான ஆயுத முகப்புகளையும் எடுத்துச் செல்லும் திறன் இதற்கு உண்டு.

கடந்த 8 நாள்களில் ஏவி பரிசோதனை செய்து பார்க்கப்பட்ட இரண்டாவது ஏவுகணை இது; ஜூன் முதல் ஏவிபார்க்கப்பட்ட 5 ஆவது ஏவுகணை. அண்டை நாடுகளுக்கு தெரிவிக்கவேண்டும் என்று தற்போதுள்ள விதிகளின்படி இந்தியாவுக்கு இத்தகவலை தெரிவித்துவிட்டதாக இஸ்லாமாபாத்தில் இருந்து வெளிவந்த அறிக்கை ஒன்று தெரிவித்தது. 700 கிலோ மீற்றர் சென்று தாக்கக்கூடிய புதிய ஏவுகணை மூலம் இந்தியாவிலுள்ள பெரும்பாலான நகரங்களைத் தாக்க முடியும். (8)

# உக்ரைன் அதிபர் தேர்தலில் போட்டியிட்டவரை விஷம் கொடுத்துக் கொலை செய்ய முயற்சி!

## டாக்டர்கள் வெளியிடும் திடுக்கிடும் தகவல்

லண்டன்,டிசெ.10

உக்ரைன் நாட்டு அதிபர் தேர்தலில் போட்டியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் யுஷ் சென்கோவை தேர்தல் பிரசாரத்தின்போது விஷம் கொடுத்து கொல்ல முயற்சி நடந்துள்ளது. இதை அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர்கள் கண்டுபிடித்து உள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து பிரிந்த உக்ரைன் நாட்டு ஜனாதிபதி தேர்தல் கடந்த ஒக்ரோபர் 31 ஆம் திகதி நடந்தது. இந்தத் தேர்தலில் பல முறைகேடுகளைச் செய்து அதுவரை பிரதமராக இருந்த யானு கோவிச் வெற்றி பெற்றார்.

இந்தத் தேர்தல் முடிவை எதிர்க்கட்சி வேட்பாளர் யுஷ்சென்கோ ஏற்க மறுத்துவிட்டார். அவரது ஆதரவாளர்கள் தலைநகரில் கூடி முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். நாடாளுமன்றமும், உயர் நீதிமன்றமும் இந்தத் தேர்தல் செல்லாது என்றும் மறுதேர்தல் நடத்த வேண்டும் என்றும் அறிவித்துள்ளன.

இந்தத் தேர்தலில் அமெரிக்காவும் ரஷ்யாவும் கூட தலையிட்டுக் குழப்புகின்றன. யானு

உலக அரங்கில்

கோவிச்சை ரஷ்ய அதிபர் புடினும், யுஷ்சென்கோவை அமெரிக்காவும் ஆதரிக்கின்றன.

கடந்த செப்ரெம்பர் மாதம் தேர்தல் பிரசாரம் செய்தபோது யுஷ்சென்கோவின் உடல் நிலை பாதிக்கப்பட்டது. அதற்காக வியன்னாவில் உள்ள ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சை பெற்றார்.

அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் நிக் கோலாஸ் கோர்பன் கூறுகையில் 'யுஷ்சென்கோவுக்கு விஷம் கொடுத்து கொல்ல முயற்சி நடந்தது. அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டதற்கு காரணம் 'டயாக்சின' என்ற விஷம்தான். இதை யாரோ சாப்பாட்டிலோ அல்லது தண்ணீரிலோ கலந்துகொடுத்து இருக்கவேண்டும் அல்லது ஊசி மூலம் இதைச் செலுத்தி இருக்க வேண்டும் - என்றார். (8)

# அருங்காட்சியகங்களாக மாறும் ஏதென்ஸ் ஒலிம்பிக் இடங்கள்!

ஏதென்ஸ்,டிசெ.10

கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் கடந்த ஓகஸ்டில் ஒலிம்பிக் போட்டி நடைபெற்றது. இதற்காக கோடிக்கணக்கான ரூபாவில் ஸ்ரேடியம் உள்ளிட்டவைகள் கட்டப்பட்டன. அவற்றில் பல அரசு அலுவலகங்களாகவும் அருங்காட்சியகங்களாகவும் மாறப்போகின்றன.

மீதமுள்ளவற்றை வளாகங்கள், வர்த்தக நிறுவனங்களுக்காக ஒதுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டி முடிவடைந்து 3 மாதங்கள் ஆன நிலையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது கிரீஸ் அரசு.

மொத்தமுள்ள 40 வளாகங்களில் 5 வளாகங்கள் ஒப்பந்த அடிப்படையில் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

கார்காண்டியன் பிரஸ் மையம், இனி சுற்றுச் சூழல் அமைச்சக அலுவலகமாகச் செயறபடும். சர்வதேச ஒளிபரப்பு மையம், அருங்காட்சியகமாக இருக்கும். தேக்வான்டோ மையம் இனி கருத்தரங்கு மையமாக இருக்கும்.

ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்ற வளாகங்களைப் பராமரிக்க 2005 ஆம் ஆண்டுக்கு 1100 கோடி ரூபாக்களை ஒதுக்கீடு செய்துள்ளது கிரீஸ் அரசு. (8)

# போர்முனையில் குண்டுவீசும் ரோபோ!

வீட்டு வேலைகள் செய்யவும், வீட்டைக் காவல் காக்கவும், திருடர்கள் உள்ளே நுழைந்தால் அதைப் படம் பிடித்து செல்போன் மூலம் வீட்டு உரிமையாளர்களுக்கு அனுப்பிவைக்கும் ரோபோவை ஜப்பான் நிறுவனம் தயாரித்துள்ளது. அமெரிக்காவில் போர்முனையில் எதிரிகளுடன் போரிடுவதற்காக ஒரு ரோபோவை உருவாக்கி இருக்கிறார்கள். இந்த ரோபோக்கள் 100 மீற்றர் தூரத்தில் இருந்து எதிரிகளைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தும் போர் விமானங்களில் இருந்து எதிரிகள் இலக்குகள் மீது குண்டு மழை பொழியும். ரிமோட் மூலம் இந்த ரோபோக்களை இயக்க முடியும்.

கண்ணிவெடிகளை அகற்றவும் இந்த ரோபோக்கள் ராணுவத்தினருக்கு உதவும். போரில் தங்கள் வீரர்களுக்கு அதிக அளவில் உயிர்ச்சேதம் ஏற்படுவதைத் தடுக்க இந்தப் புதிய முயற்சியில் அமெரிக்கா இறங்கி இருக்கிறது. அடுத்த ஆண்டு ஈராக்கில் இந்த ரோபோவை அமெரிக்கா பயன்படுத்தும். (8)

# ஹொலிவுட் படமாகிறது போபால் விஷவாயுச் சம்பவம்; ஐஸ்வர்யா ராய்தான் கதாநாயகி; இணைத் தயாரிப்பாளர்

போபால் விஷவாயு சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு, அமெரிக்கத் தயாரிப்பாளர் சாசரி காபின் திரைப்படம் ஒன்றைத் தயாரிக்கிறார். இதில், ஐஸ்வர்யாராய்தான் கதாநாயகி. படத்தின் இணைத் தயாரிப்பாளரும் அவரே.

ஹொலிவூட்டின் முன்னணி தயாரிப்பாளர்களின் ஒருவர் சாசரி காபின். இவர் 'ஸ்பைடர் மேன்' அல்லது மேட்ரிக்ஸ்' போன்று விறுவிறுப்பான திரைப்படத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டார். ஆனால், அவருடைய ஆர்வம் தற்போது போபால் விஷவாயு சம்பவம் பக்கம் திரும்பியுள்ளது.

இந்தத் திரைப்படம் குறித்து சாசரி காபின் கூறியதாவது:-

கடந்த 15 ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் நடந்த போபால் விஷவாயு சம்பவம் மிகவும் கொடூரமானது. இதனால், இலட்சக்கணக்கான பேர் இறந்துள்ளனர். அதே அளவுக்கு ஏராளமானோர் உடல்ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் பாதிப்பைத் திரைப்படமாக எடுக்கத் திட்டமிட்டுள்ளேன். படத்தில் நடிக்கவும் இணைந்து தயாரிக்கவும் ஐஸ்வர்யா ராய் ஒப்புதல் தெரிவித்துள்ளார்.

இந்தப் படத்தில் ஐஸ்வர்யா ராயின் பெயர் ஜாஸ்மின்சிங். அமெரிக்காவில் வாழும் இந்தியர் என சித்திரிக்கப்படுகிறார். போபால் விஷவாயு சம்பவம் அவரது சிறிய வயதில் நடக்கிறது. அப்போது அவர் போபாலில் வசிக்கிறார். பின்னர் அமெரிக்கா சென்று விடுகிறார்.

வாலிபப் பருவம் அடைந்த ஜாஸ்மின் சிங் முன் இரண்டு பிரச்சினைகள் உள்ளன. போபாலில் யூனியன் காபைட் நிறுவனத்தில் தொழிற்சாலை மேலாளராக பணியாற்றிய தன் தந்தை குறித்து அறிய போபாலுக்குச் செல்வதா என்பது ஒரு பிரச்சினை. போபால் விஷ வாயு சம்பவம் நடந்தபோதுதான் அங்கிருந்ததால் அதன் பாதிப்புத் தனக்கு ஏற்பட்டிருக்கும் எனவே, தனக்கு ஊனமுற்ற குழந்தை பிறந்து விடுமோ என்ற அச்சம் மற்றொரு பிரச்சினை. இந்த இரண்டு பிரச்சினைகளையும் அவர் எப்படி தீர்க்கிறார் என்பதுதான் படத்தின் கரு. கதாநாயகிக்கு முக்கியத்துவம் தரும் திரைப்படம் இது.



போபால் சம்பவங்கள் போன்று பல சோக சம்பவங்கள் அமெரிக்காவிலும் நடந்துள்ளன. நமது காலத்தில் நடந்த மிகமோசமான சம்பவங்களில் போபால் விஷவாயு சம்பவமும் ஒன்று. படத்தை உலகளவில் ரசிகர்கள் ஏற்றுக்கொள்வார்கள். - இவ்வாறு சாசரி காபின் கூறினார். (8)

நத்தார் நற்சிந்தனை

"யூதா நாட்டுப் பெத்லகேமே யூதாவின் ஆட்சி மையங்களில் நீ சிறியதே இல்லை ஏனெனில், என் மக்களாகிய இஸ்ராயேலை ஆள்பவர் உன்னிலிருந்தே தோன்றுவார்."
மத்தேயு 2:5-6

ஓடர் நகைகள் குறித்த தவணையில் செய்து தரப்படும்.
ஒரே கூலியில் செய்து தரப்படும்.

வேணு நகைத் தொழிலகம்

Mobile : 0777 222091
372, பி(B)ச் வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

(C/39776) UTHAYAN Graphics

## சின்னஞ்சிறு விளம்பரங்கள்

### வீடு விற்பனைக்கு

சுதுமலை வடக்கு ஒழுங்கையில் 4பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.சிவசுப்பிரமணியம், அரசினர் வைத்திய சாலைக்கு அருகில், அச்சுவேலி. T.P.: 0777 - 111417. (39457)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா புறொயிலர் குஞ்சுகள் நாளை (11-12-2004) மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ் ஆனைக் கோட்டைச் சந்தி. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. நஞ்சீத், 517, ஸ்ரான்லி றோட். T.P.: 222 3529, 222 2867, ஸ்ரீராம் கால்நடைத் தீவன விற்பனை நிலையம், பருத்தித்துறை, பஸ் நிலையம் முன்பாக. (39478)

### தவறிவிட்டது

மணல்பாதி, கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த சிவகுருநாதன் குலநாதன் (741121328V), கந்தசாமி சந்திரமதி ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் 07-12-2004 அன்று யாழ்.நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (39451)

---

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் கலை நிகழ்ச்சி

வடமராட்சி, டிசெ.10

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு மாணவர்களின் கலை நிகழ்சசி இடம்பெறும். (ஐ-173)

## உணவுப் பொருள்களின் விவரங்களை ஒப்படைக்கப் பணிப்பு

தென்மராட்சி,டிசெ.10

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் உலக வங்கியினால் நடைமுறைபபடுத்தப்படும் மாணவர்களுக்கான காலை உணவுத் திட்டத்தின்கீழ் இன்று கையிருப்பில் உள்ள உணவுப்பொருள்களின் விவரங்களை இன்று வெள்ளிக்கிழமை கோட்டக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு பாடசாலை அதிபர்களைக் கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதன் கேட்டுள்ளார். (8-117-202)

## போலி சட்டத்தரணி பொலீஸாரால் கைது!

ஜா-எல, கேஹித்த பகுதியைச் சேர்ந்த - பழைய இரும்பு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஹோடீஸ்வரத் தமிழ் வர்த்தகரை ஏமாற்றி 5 லட்சம் ரூபா பணமோசடி செய்த சம்பவம் தொடர்பாக களுத்துறைப் பொலீஸாரினால் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட போலி சட்டத்தரணியும், இரு உதவியாளர்களும் கடந்த திங்களன்று களுத்துறை மாஜிஸ்திரேட் சுமித் அருண பெரேரா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 20 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

மூன்று சந்தேகநபர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை களுத்துறை தெற்குப் பொலீஸாரினால் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மோசடி செய்த பணத்தில் ஒரு தொகையும் பொலீஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (க)

---

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### லியோகழகம் நடத்தும்

நீரிழிவு நோயாளிகளுக்கான

## இலவசக் கருத்தரங்கு

இந்திய நீரிழிவு சங்கமருத்துவர்

O.M.S. அப்துல்காதர் B.Sc., D.Com.

அவர்களின் ஆலோசனையும். மருத்துவ பரிசோதனைகளும்.

| | |
|---|---|
| தலைவர் | :திரு.சி.கோகுலன் (லியோக் கழக தலைவர்) |
| இடம் | : யாழ். மத்தியகல்லூரி தம்பர் மண்டபம் |
| காலம் | : 11.12.2004 சனிக்கிழமை காலை 9மணி |

நீரிழிவு நோய் உள்ளவர்களும் இது பற்றிய விளக்கங்கள் பெறவிரும்புவர்களும் இதில் கலந்து பயன்பெறுமாறு அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி லியோ கழகத்தினர்.

(39479)(12-16-19-26)

---

## வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி

## வேலைக்கான கேள்வி அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபையின் செயலாளரினால் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

01. கேள்விப்பத்திரங்கள் 2004-12-14 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட்) தரம் எம். 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. கீழே குறித்த தொகையைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்விப்பத்திரத்தில் ஒரு பிரதியை கடித உறையிலிட்டு அரக்கு முத்திரை வைத்து *செயலாளர், வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை, கரவெட்டி* என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இட்டு, இரண்டாம் பிரதியை *பிராந்திய உள்ளூராட்சி, உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம* அவர்கட்கு அனுப்பி வைக்கவேண்டும். இரண்டு பிரதிகளையும் உரிய இடங்களில் 2004-12-16ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கிடையில் கிடைக்கச்செய்தல் ஒப்பந்தகாரரின் கடமையாகும்.
03. கேள்விகள் 2004-12-16ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
04. மேலதிக விவரங்களை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

| வேலை | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் (ரூபா) | மீளளிக்கப் படாத பெறுமதிசேர் வரி (ரூபா) |
|---|---|---|---|
| யார்க்கரு வீதி புனரமைப்பு | 5000.00 | 500.00 | 75.00 |

ஏ.எம்.ஜோசெப்,
வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச சபை,
கரவெட்டி

(சி-39779)(26-16-19)

---

## யா/தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி தெல்லிப்பழை

### வெள்ளிவிழா ஆண்டில் புலமைப் பரிசில் பரீட்சையில்

## சித்தியடைந்தோரைப் பாராட்டுகிறோம்



சித்தி அடைந்தோர் விபரம்
இடமிருந்து வலமாக

01. இ.அன்று அனோஜ் – 128
02. செ.அபிமன் – 126
03. மோ.சித்திராங்கன் – 124
04. ர. திரிசூலி அபிராமி – 128
05. சி.ருகல்யா – 143

மேலும் அன்மித்த புள்ளிகளைப் பெற்ற கு.சாயிசங்கர், வ.அஜிக்கா, ந.ரவிஷங்கரன், ந.யசிலா ஆகியோரையும் மென்மேலும் சிறப்புற்று வளர வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்துகிறோம். அத்துடன், பரீட்சைக்குத் தோற்றிய 19 பேரையும் சிறப்புற பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும் பல்லாண்டு வாழ்கவென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

– பெற்றோர்.

(சி-39777) (39-11-19-26)

---

## யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம்

யாழ்.குடா விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுச் சபைக்கூட்டம் எதிர்வரும் 11-12-2004 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு சு.இராசதுரை அவர்களின் தலைமையில் திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலைய மண்டபத்தில் நடைபெறும். சகல பொதுச் சபை உறுப்பினர்களுக்கும் ஏற்கனவே அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, அனைவரையும் தவறாது கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

பலாலி வீதி,
திருநெல்வேலி.


(39473)(26-11-19)

தா.பத்திநாதர்,
(செயலாளர் – சீட்கோ).

---

## முதலாம் ஆண்டு நீங்காத நினைவில்

மலர்வு 1942 - 04 - 07



உதிர்வு 2003 - 11 - 21

### அமரர் சுப்பிரமணியம் பரமநாதன்

(ஓய்வுபெற்ற காசாளர், யாழ்/மத்திய கல்லூரி)

இமைப் பொழுதில், மீளாத்துயரில் மூழ்கடித்த
அன்புத் தெய்வமே! உங்களை நாம் பிரிந்தாலும்
தங்கள் நினைவு எம் நெஞ்சங்களில் கல்மேல்
எழுத்துப் போல் என்றும் நிலைக்கும்.

கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.


மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(39439)(39-11-19-26)

---

## 31 ஆம் நாள் நினைவலைகள்

மானுட வாழ்வில் 1922 - 12 - 30



மலரவன் அடியில் 2004 - 11 - 10

### அமரர் நடராசா பொன்னம்மா

திதி: திரயோதசி

தவங்கிடந்து பெற்றெடுத்து
தரணியிலே நாம் தலை நிமிர - என்றும்
உத்தமியாய் வழி காட்டி
உயிர் நீத்துப் போனவரே - இன்று
உங்கள் ஆத்மா சாந்திபெற
இறைஞ்சுகின்றோம் இறைவனையே.

20, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி,

(39481)(12-11-19-26)

N.சிவபாதசுந்தரம்,
S.செல்வரட்ணம்
குடும்பத்தினர்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மாசிலாமணி அமிர்தானந்தர்

புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மாசிலாமணி அமிர்தானந்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை 5.12.2004 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர் முத்துத்தம்பி - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகளும் இளைப்பாறிய ரயில் நிலைய அதிபர் யோகவனம் அமிர்தானந்தரின் அன்பு மனைவியும் ஜெயராஜன் (டென்மார்க்), இந்திராணி (கொழும்பு), ஜெயராணி (கொழும்பு), பாக்கியராஜன் (லண்டன்), டாக்டர் கிருஷ்ணராஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தநாயகி (டென்மார்க்), பாமினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும் பானுவின் பாட்டியும் காலஞ்சென்ற நாகபூசனியம்மா, டாக்டர் வன்னித்தம்பி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு பொறளை ஏ.எவ்.றேமண்ட் மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, அன்று மாலை 4 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோகவனம் அமிர்தானந்தர்
(கணவர்).

*தொலைபேசி இலக்கம்*
*2554396 கொழும்பு.*

(சி-39774) (29-11-19-26)

உதயன்

# மனித உரிமைகள் தினத்தில் தமிழர்களின் சிந்தனை

இன்று சர்வதேச மனித உரிமைகள் தினம்.

அடிப்படை உரிமைகளுக்காக இரத்தம் சிந்தி, உயிர்த் தியாகம் செய்து போராடிவரும் ஈழத்தமிழினத்தைப் பொறுத்தவரை இந்த நாள் மிக முக்கியமானது.

'அடிப்படை மனித உரிமைகள்' என்ற பதத்திற்கு ஐக்கிய நாடுகள் சபையும் ஏனைய சர்வதேச அமைப்புகளும் தரும் வியாக்கியானம் வித்தியாசமானது. இலங்கைத் தீவில் 'அடிப்படை உரிமைகள்' என்ற பதம் தரும் கருத்து வேறுபாடானது.

இலங்கைத் தீவைப் பொறுத்தவரை அடிப்படை உரிமைகள் அரசமைப்பில் வரையறுக்கப்பட்டுள்ளன.

அரசமைப்பைப் பொறுத்தவரை பௌத்த சிங்கள மேலாண்மை வாதத்தை அப்படியே பிரதிபலிக்கும் -நாட்டின் அதி உயர் - ஆவணமாக அது உள்ளது.

'மக்கள், நாடு, இறைமை' என்ற மூன்று விடயங்களை முதலாவது அத்தியாயமும் பௌத்தம், என்ற தலைப்பை இரண்டாவது அத்தியாயமும், அடிப்படை உரிமைகள், என்ற விடயத்தை மூன்றாவது அத்தியாயமும் 'மொழி' விவகாரத்தை நான்காவது அத்தியாயமும் இலங்கை அரசமைப்பில் வெளிப்படுத்துகின்றன. ஏனையவை எல்லாம் அதற்குப் பின்னர் தான்.

இந்த முதலாவது அத்தியாயம்தான் நாட்டின் சிங்கக் கொடி பற்றியும் சிங்கள தேசிய கீதம் பற்றியும் பிரஸ்தாபிக்கின்றது.

'பௌத்தம்' என்று மதத்துக்கு தனித்து முக்கியத்துவம் தருகின்ற வகையில் இந்த நாட்டில் ஒரு சமயத்துக்கு முன்னிலை தரும் நிலைப்பாட்டை முதன்முதலில் வெளிப்படுத்தும் இந்த அரசமைப்பில் அதற்கு இரண்டாவது அத்தியாயம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

நான்காவது அத்தியாயம் 'மொழி' பற்றிப் பேசுகின்றது. இந்நாட்டின் உத்தியோகபூர்வ மொழி 'சிங்களம்' என்று அறுதியிட்டுப் பிரகடனப்படுத்தி மொழிப் பிரச்சினைக்கு வித்திடும் வகையில் தனித்துவ - ஏகபோக - உரிமையை பெரும்பான்மையினருக்கு வழங்கும் செல்வாக்கை இந்த அத்தியாயத்தின் முதலாவது ஷரத்து அவர்களுக்கு வழங்குகின்றது.

இப்படி பௌத்த, சிங்கள மேலாண்மைவாதத்தை உறுதிப்படுத்தும் இலங்கை அரசமைப்பின் ஆரம்ப அத்தியாயங்களுக்கு நடுவில்தான் மக்களுக்கான அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் வாசகங்களும் மூன்றாவது அத்தியாயத்தில் இடம்பெறுகின்றன.

அவையும்கூட இந்த மேலாண்மை வாதத்தின் பிரதியீடாகவே - பிரதிபலிப்பாகவே - அமைந்துள்ளன என்பது ஈழத்தமிழரின் பல தசாப்தகால அனுபவமாகும்; பட்டறிவாகும்.

இந்த நான்காவது அத்தியாயத்திலே சிந்தனை செய்யும் சுதந்திரம், சித்திரவதைக்கு உட்படுத்தப்படாமல் இருக்கும் சுதந்திரம், பாகுபடுத்தலுக்கு உட்படுத்தப்படாமல் இருக்கும் சுதந்திரம், தான்தோன்றித்தனமான கைது, காவல், தடுப்பு, தடை, தண்டனை ஆகியவற்றுக்கு உட்படாமல் இருத்தலுக்கான சுதந்திரம், பிரசுரித்தல் மற்றும் பேச்சுச் சுதந்திரம் ஆகிய உரிமைகள் பற்றி பிரஸ்தாபிக்கப்படுகின்றது. இந்த உரிமைகள் மீறப்பட்டால் உயர்நீதிமன்றம் மூலம் நிவாரணம் பெறுவதற்கான வழிவகைகளையும் இந்த அரசமைப்பு அத்தியாயம் கூறுகின்றது.

ஆனால், இந்த உரிமைகளை எல்லாம் பல்வேறு காரண, காரியங்கள், சந்தர்ப்பங்களின் கீழ் கட்டுப்படுத்துவதற்கான - மட்டுப்படுத்துவதற்கான - ஏற்பாடுகளையும் இதே அரசமைப்பின் அடுத்துவரும் அத்தியாயங்களும் ஏற்பாடுகளும் கொண்டிருப்பதுதான் அதன் விசித்திரமான நிலை.

வகை தொகையின்றியும் காரணமின்றியும் ஈழத் தமிழர்கள் கைதுசெய்யப்படவும் சித்திரவதைக் கூடங்களில் காலவரையின்றித் தடுத்து வைக்கப்படவும் வழிசெய்யும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டங்களும், அவசரகாலச் சட்ட விதிகளும் கொண்டுவரப்படுவதற்கு இந்த மட்டுப்படுத்தல்கள் தொடர்பான ஏற்பாடுகள்தான் வழி சமைத்தன; மூல காரணமாகின.

இது தவிர பெண்ணுரிமை, சிறுவர் உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை போன்ற பல்வேறு அத்தியாவசிய உரிமைகளையும்சுதந்திரங்களையும்கூட உறுதிப்படுத்துவதற்கு இந்த அரசமைப்பில் உரிய ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

தனித்துவமான இனங்களின் தேசியம், தாயகம், சுயநிர்ணயம் போன்ற அடிப்படை விடயங்களை, உரிமைகளைப் பறித்து ஒற்றை ஆட்சி என்ற பதத்தின்கீழ் அவற்றைக் கபளீகரம் செய்து - நிற்பதால், மனித உரிமைகளுக்கான அடிப்படைப் பண்பு, இயல்புகளைத் தொலைத்த ஓர் அரசமைப்பாகவே இது விளங்குகின்றது என்றே கூற வேண்டியுள்ளது.

1978இல் அப்போதைய ஜெயவர்த்தனா அரசு இந்த அரசமைப்பைக் கொண்டு வந்தபோதே அதை ஈழத் தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; அடியோடு எதிர்த்தனர். ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களின் பங்களிப்பின்றி, சம்மதமின்றி , பங்குபற்றலின்றி தயாரிக்கப்பட்டு, அவர்களின் விருப்புக்கு மாறாக அவர்கள் மீது திணிக்கப்பட்டதால் இந்த அரசமைப்பு அவர்களுக்கு ஓர் அடிமை சாசனமேயன்றி வேறில்லை.

இந்த அரசமைப்பு இடுக்கிப் பிடியிலிருந்து வெளியே வருவதுதான், இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்கும் முக்கிய முட்டுக்கட்டையாக உள்ள விவகாரம்.

அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் பெயரில் ஈழத் தமிழருக்கு விலங்குபோடும் சாசனமே இந்த அரசமைப்பு.

அதிலிருந்து மீளுவது எப்படி என்பதுதான் மனித உரிமைகள் தினமான இன்றைய நாளில் ஈழத் தமிழரின் ஒரே சிந்தனையாகும்.



அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் மாகாணத்தில் தமிழீழ மாவீரர் நாள் அண்மையில் அனுஷ்டிக்கப்பட்டது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களே இவை.

# நூலக அபிவிருத்தியை மேற்கொள்ள பாடசாலை நூலகங்களுக்கு புத்தகங்கள்

## ஆசிய அபிவிருத்தி வங்கி உதவுகிறது

யாழ்ப்பாணம், டிசெ.10

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் பாடசாலைகளின் நூலகக்கற்றல் வளநிலையச் செயற்பாடுகளை மேம்படுத்தும் நோக்கில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தமிழ் மெழிமூலப் பாடசாலைகளுக்கு பல நூல்கள் கொண்ட நூலகப்பொதிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

இதன் பிரகாரம் யாழ்.மாவட்டத்தில் வடமராட்சி வலயத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 37 பாடசாலைகளுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் 10.30 மணிவரை புலோலியில் உள்ள வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

நூற்பொதிகளைப் பெற்றுக்கொள்ளவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு -

வல்வெட்டித்துறை சிதம்பரக்கல்லூரி, தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம், பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, வல்வெட்டித்துறை சிவகுருவித்தியாலயம், கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை, அல்வாய் அம்பாள் வித்தியாலயம், அல்வாய் சிறிலங்கா வித்தியாலயம், கலட்டி றோ.க.த.க.பாடசாலை, பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை சென்.தோமஸ் றோ.க.பெண்கள் பாடசாலை, தும்பளை சைவப்பிரகாச வித்தியாலயம், புற்றளை மகாவித்தியாலயம், புலோலி மெ.மி.த.க.பாடசாலை, பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயம், அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை, உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி தேவரையாளி இந்துக்கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலயம், இமையாணன் தமிழ் வித்தியாலயம், கரவெட்டி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம், கம்பர்மலை தமிழ் வித்தியாலயம், கப்பூது ஏகாம்பரம் வித்தியாலயம், கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயம், கரவெட்டி ஸ்ரீநாரத வித்தியாலயம், வல்வெட்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.

வடமராட்சி வலயத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நூற் பொதிகளில், இவ்வலயத்தின் மருதங்கேணி கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு, போக்குவரத்து வசதிககருதி எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பளை மத்தியகல்லூரியில் வைத்து நூற்பொதிகள் வழங்கப்படும் என [illegible] தப்பட்ட பாடசாலை அதிபர்கள் அல்லது நூலக வளப் பொறுப்பாளர்கள் அங்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நூற்பொதிகளைப் பெறும் மருதங்கேணி கோட்டப்பாடசாலைகள் விவரம் வருமாறு:-

ஆழியவளை சி.சி.த.க.பாடசாலை, நாகர் கோவில் மகாவித்தியாலயம், செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தாளையடி றோ.க.த.க. பாடசாலை, அம்பன் அமெரிக்க மிஷன் பாடசாலை, குடத்தனை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம், மணற்காடு றோ.க.த.க. பாடசாலை, மருதங்கேணி இ.த.க. பாடசாலை, நாகர்கோவில் அ.மி.த. பாட சாலை.

இதேவேளை -

வலிகாமம் கல்வி வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு எதிர்வரும் 13 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு வலய அலுவலகத்தில் வைத்து புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன.

நூல் பொதிகள் வழங்கப்படவுள்ள பாடசாலைகளின் விவரம் வருமாறு-

ஏழாலை ம.வி, மயிலணி சைவ வித்தி, இணுவில் இந்து, உடுவில் மான்ஸ் ம.வி., குப்பிளான் விக்கினேஸ்வராக் கல்லூரி, ஏழாலை சைவ மகாஜனா வித்தி., தாவடி இ.த.க.பாட சாலை, உடுவில் முருகமூர்த்தி வித்தி., கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தி., அராலி இந்துக் கல்லூரி, அராலி சரஸ்வதி வித்தி, வசாவிளான் ம.ம.வி., பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம், சுழிபுரம் வடக்கு ஆறுமுகம் வித்தி., மூளாய் சைவப் பிரகாச வித்தி., வட்டு. இந்துக் கல்லூரி, வட்டு. திருநாவுக்கரசு வித்தியாலயம், சித்தங்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம், பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி, சில்லாலை றோ.க.பாடசாலை, பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயம், பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம், இளவாலை கன்னியர் மடம் ம.வித்தியாலயம், இளவாலைஹென்றியரசர் கல்லூரி, மாதகல் சென். ஜோசேப் ம.வித்தியாலயம்.

(8-152-173)

# தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்க சுற்றறிக்கை

## கல்வி அமைச்சு அனுப்பிவைத்தது

காரைதீவு,டிசெ.10

நாட்டில் சேவையாற்றிவரும் தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கான சுற்றறிக்கையை கல்வியமைச்சு மாகாணக்கல்வி அமைச்சுகளுக்கு அனுப்பி வைத்துள்ளது.

கஷ்ட மற்றும் அதிகஷ்ட பிரதேச பாடசாலைகளில் 01.01.2004 வரை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகாலம் சேவையாற்றிய - ஜி.சீ.ஈ. உயர்தரப் பெறுபேற்றில் பல்கலைக் கழகத் தெரிவுக்கு ஆம் என்ற பெறுபேற்றைப் பெற்ற தொண்டர் ஆசிரியர்கள் இவ்வாறு நிரந்தர சேவைக்குள் உள்ளீர்க்கப்படவிருக்கின்றனர் என அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-க)

### உதயவாக்கு

பொன்னிலும் பார்க்க பெரியது பொழுது.

### நாளை

*கார்த்திகை 26*
*சனிக்கிழமை*
*(11.12.2004)*
*திதி: சதுர்த்தசி*
*முற்பகல் 09.47*
*நட்சத்திரம் : அனுஷம்*
*பிற்பகல் 03.21*
*அமாவாசை விரதம்*
*சுபநேரம்: 3.20 - 4.50*
*ராகுகாலம்: 09.20 - 10.50*
*(பழையநேரப்படி)*

# மூன்று ஆலயங்களில் ஒரே இரவில் திருட்டு

வலி.தெற்கு.டிசெ.10

சுன்னாகம், மயிலணி கிராமத்திலுள்ள மூன்று ஆலயங்களில் கடந்த 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஆலயக் கதவுகள் உடைக்கப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

மயிலணி கந்தசுவாமி ஆலயம், மயிலணி முத்துமாரி அம்மன் ஆலயம் (வடலி அம்மன்), சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றிலேயே இத் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆலயத்தின் கதவுகளை உடைத்துத் திறந்து உட்புகுந்த திருடர்கள் ஆலய மூலஸ்தான விக்கிரகங்களைப் புரட்டி உள்ளே வைக்கப்பட்டிருந்த தங்க இயந்திரத் தகடுகள், விக்கிரகங்களின் கிரீடங்கள் (முடி), அங்கிகள், தங்கச் சங்கிலிகள், அம்மன் பொட்டுக்கள் எனப் பலவற்றைத் திருடிச்சென்றுள்ளனர்.

மேற்படி திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஆலய நிர்வாகிகள் சுன்னாகம் பொலீஸில் முறைப்பாடு செய்துள்ளனர். (8-152)

# நூலகங்களைப் பராமரிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை

கொழும்பு.டிசெ.10

பாடசாலைகளில் நூலகங்களை பராமரிப்பது, பயன்படுத்துவது உள்ளிட்ட அவற்றின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பான பயிற்சிப்பட்டறை இன்று வெள்ளிக்கிழமை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பட்டறையில் சகல கல்வி வலயங்களிலும் பணியாற்றும் நூலகத்துக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (8-173)

# ஆறாவது மாத நினைவஞ்சலி



மலர்ந்தது
09 - 04 - 1996

விண்ணில் மறைந்தது
10 - 06 - 2004

## செல்வி சற்குணநாதன் யோதிகா



எம் இதயத்தில் மலர்ந்த திருவுருவே
எமை பிரிந்து எங்கம்மா சென்றாய்?
இதயத்தில் இருப்பவளே நீ பிரிந்து
ஈர் மூன்று மாதங்கள் மறைந்திடினும்
ஈரவிழிகள் காயவில்லை அம்மா...!
யோதிகா எங்கள் இல்லத்தின் ஜோதி நீ
யோதி நீ மறைந்தாய் இருள் சூழ்ந்தது எம் மனதில்
பிஞ்சுக் குரலினால் கொஞ்சும் மொழி பேசும்
பிஞ்சுப் பாலகியே விஞ்சி நிற்கும் எம் துயரகற்ற
அஞ்சுகமே அவனியில் மீண்டொருக்கால் வாராயோ...?



அல்லாரை தெற்கு,
கொடிகாமம். (C/39763)(38-11-16-42)

உன் துயரால் வாடும்
குடும்பத்தினர்.

# ஒளிவிழா நிகழ்வுகள்

நெடுந்தீவு,டிசெ.10

நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரியின் ஒளி விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கல்லூரி அதிபர் அருட்சகோதரி இக்னே சியா சூசைப்பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு தென்னிந்தியத் திருச்சபைப் போத கர் வண.ஆர். ஜோண் செல்வமும், சிறப்பு விருந தினர்களாக நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட் திரு. எஸ்.ஜெபநேசரட்ணம் அடிகளார், நெடுந் தீவு உதவி அரச அதிபர் எம்.பற்றிக் டிறஞ் சன், நெடுந்தீவுப் பிரதேச சபைச் செய லாளர் ச.பொ.தில்லைநாதன், கோட்டக்கல்வி அதி காரி கே.அரசரட்ணம் ஆகியோரும் கலந்து கொள் ளவுள்ளனர்.

(8-202-112)

★ ★ ★

வலி.தெற்கு,டிசெ.10

சுன்னாகம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் ஒளிவிழாவும், பரி சளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

பாடசாலை அதிபர் செல்வி அ.றொ.ஜெப நாயகி தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் பிரதமவிருந்தி னராகக் கலந்துகொள்கிறார்.

சுன்னாகம் பங்குத் தந்தை அருள்திரு. பா.பி.இராஜசிங்கம் சிறப்பு விருந்தினராகவும், நவாலி சென்.பீற்றேஸ் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அதிபர் சிறில் சுகந்தரன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

(8-152)


# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 11.12.2004 - 16.12.2004
முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

✳ சக்தி குறைவு ✳ஞாபக மறதி ✳பயம்
✳நடுக்கம் ✳நித்திரைக்குறைவு ✳ஆண்மைக் குறைவு ✳நீரிழிவுநோய்
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளுங்கள்! ஆண்மைச் சக்திக்குறைவு தான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் புரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.
தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப்பெற்ற

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(C/39760) (42-16-11)


# நான்காம் ஆண்டு நினைவினில்

வீரப்பிறப்பு
24 - 08 - 1977



வீரச்சாவு
10 - 12 - 2000

## மேஜர் இளமுருகன் / அர்ச்சுனன்
## (இராஜலிங்கம் பவான்)

சிங்களப் படைகொன்று வென்றனன்
சீறியே யாழ்.மண்ணில் வலம்வந்தவன்
தமிழீழம் வெல்லவே உயிர்தந்தவன்
தனியான இடமொன்றை எம் மனத்தினில் வென்றவன்.

பரமேஸ்வராச்சந்தி.
(39480)(42-11-16)

நண்பர்கள்.


KARUNYA CHILD HEALTH CARE CENTRE
காருண்யா குழந்தை சுகநல நிலையம்

# அறிவித்தல்

தவிர்க்கமுடியாத காரணத்தால் எமது நிலையம் 10.12.04 தொடக்கம் 19.12.04 வரை மூடப்பட்டிருக்கும். பதிவு செய்யப்பட்ட குழந்தைகளுக்கான தொலைபேசி மூலமான ஆலோசனைகளைத் தொடர்ந்தும் இந்த நாள்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

நிர்வாகம்
0714104100
023 22 32619

677,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். அல்லது
0777 570160
(39475)(42-11-16)


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
28 - 12 - 1932



உதிர்வு
21 - 11 - 2003

## அமரர் கந்தையா கயிலாயபிள்ளை

(ஓய்வு பெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
சுகாதாரத் திணைக்களம்,வவுனியா)
திதி: அபரபக்க திரயோதசி

ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்மனது
ஈண்டு உமது நினைவுடனே நாமிங்கு வாழ்கின்றோம்.
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம.

இணுவில் மேற்கு,
இணுவில்.
(39249)(42-11-16)

தகவல்:
க.அழகிரி (மகன்)
ஜேர்மனி.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்: 09.07.1924
மறைவு: 10.11.2004

10.11.2004 அன்று சிவபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து; எமது இல்லம் விரைந்து; எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து; இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசி, தந்தி மூலம் துயரத்தை பகிர்ந்து கொண்டோருக்கும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் கலந்த நன்றிகளை நவில்கிறோம்.

இன்று (10.12.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர்கள்,நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

## அமரர் தர்மலிங்கம் பரராஜசிங்கம்

(உரிமையாளர் : ஜவ்னா றேடர்ஸ், ஜவ்னா ஹாட்வெயர், சண் ஹாட்வெயர்)

27/7. இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். Tel:021 222 3205


# கடவுள் அனுபவத்துக்கு மனத்தூய்மை அவசியம்: சுவாமி யோகேஸ்வரானந்தாவின் அறிவுரை இது

**சுவாமி யோகேஸ்வரானந்தாஜி நாளை சனிக்கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார். யாழ். வரும் சுவாமி எதிர்வரும் 12ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் குடாநாட்டின் பல்வேறு இடங்களில் சத்சங்கம் மற்றும் விரிவுரைகளை நிகழ்ததவுள்ளார். சுவாமிகளின் வருகையை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

சுவாமி யோகேஸ்வரானந்தா 1940 ஆம் ஆண்டு கொழும்பு நகரத்தில் பிறந்தார். அவர் தமது ஆரம்பக் கல்வியை றோயல் கல்லூரியிலும், அதன் பின் சிறிது காலம் யாழ்ப்பாணக் கல்லூரியிலும், அக்குவானஸிலும் பயின்றார். அவரது தந்தையார் முத்துபாலசூரியர் மின்சாரத் திணைக்களத்தின் பொது முகாமையாளராகத் தலைமைப் பதவிவகித்தார்.

சுவாமிஜி அவர்கள் யோகர்சுவாமிகளுடைய வழிகாட்டலில் தமது 20 ஆவது வயதில் ஆத்மீக வாழ்வில் நாட்டம் கொண்டு துறவறத்தை நாடி இமாலயத்திற்குச் சென்றார். பன்னிரண்டு வருடங்களாக சமய சாஸ்திரங்களுக்கு முக்கிய கல்வி ஸ்தானமாக விளங்கும் கைலாஷ் ஆச்சிரமத்தில் பேரறிவு மிக்க சுவாமிகள் பலரிடம் ஆன்மீகக் கல்வி பயின்ற பின்னர், துறவு பூண்டு 1974 இல் சங்கர அத்வைத மடத்தில் தீட்சை பெற்றார். அவர் ரிஷிகேசம், உத்தரகாசி, கங்கோதரி போன்ற இடங்களை இருப்பிடமாகக் கொண்டுள்ளார். அவருக்கு மிக விருப்பமான வசிப்பிடம் 10 ஆயிரம் அடி உயரத்திலுள்ள கங்கோதரி மலைக குகை ஆகும். தற்போது உத்தர காசியில் ஓர் ஆச்சிரமம் அமைத்துள்ளார்.

1980 ஆம் ஆண்டு நீண்ட இடைவெளிக்குப் பின்னர் இலங்கைக்கு வந்து முதன் முறையாக சுவாமிகள் சமயம் பகவத்கீதை மற்றும் உபஷத சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அதன் பின்னர் அவர் இலங்கைக்கு மட்டுமல்லாது மேற்கு நாடுகளுக்கு விஜயம் செய்து அங்கெல்லாம் சமயத்தின் உலகளாவிய ஆன்மீக உண்மைகளைப் பரப்பிவருகிறார்; இந்த நாடுகளில் உண்மையைத் தேடும் மக்களுக்கு சமய விரிவுரைகளை ஆற்றிவருகிறார். இதில் ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, சுவிஸ் போன்ற நாடுகள் அடங்கும். அமெரிக்காவில்உள்ள பல சர்வகலாசாலைகளிலும் தேவாலயங்களிலும் சுவாமிஜி உரையாற்றியுள்ளார். மேலும் அவர் ஐக்கிய அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் தொலைக்காட்சி,



வானொலி, நேர்காணல் நிகழ்ச்சிகள் பலவற்றிலும் பங்கேற்றுள்ளார். தற்போது வருடம் தோறும் உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று ஆன்மீகப் பணியினை மேற்கொண்டு வருகின்றார்.

சுவாமிஜி, 'கடவுளை அடைவது இலட்சியம் அல்ல. கடவுள் நிலையை அடைவது தான் வாழ்வின் இலட்சியம்' என்று கூறுகின்றார். ஐந்து கோசங்களுக்குள்ளும் வியாபகமாய் இருப்பதுதான் கடவுள் தத்துவம். அதை உணர்ந்து அனுபவித்து நடப்பதுதான் வாழ்க்கையின் இலட்சியமாகும். கடவுள் தத்துவம் நான்தான் என்று அறியும்போது, நாம் ஆனந்த நிலையை அடைகிறோம் என்றும் கூறுவார். நாங்கள் உள்ளே பார்க்காமல் வெளியே பார்க்கின்றோம். கடவுளை வெளியில் பார்க்க முயற்சி செய்கின்றோம். ஆனால், அப்படிப் பார்க்க முடியாது. கடவுளை உள்ளே பார்ப்பதற்கு ஞானம் வேண்டும்.

பதி, பசு, பாசம் என்ற முப்பொருள் உண்மையைச் சைவ சித்தாந்தம் கூறுகின்றது. பாசத்தினால் மனிதன் மிருகமாகின்றான். பாசத்தை விட்டுவிட்டால், அதே மனிதன் பதியாக அதாவது, தானே சிவதத்துவம் என்பதை உணரமுடியும். சிவதத்துவம் நம் உளளே இருக்கின்றது. கடவுள் தத்துவத்தை எங்கே அனுபவிப்பது? உங்கள் மனமும் இதயமும் தான் அனுபவிக்கவேண்டும். ஆகையால் மனத்தையும் இதயத்தையும் பக்குவப்படுத்த வேண்டியது அவசியம்.

கடவுள் அனுபவம் பெறுவதற்கு தகுதி வேண்டும். அத்தகுதியைப் பெறுவதற்கு மனத்தைத் தூய்மைப்படுத்தவேண்டும். தற்போது மனம் வேறு எண்ணங்களில் ஆழ்ந்திருக்கின்றது. மனதில் உலக எண்ணங்களின் விருப்பு, வெறுப்புக்கள் உண்டு. இவை கடவுள் அனுபவத்திற்குத் தடையாக இருக்கின்றன. எனவே, மனத்தையும் இதயத்தையும் சுத்தம் செய்வதன் மூலம் கடவுள் அனுபவம் கிடைக்கும்.

சுவாமிஜி, கர்மயோகம் பற்றி மிகத் தெளிவாக பல இடங்களில் விளக்கியுள்ளார். கர்மங்களை கர்மயோகமாகச் செய்வதே மனிதனை புனிதமாக்கும் முக்கிய சாதனம் என்பதையும், கர்மத்தைச் செய்யும்போது விருப்பு வெறுப்புக்களைப் பாராமல் அவற்றை கடமை என்று சமத்துவ புத்தியுடன் செய்வதை சுவாமிஜி வலியுறுத்துகின்றார். எந்தெந்தக் கர்மங்கள் உன்னுடையவை என்பதை ஒருவருக்கு அவரின் மனச்சாட்சி சொல்லும்.அந்தக் கடமைகளை விருப்பு வெறுப்பின்றி அன்புடனும் மகிழ்வுடனும் செய்யவேண்டும். அப்படிச் செய்வது தான் உண்மையான கர்மயோகமாகும்.

எனவே, உலகில் வாழும் மனிதன் முதற்படியாக தார்மீக சீவியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். அதனால் புண்ணியம் கிட்டும். புண்ணியம் வளரப் பாவம் குறையும். பாவம் குறைய மனம் தூய்மையாகும். தூய்மை அதிகரிக்க தெளிவு ஏற்படும். தூய்மையும் தெளிவும் அமைய விவேகமும் வைராக்கியமும் வந்தடையும் இவற்றினால் உலகப்பற்று அகன்று கடவுள் அன்பு வளரும். படிப்படியாக ஞானம் பிறக்கும். ஞானம் பிறந்ததும் மனிதன் ஞானி ஆவான். கடவுள் நிலையை அடைவதுதான் வாழ்வில் இலட்சியமாகும். கடவுள் நிலைதான் கடவுள் தத்துவம் அல்லது சிவதத்துவம் என்கிறோம். கடவுள் தத்துவம் நான்தான் என்ற அறிவே ஞானமாகும்.

இன்றைய கல்வி, அறிவை மட்டும் வழங்குவதோடு நின்றுவிட்டது. அறிவின் மூலம் ஆக்கபூர்வமான செயல்களைச் செய்வது எப்படி என்பதனை இளைஞர்களுக்கு கூறத் தவறிவிட்டது. இளம்தலைமுறையினரிடம் பல்வேறு ஆற்றல்கள் நிறைந்திருந்த போதிலும் சமூகத்திற்கான பங்களிப்பு குறைவாகவே இருக்கின்றது. அவர்கள் சமூகத்தை ஆளுமைப்படுத்திக் கொள்ள வேண்டும். சமூகத் தொணடிலும் ஆன்மீகப் பணியிலும் முழுஅர்ப்பணிப்போடு பணியாற்றக் கூடிய இளம் தலைவர்கள் தேவைப்படுகின்றார்கள ஏன்? இன்று பல அபிவிருத்திப் பணிகளிலும் கூட இளந்தலை முறைகளின் பங்களிப்பு தேவைப்படுகிறது. இவற்றிற்கு எல்லாம் அடிப்படையாக எமது மனப்பாங்கில் (attitudinal change) மாற்றம் ஏற்பட வேண்டும். இதுதான் உண்மையான அபிவிருத்திப் பாதையில் எம்மையும் நாட்டையும் இட்டுச்செல்லும். சமயம் இன்று வெறும் பக்தியைத் தோற்றுவிக்கிறதே அல்லாமல் பக்தியின் இலக்கு எது என்பதை தெளிவாகக் கூறவில்லை.

உண்மையான பக்தன் யார் என்பதை சுவாமிஜி பகவத்கீதையின் 12ஆம் அத்தியாயத்திற்கு கொடுத்திருக்கும் விளக்கத்தில் தெளிவாகக் கூறியிருக்கிறார். விஞ்ஞானத்தை மட்டும் முழுமையாக நம்பி ஆன்மீகததை அடியோடு புறக்கணிப்பது தவறு. விஞ்ஞானம் நம்முடைய அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்து விடும். ஆன்மீகத்திற்கு இனிவேலையில்லை என்று எண்ணினோம். ஆனால், இன்று விஞ்ஞானமும் ஆன்மீகமும் இணைந்தாலொழிய மனித சமுதாயத்திற்கு வேறுமார்க்கம் இல்லை என்பதனைப் பல அறிஞர்கள் கூறிவருகிறார்கள்.

சுவாமிஜியின் அறிவுசார்ந்த போதனைகள் இன்றைய காலகட்டத்தில் எமது மனச்சோர்வை அகற்றும் எப்படி தனது தர்மத்தை பற்றிய குழம்பிய மனமுடையவனான அர்ஜுனன் தர்மம் எது?, அதர்மம் எது?, செய்யவேண்டியது எது?, செய்யத்தகாதது என்ன? என்கின்ற கேள்விகளுக்கு சரியான முடிவு எடுக்கமுடியாமல் பாரத யுத்தத்தின் மத்தியில் இருந்தானோ அது போன்றதே எமது நிலையும். எனவே, இன்றையநிலையில் நாம் கர்மயோகத்தின் அடிப்படை அம்சங்களை நன்கு புரிந்து வாழ்க்கையை வாழப்பழக வேண்டும். சுவாமிஜி தமது "ஞானத்தின் செயறபாடு" (Wisdom in Action) போன்ற நூல்களில இக்கருத்துக்களை நன்கு விளக்கியுள்ளார்கள். இவை இன்றைய இளஞ்சந்ததியினர் தமது ஆளுமையை விருத்திசெய்வதோடு சமூகத்தற்கு பயனுள்ள வகையில் தம்மை நெறிப்படுத்தவும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. ※

**க.சிவலிங்கம்**
ஓய்வுபெற்ற பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்
வடக்கு - கிழக்கு மாகாணசபை
திருகோணமலை.

# வினைகளை வேரறுக்கும் விநாயகர் விரதம்

**இப்போது நடைபெற்றுவரும் பிள்ளையார் பெருங்கதைப் படிப்பை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**சைவ** ஆலயங்களில் "பிள்ளையார்கதை" எனும் பெருங்கதைப் படிப்பு இப்போது நடைபெற்று வருகின்றது. விநாயகப் பெருமான் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருந்து அருள்புரியும் தலங்களில் இந்தப் பெருங்கதைப் படிப்பு நடைபெறுவது வழமை.

### விரத மகிமை

விநாயகப் பெருமானின் தோற்றத்தையும் அவர் செய்த அற்புதமான நிகழ்வுகளையும் அதன் விளைவுகளையும் துலக்கமாகக் கூறுகின்ற இந்தப் பிள்ளையார் பெருங்கதைப படிப்பு இருபத்தொருநாள்கள் நடைபெறும். தனக்கு மேல் வேறு தலைவன் இல்லாத காரணத்தால் விநாயகன் என்றும், கணங்களுக்கெல்லாம் ஈசனாகவும் தலைவனாகவும் விளங்குகின்ற தன்மையால் கணேசன் என்றும், கணபதி என்றும் பல்வேறு நாமங்களைக் கொண்டு திருவருள் புரிகின்ற பிள்ளையாரைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் இந்த விரதம் சைவமக்களால் பெரிதும் விரும்பி நோற்கப்படுகின்றது.

### விநாயகர் பெருமை

மனித வாழ்வில் ஏற்படுகின்ற துன்பங்களிலிருந்தும் கஷ்டங்களிலிருந்தும் நம்மைக் காப்பாற்றுகின்றவர் இந்த விநாயகரே என்ற நம்பிக்கையோடு தும்பிக்கையானை வழிபடுகின்ற அடியார்கள் அனைவரையும் ஒரு விக்கினமும் வந்தடையாமல் தடுத்தாட்கொள்பவர் ஸ்ரீ விக்கினேஸ்வரப் பெருமான்.

*"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்*
*மாமலராள்*
*நோக்குண்டாம் மேனிநுடங்காது-பூக் கொண்டு*
*துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்*
*தப்பாமற் சார்வார் தமக்கு"*

என்ற ஔவையார் திருவாக்குப்படி இந்த விநாயகப் பெருமானை வழிபட்டால் சகல செல்வங்களும் கைவரப் பெற்று நல்ல சௌபாக்கியங்களுடன் வாழலாம் என்பது நாடறிந்த உண்மை.

மூக்ஷிக வாகனன், மோதகப் பிரியன், கரிமுகன், ஆனைமுகத்தோன், பானை வயிற்றோன், ஐங்கரன், தும்பிமுகன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்ற இந்தப் பிள்ளையார் ஆற்றங்கரை ஓரத்திலும், அரசமரம், ஆலமரம், மருதமரம் முதலான மரநிழல்களிலும் குளக்கரைகளிலும் வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களை நீக்கியருள்கின்றார்.

### அனுஷ்டிக்கும் முறை

இந்த விரதத்தை அனுஷ்டிப்பவர்கள் தினமும் ஸ்நானஞ் செய்து சந்தியாவந்தனம் முடித்து ஆலயதரிசனஞ் செய்து பிள்ளையார் கதையைப் படித்தோ, கேட்டோ அல்லது விநாயகருக்குரிய பூஜை, ஆராதனை வழிபாடுகளில் கலந்துகொள்ளுதலோ வேண்டும். அது முடியாதவர்கள் வீட்டில் இருந்தபடியே சுவாமி அறையில் விநாயகரின் பாசுரங்களைப் பாராயணஞ் செய்தும் விரதம் அனுஷ்டிக்கலாம்.

இருப்பத்தொருநாளும் இருபத்தொரு விதமான நெய்வேத்தியம் படைத்து விநாயக வழிபாடு முடித்து ஒரு பொழுது உண்ணுதல் வேண்டும். இந்த 21 நாளும் கேளிக்கைகளிலோ அல்லது வேறு விளையாட்டுக்களிலோ, விழாக்களிலோ ஈடுபடுதல் தவிர்க்கப் படவேண்டும். எப்போதும் புனிதமாக இருந்து நல்ல நூல்களைப் படித்து, புராணபடனங்க

## ஞானக்கதிர்

ளைக் கேட்டு தேவார பாராயணஞ் செய்து பொழுதைக் கழிக்கவேண்டும். இருபத்தோராம் நாள் உபவாசமிருந்து விநாயகர் கதை கேட்டு மாலை 6.00 மணிக்குப் பின்பு பால், பழம் அருந்தி மறுநாள் காலை பாறணை முடிக்கலாம். இது தொன்றுதொட்டு நிலவி வருகின்ற ஒரு மரபு.

### விரத பலன்

விநாயகப் பெருமானின் பெருங்கருணையைப் பெறவேண்டுமாயின் திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் பீடும் பெருக்குகின்ற விரதமாகிய இப்பெருங்கதை விரதத்தை அனுஷ்டித்தல் வேண்டும்.

பிள்ளையார் ஏகதந்தராயிருப்பது பரஞானபதி தாமே என்பதை உணர்த்துவதற்காகவேயாம். மூன்று திருக்கண்கள் சூரியன், சந்திரன், அக்கினி என்னும் முச்சுடர்களையும் நிலைகளமாய் நின்று செலுத்துகின்றவர் தாம் என்பதையும் இரு செவிகள் எல்லாம் அறிவும் எல்லாவல்லமையும் உடையவர் தாமென்பதையும் திருவடிகள் ஞானசக்தி, கிரியாசக்தியையும் குறிப்பதாகும். கஜமுகனைச் சங்காரஞ் செய்வதற்காக முறித்த ஒரு கொம்பை ஏந்தியிருப்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் நீக்குபவர் தாமென்பதையும் விளக்குவதற்காகும்.

விக்கினந் தீர்க்கின்ற விநாயகப் பெருமான் சர்வ வல்லமையும் படைத்தவர். அவரை வணங்கினால் நமது பாவந்தொலையும். கர்மவினை நீங்கும். துன்பங்கள் யாவும் வேரோடு களையப்பட்டுவிடும். ஆதலால் சைவமக்கள் அனைவரும் எந்தக் காரியந்தொடங்கினாலும் முதலில் பிள்ளையாரை வணங்கியே கருமங்களைத் தொடங்குவார்கள்.

தும்பிக்கைகொண்ட விநாயகப் பெருமான் மீது இடையறாத பக்தி பூண்டு நம்பிக்கையோடு வழிபட்டால் நிச்சயம் நமது பிரச்சினைகள் தீர்ந்து சந்தோஷமாக வாழலாம்.

*விநாயகனே வெவ்வினையை வேரறுக்க*
*வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான்*
*விநாயகனே*
*விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந்*
*தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து*

என்ற பாடலுக்கேற்ப நாம் விநாயகப் பெருமானைப் பக்தியோடு வலம் வந்து சிரசிலே குட்டி, தோப்புக்கரணமிட்டு உள்ளன்போடு வழிபட்டு சகலசௌபாக்கியங்களும் கைவரப்பெற்று சதுர்வித பல புருஷார்த்தங்களையும் அடைந்து வாழ்வில் வெற்றியை அடைவோமாக. ☆

சிவநெறிக் கலாநிதி
**இராசையா ஸ்ரீதரன்**

# தெய்வீக ஸ்தலங்களில்..



**யாழ். வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்துக்கென அண்மையில் புதிய கைலாயவாகனம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. வாகனத்தில் விநாயகப்பெருமான் வீதியுலா வந்த போது எடுக்கப்பட்ட படம். (எ)**



**கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு கனடாவில் உள்ள முருகன் ஆலயம் ஒன்றில் அடியவர்கள் காவடி எடுத்து நேர்த்திக்கடனை நிறைவு செய்த போது எடுக்கப்பட்ட படம்.**

# FELICITATION TO Dr.(Mi

## (Principal- Uduvil Girl

# ON THE EVE OF HER RETIREME

## We remember with thanks her ministry...



Dr.Miss C.V.Selliah is now relinquishing her position as Principal of the oldest Girls Boarding School in Asia. She has been the Principal for twenty three years.

Through all its 180 years of history Uduvil has been fortunate in that, it always had Principals whose commitment was unquestionably total and absolute. The number of Principals who served here is remarkably small considering the length of its history. Fortunately though, the quality and calibre of those few women beginning with Mrs.Harriet Winslow are exceptionally high.

As Miss Selliah lays down her office we remember with thanks her ministry as well as the ministry of her predecessors both national and missionary.

She joined the staff of Uduvil and continued her academic pursuits until she completed her PhD. Her M.A. is from the most prestigious University in the United states of America, but her love for Tamil language and Literature led her to do her PhD in Tamil at the University of Jaffna.

In fact she makes history as the first Principal of this institution holding a PhD.

Her duties were numerous and problematic but she performed with courage, wisdom, fortitude and above all with joy, which was the secret of her efficient administration.

On behalf of all the many old girls of Uduvil, staff and friends of Uduvil both past and present, I wish her all the joy, rest and peace of retired life - but as a friend, I would also hope that her life and time will continue to be active and productive in the service of the church and community.

**Rt.Rev.Dr.S.Jebanesan**
*Bishop : in Jaffna, Church of South India.*

## Uduvil's Seventh Principal...



The overall sentiment that dominates this moment in the history of Uduvil, is a feeling of gratitude to God for the many fruit ful years of service by Dr.C.V.Selliah at Uduvil. We have seen Uduvil bestowed with the riches of a faithful and loyal staff and - in the words of Rt. Rev.Dr.S.Kulandran, the first Bishop of the JDCSI "A Shining roll of Principals in its history. It is not a long roll but everyone in it was a great woman and has done much for the school".

Today we bid farewell to another of these great women who has steered Uduvil through a turbulent period and like her predecessors risen to face the challenges of her time. Dr.Selliah's task has been to courageously uphold the traditions of the school while also absorbing the changes happening outside, for the betterment of the generation of students under Uduvil's care. The call for service is about commitment of a life time - a commitment that remains the cusp of the different phases of our lives. Dr.Selliah now moves on to yet another phase of her life. May she continue to be a blessing to many.

**Shiranee Mills**
***Principal, Designate.***



1 . First Appointment - 10.06.1959.
2 . Year of Graduation - 1960 B.A.(Lond.).
3 . Post Graduate Studies - 1964-1965 M.Ed. -
4 . Advanced Administrative Certificate in Educa

5 . Ph.D. - 1995 University of Jaffna.

## வாழ்த்



'அன்பு நாண் ஒப்புரவு கண்ணோ
ஐந்து சால்பு ஊன்றிய தூண்'

என்ற குறட்பாவுக்கு ஏற்ப சான்றோர் வரிசையில்
அவர்கள். இந்த அம்மையாரின் உடுவில் மகளி
அவதானித்துள்ளேன். சொல்லும் செயலும் ஒன்ற
ஒப்படைத்த மாணவரை அறிவினால் புடமிட்டு ஒ
உடுவில் மகளிர் கல்லூரியின் உயர்ச்சி வியக்கத்தக்கது. க
பண்பாட்டுத்துறையிலும் உயர்வுகாணும் கல்லூரி இது. இ
சிறப்புக்கொண்டவர்கள்.கல்விப் பகுதி நடத்துகின்ற எந்தப் போட்டி
கட்டுப்பாடும் கொண்டவர்கள். இவற்றையெல்லாம் செல்வி செல்லை
என்றால் அதில் மிகையொன்றுமில்லை.

'பெருமைக்கும் ஏனைச் சிறு
கருமமே கட்டளைக்கல்'

என்பதைக் கற்றறிந்த எல்லோரும் எண்ணிப்பார்க்கவேண்
னிற் பெண்கள் நடத்த வந்தோம்' என்று பாடிய சுப்பிரமணியபா
பிக்கப்படுகின்றது. அம்மையாரின் ஓய்வுக்காலம் அருட்தாகத்தை
யாக விளங்க இறையருள் வழிகாட்டும் என்று வாழ்த்தி அ

## Her contribution n

My memories go back to 1982 when a young la
determined and courageous administrator of a lead
Miss C.V.Selliah made her Alma Mater, Jaffna College
and fearless person to become the Principal of such
North, the school which is also named the first boa
know that from the time she assumed duties at Uduvi
upholding high standards and traditions which are
and extra-curricular activities. Unfortunately durin
progress was stressful for most of the schools in t
Selliah held the reigns and braved through with
former Principal had to brave a war with all its dang
did in the 1990s, but it only made her stronger. Thu
life of the girls. Miss. Selliah's innate qualities of in
stance made her an asset to Uduvil in matters o
progress in the academic sector. I am sure almost t
her as a person who has produced so many illus
limited within the school environment only, but v
well. In the Jaffna Diocese of the Church of South I
in numerous committees and boards contributing
Principalship, she pursued higher studies and w
acknowledge her as an exemplary scholar. It is the
praise to God on behalf of the students, members of
by Miss. Selliah to Uduvil and to the Diocese as a
Uduvil will continue to be the beacon light to man

## நல்லதிபர்க்கு ஒரு வாழ்த்துச் செய்தி



எமது உடுவில் கல்விக்கோட்ட பாடசாலைகளுள் உடுவில் பெண்கள் கல்லூரி, நீண்ட பழம் பாரம்பரியமுடையதும், இக்கல்லூரியினை உருவாக்கிய அமெரிக்க மிஷனரிமார்கள் செய்த அருஞ்சேவையை எடுத்துக்கூறும் நிலைக்களனாகவும், 180 ஆண்டு அகவையினை நிறைவுசெய்து முதல்நிலைக் கல்லூரியாக மிளிர்கின்ற பெண்கள் கல்லூரி இதுவென கூறுவது மிகையாகாது. இக்கல்லூரியினை நல்லமுறையிலே வழிநடத்திச் சென்று ஓய்வுபெறும் நல்லதிபர் கலாநிதி செல்லையா அம்மையார் ஆற்றிய தன்னலமற்ற, தியாக மனப்பான்மை கொண்ட சேவையும் பாடசாலையின் நிர்வாகசேவையிலிருந்து இறைவன் தொண்டுபுரிந்த அதிபர் என்று கூறுவதில் பெருமிதம் அடைகின்றோம். அவருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு.செ.குபேரநாதன், கோட்டக்கல்விப்பணிப்பாளர், உடுவில்.**

## She led a disciplined life with Christian values and ideals...



I consider myself to be very fortunate to send this message of felicitation to a retiring dynamic Principal who I believe is a born Principal taking after her father the late K.A.Selliah who was Principal of Jaffna College for nearly 20 years.

Born to virtuous parents, she led a disciplined life with Christian values and ideals. Having been in the noble profession of teaching for a considerable length of time, she took over the Principalship at Uduvil Girls' College and steered the school admirably with courage, perseverance and dedication during the most traumatic period. The love honour and respect she commands from both the young and the old is ample testimony to her devotion and the self sacrificing service she has rendered. She believed in perfection and achieved perfection through discipline and systematic work. Although she had all possible chances and assistance to emigrate and seek greener pastures, her love for the land and the thirst to mould young ones, forbade her from any temptations. Nevertheless she has traveled the world in her career as an educationist as well as on holiday and used these experiences profitably at school. It is my earnest wish and prayer that her talents be profitably used by the churches and Educationists towards greater glory of our nation. My prayers for her good health and happiness in her retired life.

**Ven.S.P.Nesakumar**
***Archdeacon of Jaffna, Church of Ceylon.***

## Exemplary life and dedication to duty



I consider it a privilege to be able to send this congratulatory message to Uduvil Girls' College in appreciation of the unique contribution it has made towards the cause of education, particularly through its Principal Dr. (Miss) Selliah. I have known Dr.Selliah for the past 10 years. I found her to be wedded to Uduvil Girls' College. She put her heart and soul to ensure Uduvil Girls' College enjoys its pristine place as a renowned, Institution dedicated to the education of young girls in Sri Lanka. She was a highly respected task master with a difference. She was able to command because she led an exemplary life of total dedication to duty and responsibility. She demanded a standard of excellence in all that she did and inspired the students to the same. Apart from the examination results, this striving for excellence was best manifested in the victories her school enjoyed in extra curricular activities such as sports, dramatic and other competitions. I am sure she will continue to serve the cause of integral education of our students even after she leaves Uduvil Girls' College. May God bless her and keep her in his love.

**Rev.Dr.Michael A.P.R.Savundranayagam,** ***St. Mary's Cathedral, Jaffna.***

## She was an excel



I came to know Dr. C.V. Selliah from he
the first National Principal of Jaffna C
became the Principal of Uduvil Girls'
1982. Ever since her commencement of
due to the uncertain situation in the
Selliah in most of the Diocesan meetings during m
She always sees to it that matters take a very sm
Diocese is commendable. She kept up the moral
Diocese. She is an expert on entertaining and hos
have all our Diocesan lunches and dinners. She m
always shining by her untiring, dedicated and fait
I take this opportunity of thanking her for all the
Diocese and wish her a happy retired life. Let yo
eyes of God and may you continue to be useful i

(C-39724)

# (Miss) C.V.SELLIAH, J.P.

## l Girls' College)

# EMENT ON 31st DECEMBER 2004



959.
.A.(Lond.).
1965 M.Ed. - University of North Carolina U.S.A.
icate in Education (A.C.E.) - 1975-1976
Oxford University.
ffna.

## ாழ்த்துரை

ுரவு கண்ணோட்டம் வாய்மையோடு
றிய தூண்'

றோர் வரிசையில் வைத்து எண்ணப்படத் தக்கவர் செல்வி செல்லையா
ா உடுவில் மகளிர் கல்லூரி நிர்வாகத்தை நான் பல தடவைகளில்
ம் செயலும் ஒன்றுபட்ட நிலையில் பணிபுரிந்து வந்தவர் இவர். தம்மிடம்
னால் புடமிட்டு ஒளிபெறச் செய்தவர் இவர். அம்மை யாரின் காலத்தில்
ியக்கத்தக்கது. கலைத் துறையிலும், விளையாட்டுத் துறையிலும்,
ல்லூரி இது. இங்கு கல்வி பயிலும் பிள்ளைகள் தனித்துவ மான
ற எந்தப் போட்டியிலும் முன்னிடம் வகிப்பவர்கள். அமைதியும் ஒழுங்கும்
ம் செல்வி செல்லையா அம்மை யாரின் ஆளுமையினால் அமைந்தது

ும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
டளைக்கல்'

ிப்பார்க்கவேண்டும். 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரி
சுப்பிரமணியபாரதியாரின் வாக்கு இக்கல்லூரிப் பணியினால் மெய்ப்
அருட்தாகத்தை மேலும் ஏற்படுத்தி இந்த மண்ணில் திருவருட் செல்வி
று வாழ்த்தி அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி J.P.,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

## on not limited...



a young lady of the time, became a
ator of a leading Girls' school in Jaffna.
ffna College proud by being an excellent
cipal of such a prestigious school in the
the first boarding girls school in Asia. I
ties at Uduvil it has been in the limelight
ns which are evident in all its achievements in education
nately during the ethnic conflict in the 80s and 90s the
schools in the North, but it was very creditable, Miss.
hrough with endurance and perseverance. Perhaps no
all its dangers, damages and disruptions as Miss.Selliah
tronger. Thus she made Uduvil shine in all aspects in the
ualities of initiative, diplomacy, leadership and fearless
n matters of administration and discipline, and in the
ure almost two generations of past pupils will remember
many illustrious daughters. Her contribution was not
only, but was evident vastly in the diocesan circle as
h of South India she held many key - positions and was
ontributing her services immensely. While holding the
dies and was awarded a PhD. Thus we reflect on and
olar. It is therefore right and just to give due thanks and
members of the staff and myself for the services rendered
ocese as a whole. It is our prayerful wish and hope that
ght to many more generations of students in the North.

**Noel A.Vimalendran**
*Principal ,Jaffna College,Vaddukoddai.*

## excellent administrator...

ah from her school days at Jaffna College. Her father was
of Jaffna College. She followed her father's footsteps and
uvil Girls' College, the sister College of Jaffna College in
ncement of principalship it had been a period of turbulence
ion in the country, the ethnic war. I have sat with Miss.
s during my tenure of office as the treasurer of the Diocese.
a very smooth path. Her contribution to the work of the
the morale of Uduvil high and earned good fame for the
ng and hosting people. Uduvil is a place where we usually
ers. She made Uduvil Girls' College a jewel of the Diocese
d and faithful services. She was an excellent administrator.
or all the support given to me when I was Treasurer of the
ife. Let your services be acknowledged abundantly in the
e useful in the upliftment of our society at large.

**Mr.C.Jeyaratnam,**
*Manager, Uduvil Girls' College.*

## Innovative and pioneering in her career...



It is with great pleasure that I send my greetings to Dr.(Miss) C.V.Selliah, Principal, Uduvil Girls' College.

Uduvil Girls' College has played an important role in the lives of generations of girls. Her alumnae adorn almost every walk of life in the homeland and overseas as well. The missionaries and their successors worked with a great deal of earnestness. Under their care the school grew from strength to strength on the firm foundations thus laid. Today, Uduvil Girls' College holds the prestigious position of being one of the best girls' Colleges in the Island. Dr.(Miss) Selliah has been innovative, forward looking and pioneering in her career. She showed much enthusiasm in developing pupils' knowledge through curriculum, and strongly believed that their creative talents could be awakened through aesthetic studies. She has contributed immensely to the creation of purposeful, sound - minded and resourceful citizens for the future society. She was an example and a model not only to principals but also teachers and students.

I take this opportunity to thank Dr.Selliah, the architect of modern Uduvil Girls' College for rendering dedicated service to uplift the womanhood of the Jaffna peninsula.I appreciate very much the elaborate arrangements being made by the staff, students, past pupils and well wishers of Uduvil Girls' College to celebrate this important event. In conclusion, let me wish the principal on the eve of her retirement, good health, peace and prosperity.

**Mrs. Regina Iruthayanathan**
***Zonal Director of Education***

## அதிபர் வாழி!



அதிபர் செல்வி கலா நிதி C.V.செல்லையா தனது வாழ்வை இக் கல்லூரி யின் வளர்ச்சிக்காக அர்ப் பணித்திருந்தார். அத்தோடு . இக் கல் லூரியை தமது இதயமாகக் கருதியவர். பரந்த அறிவும், பல்வகை ஆற்றல்களும், தலை மைத் துவத்தின் சிறந்த ஆளுமையும், இறை வன் இவ ருக்கு அளித்தகொடைகள் . **'She is a Perfectionist'** எதைச்செய்தாலும் பூர ணத்துவம் நிறைந்ததாகச் செய்யும் ஆற்றல் உடையவர். கடந்த 23 ஆண்டுகளில் உடுவில் மகளிர் பாட சாலை மாணவி கள் கோட்ட வலய மட்டத்திலும் தேசியமட்டத்திலும் பெற்ற வெற்றி கள் இதற் குச் சான்றாகும். அதிபர் செல்வி கலா நிதி **C.V.** செல்லையா உடுவில் திருச்சபையின் வளர்ச் சியிலும் பல வகைகளில் பணியாற்றியுள் ளார். திருச் சபைக் குடும்பத்தில் உடுவில் மகளிர் கல்லூரி ஒருபகுதி என்பதை அடிக்கடி வலியு றுத்தி வருபவர். எமது அன் புக்கும்,பண்புக்கும் அதிபர் செல்வி கலாநிதி **C.V.** செல்லையா உரியவர் ஆவார். கல்வியிலும், விளையாட்டி லும், மற்றும் துறைகளிலும் கல்லூரி விரிவாக் கத்திலும் அதி பர் பணியாற்றி வந்தார். இவ ரின் அயராத உழைப்பை எடுத்தியம் பிக்கொண்டிருப்பது கல்லூரியில் இவர் கட்டி யெழுப்பிய **'Harriet Winslow Memorial Science Complex'** ஆகும். இவ ரின் பணி நிறைவு பெற்றாலும் இவரது மூச்செல் லாம் உடுவில் மகளிர் கல்லூரியாகவே இருக் கும் என்பதில் ஐயமில்லை. எமது அன்பான ஆண்டவர் தொடர்ந்து நற்சுகமும் அமைதியும் மகிழ்ச்சியும் இவருக்கு அருளி நல்லாசிகள் பலவும் பொழிய வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

அருட்திரு.**S.C.**ஆனல்ட்
காரியதரிசி, யாழ் .தென்னிந்திய திருச்சபை.

## She has given of her best to the school.......



I have known Chelvi Selliah from her childhood and have watched her growing up from youth to adulthood, taking up responsible positions in the Jaffna Diocese of the Church of South India. It was with great happiness and expectation that my husband, the late Rt. Rev. Dr.D.J.Ambalavanar and I saw her being installed as Principal of Uduvil Girls' College in 1982. As a Diocesan School, Uduvil found a special place in our hearts. We followed its progress closely and rejoiced with Uduvil when during Dr.Selliah's time Uduvil won many accolades in the academic field as well as sports and cultural activities. A greater part of Dr.Selliah's life has been in Uduvil as teacher, vice - Principal and then as Principal and in the great tradition of the Principals before her, she has given all her time and of her best to the school. She chose to remain in Jaffna when the rest of her family left the Island and later through difficult times. Like her father Mr.K.A. Selliah,former principal of Jaffna college she served the school with total dedication and commitment.

I wish her well in her retirement and hope that she will continue to be of service to the Jaffna community.

**Dr.C.Ambalavanar**
*Medical Superintendent*
*Green Memorial Hospital, Manipay*

## You have been a faithful servant to God's Command...



It is quite extraordinary how God works things out for good in our lives. I would never have thought there was least possibility that I would spend the last years of my professional teaching with you, one of my very first playmates, yet, that is what has happened. Living with you here in the mission house at Uduvil Girls' College and teaching English and western singing under your leadership has been a joyful and most meaningful experience for me in the 4 years that I have been teaching I have never enjoyed teaching more then I have here, particularly singing with the primary school children.

I am happy that I can be here to help you celebrate your more than 40 years of faithful service to Uduvil Girls' College, 23 of those as Principal. The School has been through some very difficult and trying times during your tenure but you kept it together when it seemed impossible to keep it running, and you have built it up so that now it is larger than ever before. Your students excel in all areas of the academics, arts and sports and that is largely because of your personal interest, supervision, and the loyal service your teachers give you. You have encouraged your students to try to achieve to the best of their ability and along the way you have instilled into them the Christian ethic that gives their lives depth and purpose, and teaches them to give themselves to others and the community.

This is particularly true with the children who make UGC their home, that is the hostellers. You have watched over their mental and physical health in addition to everything else as a loving mother would. Many of your former students return to you over the years as they would return to their families, to tell you of their successes and to ask for your wisdom in dealing with the problems that are a part of everyone's life. Many of your students and staff have also been married from your home, the Mission House. You have indeed been a mother to your girls and they will always love and honor you for that. I am sure that they will beat a path to your new home, in Vaddukoddai or wherever else your future life may lead you.

Love and Best wishes

**Grace Bunker**
*Missionary.*

## வாழ்த்துகின்றேன் நான்!

உண்ணும் சோறும், பருகும் நீரும்
சுவாசிக்கும் காற்றும்
உடுவில் மகளிர் கல்லூரியே என
உலவிய உங்கள் உளத்தினை உணர்வேன்;
கள்ளம் கபடம் சிறிதுமில்லாமல்
உள்ளம் வெள்ளைப் பொலிவொடு திகழ
மெள்ளச் சிரிக்கும் மேன்மையை அறிவேன்,
பூவில் தேனீ தேன் எடுப்பதுபோல்
அறிவினைத் தேட அடைவதே இலக்காய்;
பறந்து திரிந்து பழப்பதைக் கண்டேன்
வறியரென்றும் செல்வர்களென்றும்
பேதம்பாரா விதத்தினில்
நல்ல உறுதியாய் இருந்து உழைத்தமை,
உங்கள் குடும்பச் சொத்து,

அதிபரின் மகளாய் அதிபரின் மனையில்
பிறந்து வளர்ந்து தவழ்ந்தமையாலே
ஆளுமை உங்கள் பரம்பரைச் சொத்து,
கடமை உணர்வு கட்டியம் கூற
அரசாய் இருந்த அதிபர் நீங்கள்
பகைமையைக் கூடப் பரிவொடு பார்த்துப்
பண்பினால் வெல்லும்
பான்மையைக் கண்டேன்
நட்பினைப் பிணைக்கும் அன்புச் சங்கிலி
உங்கள் கரங்களில்
நிரந்தரம் இருக்கும்.
இடதுகை அறியா வகையினில்
உங்கள்
வலதுகை கொடுக்கும்

வாழ்வியல் அறிவேன்.
கண்ணுக்கினிய பூங்கா வளர்த்து
வண்ணப் பூக்களின் வழவினை
இரசித்து,
எண்ண அலைகளிற் சிறகழக்கின்றதை
உண்மையாய்க் கண்டு உவக்குமென் நெஞ்சு,
மிஷனரிமாரின் கனவுகள்
நனவுகளாகி நின்று நிலைக்க
அர்ப்பணிப்புடனே அரும்பணியாற்றிய
அற்புத அதிபர் நீங்கள்
கல்வியால் உலகை வெல்லலாம் என்ற
தத்துவத்துக்கோர் புத்தகம் நீங்கள்
[illegible]றா உழைப்பு, குறையா ஊக்கம்
நன்றே நினைக்கும் நல்ல மனசு



என்றும் உங்கள்
கைவசம்.
இருண்டவானில்,
ஆழ்கடல் நடுவே
திசை தெரியாது தவித்த
கப்பல்கள்
கரையினிற் சேர
ஒளிதந்துதவிய கலங்கரை விளக்கு;
அதிபர் வரிசையியில் ஓர் அற்புதப்பிறவி;
இதனால் நீங்கள்
நற்சுகத்துடனே வாழியவென்று
வாழ்த்துகின்றேன் நான்.

கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
தமிழ்த்துறை, யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

# சேவைநலன் பாராட்டு



திருமதி
**விஜயலட்சுமி கணேசராஜா**
(B.A.Dip in Edu S.L.T.S.-I)
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
எமது கல்லூரியின் தமிழாசிரியராக 28 வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெறும் இவரது ஓய்வுக்காலம் பல வழிகளிலும் சிறப்புற்று விளங்க வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.
(39434)(39-16-19-26)


# aat & CAT

June 2005 பரீட்சைக்குரிய விரிவுரைகள் 12-12-2004 ஞாயிறு காலை 11.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. விரிவுரைகள் English Medium இல் மட்டும் நடைபெறும். பரீட்சைக்குரிய முறையில் Special English Lectures நடத்தப்படும்.

Office Time: Sat. & Sun.
9.00 a.m.- 3.00 p.m.
**CAREER COM INSTITUTE**
NO: 79, Main Street, Jaffna.
(39-16-19-26) (சி-39766)

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 06 - 1949



மறைவு 10 - 12 - 1999

அமரர்
**சின்னத்தம்பி இராசலிங்கம்**
(பூச்சி)

ஆண்டுகள் ஐந்து ஆனாலும் ஆறவில்லை எம்மனது
என்றுமே இன்சொல்பேசி எம்முடன் வாழ்ந்திட்டீர்
அன்புக்கும் பண்புக்கும் இலக்கணமாய் வாழ்ந்திருந்தீர்
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும் உமது அன்புருவம்
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது!

ஆறுகால்மடம்,
பாடசாலை வீதி,
ஆனைக்கோட்டை.
- குடும்பத்தினர்.
(39393)(39-16-19-26)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம!

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 25 – 12 – 1953



மறைவு 10 – 11 – 2004

**திருமதி குகதாசன் கமலினி**
திதி: திரயோதசி

எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
விழியோரம் கண்ணீர் காயவில்லை!
ஆனதம்மா முப்பத்தியொரு நாள்கள்
ஆறுதலுக்கு ஆயிரம் பேர் கூறவிருந்தாலும்
"கிளி" என்று அழைக்க யாருமில்லையே!

எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் எங்கிருந்தாலும் எம்முடன் தொலைபேசி, தபால் அட்டைகள் மூலம் துயரம் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் பலவழிகளில் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று (10.12.2004) வெள்ளிக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அம்பலவாணர் வீதி,
காளிகோயிலடி, உடுவில், சுன்னாகம்.
T.P.077-6544558
(39418)(39-16-19-26)

தகவல்:
**த.குகதாசன்** (கணவர்),
**த.தங்கம்மா** (மாமி).

## விவசாயிகளுக்கு பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி,டிசெ.10

தென்மராட்சிப் பிரதேச விவசாயிகளுக்கான பயிற்சி வகுப்புக்கள் எதிர்வரும் 17ஆம், 18ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

கைதடி கமநலசேவைகள் நிலையத்தில் 'நிகொட்' நிறுவனத்தினரால் நடத்தப்படவுள்ள இந்தப் பயிற்சி வகுப்புக்களில் பங்குபற்றவுள்ள விவசாயிகள் தமது பெயர்களை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் பதிவுசெய்யுமாறு விவசாயப் போதனாசிரியர் ஆ.சிவபாலன் கேட்டுள்ளார். (10-117)

## கோழிகளுக்கு அம்மைநோய்

தென்மராட்சி,டிசெ.10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கோழிகளுக்கு அம்மை நோய் ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோழி அம்மை நோய்க்கான தடுப்பூசி மருந்து ஒன்று விட்டு ஒரு புதன்கிழமைகளில் சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் கோழிகளுக்கு ஏற்றப்படுமெனவும்-

நுளம்பு, இலையான் கட்டுப்பாட்டுத் தெளி மருந்தும் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருவதாகவும் கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி மகேந்திரராசா தெரிவித்துள்ளார். (10-117)

## யாழ்.நகரில் விற்பனை மும்முரம்

குருநகர்,டிசெ.10

நத்தார் மற்றும் புதுவருடம் என்பன அண்மித்து வருவதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பொருள்களின் விற்பனை அதிகரித்துக் காணப்படுகிறது.

யாழ்நகரில் உள்ள நடைபாதைக் கடைகளில் பெருமளவு பொருள்கள் குவிக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது. உடுபுடைவைகள் மற்றும் கலண்டர்கள், அலங்காரப் பொருள்கள் ஆகியவைகளின் விற்பனை காரணமாக நகரில் சனநெருக்கடி ஏற்பட்டுள்ளது. (10-51)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,டிசெ.10

அரச பாடசாலைகளில் செயற்பட்டுவரும் நூலகங்கள் தொடர்பான பயிற்சிப் பட்டறை இன்று கொழும்பு, மஹரகம தேசிய கல்வி நிறுவனத்தில் நடைபெறவுள்ளது.

சகலகல்வி வலயங்களிலும் பணியாற்றும் நூலகங்களுக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் இப்பட்டறைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (10-173)

## விளம்பரப் பலகைகள் அகற்றப்படவுள்ளன

தென்மராட்சி,டிசெ.10

சாவகச்சேரி நகரப் பகுதியில் நகர சபையின் அனுமதியின்றி வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் அகற்றப்படவுள்ளன.

குறிப்பாக சாவகச்சேரி பஸ் நிலையம்; நவீன சந்தை, நகர்ப்பகுதி ஆகியவற்றில் காணப்படும் விளம்பரப் பலகைகளே இவ்வாறு அகற்றப்படவுள்ளன.

நகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் விளம்பரப் பலகைகள், தொங்கு பதாகைகள் அமைப்போர் நகர சபையின் அனுமதி பெற்றே அவற்றினை அமைக்க வேண்டுமென நகரசபை செ[illegible]ளாளர் திருமதி கு.ஆறுமுகம் தெரிவித்து[illegible]. (10-117)

## செயல்திறன் அரங்கத்தின் நாடகம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் செயல்திறன் அரங்க இயக்கத்தின் தயாரிப்பில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' என்னும் நாடகம் எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

காலை 10.30 மணிக்கும், பிற்பகல் 3.30 மணிக்கும் இரு அமர்வுகளாக காட்சிப்படுத்தப்படவுள்ள இந்த நாடகம் போர்ச் சூழலில் பெண்களின் அவலநிலையை சித்திரித்துக் காட்டுகின்றது.

தே.தேவானந்தாவின் நெறியாள்கையில் உருவான மேற்படி நாடகம் மூலம் பெறப்படும் நிதியானது போரினால் பாதிக்கப்பட்ட 20 கிராமங்களைச் சேர்ந்த வறிய பெண்களுக்கு உதவுவதற்குப் பயன்படுத்தபபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-204)

## வயாவிளான் ம.ம.வியின் கல்விச் செயற்பாடுகளுக்கு 6 லட்சத்து 29 ஆயிரம் ரூபா

யாழ்ப்பாணம்,டிசெ.10

தற்போது உரும்பிராயில் தற்காலிகமாக இயங்கிவரும் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புச் செயற்பாடுகளை முன்னின்று மேற்கொண்டுவரும் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் செயற்பாடுகளுக்காக லண்டனில் இயங்கிவரும் வயாவிளான் நலன்புரிச் சங்கம் ஆறு லட்சத்து 29ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

இந்த வகையில் லண்டனில் வாழும் வயாவிளானைச் சொந்த இடமாகக் கொண்ட நலன் விரும்பிகள் இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் கல்விசார் நற்பணிகளுக்கு உதவும் பொருட்டு முன்னர் 2லட்சத்து 35 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் இந நிதியினை வங்கியில் வைப்பிலிட்டு, அதன் மூலம் கிடைக்கும் வட்டிப்பணத்தை கல்வி ஊக்குவிபபுப் பணிகளுக்குச் செலவிட்டு வருகின்றது. (10)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 12 - 1979



மறைவு 10 - 12 - 1998

**கப்டன் நாகேஸ்வரி**
**வயிரவநாதன் ஜெயந்தி**


ஆண்டுகள் ஐந்து அகன்றோடிப்போனாலும் ஆறுமோ நெஞ்சம்
ஈண்டு உமது நினைவு தான் எம் நெஞ்சை வாட்டுகிறதே!
மண்ணுக்காய் மரணித்த மங்கையே! மாண்புடன் வாழ
எண்ணியிருந்தோம்! எம் நினைவு நிறைவேறாது போயிற்றே?
அமைதி பெறுக!

நீர்வேலி தெற்கு,
கரந்தன் சந்தி.
(39343)(39-16-19-26)

பாசமுள்ள அப்பா, அம்மா,
சகோதரிகள், அன்புத் தம்பி,
உற்றார், உறவினர்கள்.

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 05 - 11 - 1935



உதிர்வு 12 - 12 - 2001

அமரர்
**வேலுப்பிள்ளை திருநாவுக்கரசு**
திதி: 10. 12. 2004

*அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய்*
*பண்பின் சிகரமாய் வாழ்ந்து எம்மை*
*வாழவைத்த தந்தையே!*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய நாம்*
*இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

"லக்ஷிமி வாசம்"
கருணாநிதி ச.ச.நிலையம்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.
- குடும்பத்தினர்.
(39311)(39-16-19-26)

# 21 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் வந்தது 31 - 05 - 1926



விண்ணில் மறைந்தது 20 - 11 - 2004

எமது குலதெய்வம்
**திருமதி அன்னலட்சுமி மாணிக்கம்**
(செல்வநாயகம்)

அன்புத் தெய்வமே! பாசத்தின் உறைவிடமே!
நீங்கள் மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களைவிட்டு மறையவே மறையாது!
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

எமது குலதெய்வத்தின் 21ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் மதியபோசனமும் இன்று (10.12.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. இதில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மா.குலேந்திரன் (மகன்),
திருமதி இந்திராணி கந்தசாமி - கனடா, திருமதி செல்வராணி உமாமகேஸ்வரன் } மகள்மார்
சீ.கந்தசாமி - கனடா, க.உமாமகேஸ்வரன் (அழுது) } மருமக்கள்
திருமதி சறோஜினிதேவி குலேந்திரன் - மருமகள்
திருமதி தாரணி விஜேந்திரன், திருக்குமரன், தமிழினி, துஷ்யந்தி, மிதிலா, யுரேன், யாழினி. } பேரப்பிள்ளைகள்
ரிஜிதா, டிலானி (பூட்டி).

கோயில் குடியிருப்பு,
2ஆம் ஒழுங்கை,
கைலாயபிள்ளை வீதி,
சாவகச்சேரி.
(39350)(39-16-19-26)

# கூட்டுறவு வர்த்தக வளாகம் செவ்வாயன்று திறக்கப்படுகிறது

அரியாலை,டிசெ.10

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கூட்டுறவு நகர்(கோப் சிற்றி) என்ற விற்பனை வளாகத்தை எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளது.

யாழ்.காங்கேசன்துறை வீதியில் சங்க நடுவப் பணிமனை அமைந்துள்ள வர்த்தக நிலையக் கட்டடத்தில் இந்த 'கோப் சிற்றி' திறந்து வைக்கப்படவுள்ளது. சகலவிதமான பாவனைப் பொருள்கள் மற்றும் மருந்தகம், உணவகம், தொலைத்தொடர்பு, கணனி மயப்படுத்தப்பட்ட அச்சகம் போன்ற நவீன வசதிகளைக் கொண்டதாக இந்த 'கோப் சிற்றி' இயங்கவுள்ளது.

உணவுப்பொருள்கள் யாவும் தரமான முறையில் பொதி செய்யப்பட்டு பாவனையாளர்களுக்கு நியாய விலையில் விநியோகிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன - என்று கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ.சிறில் தெரிவித்தார்.

கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50ஆவது பிறந்த தினத்தன்று மேற்படி 'கோப் சிற்றி' திறந்துவைப்பதற்கு முழு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும், காலநிலை சீரின்மையால் வளாகத்தில் வேலைகள் தாமதமடைந்ததால் திறப்பு விழா 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-17-30)

## ஆசிரியருக்கு இரண்டாம் மொழி பயிற்சி

தென்மராட்சி,டிசெ.10

தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளில் இரண்டாம் மொழி (சிங்களம்) கற்பிக்கும் அல்லது தரம் 5 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு இரண்டாம் மொழி (சிங்களம்) கற்பிப்பது தொடர்பான பயிற்சிகள் டிசெம்பர் மாதத்தில் ஐந்து தினங்கள் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடத்தப்படவுள்ளன.

மேற்படி வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரை இச்செயலமர்வில் பங்குபற்றுமாறும் பாடசாலையில் இருந்து ஓர் ஆசிரியர் மட்டும் பங்குபற்றமுடியுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ-117)

## சாரத்தியம் பற்றிய நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

இலங்கை விபத்துச் சங்கமும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையும் இணைந்து நடத்தும் 'சாரத்தியம் சவால்களும் சாமர்த்தியமும்' எனும் நூல் அறிமுகவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுகிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கத் தலைவர் பெ.கனகசபாபதி தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் கௌரவவிருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவும் ஆய்வுரையை யாழ்.மாவட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வி.பத்மநாதனும் நிகழ்த்துவார்கள்.

விபத்துக்கள், வீதி ஒழுங்குகள் பற்றி திரைப்படக்காட்சியும் காண்பிக்கப்படும்.

இந்நூலை ஓய்வுபெற்ற பிரதிப் பொலீஸ்மா அதிபரும் இலங்கை விபத்துதவிச் சங்கத் தலைவருமான த.பேரின்பநாயகம் எழுதியுள்ளார்.

(ஐ-173)

## பங்கீட்டு அட்டைக்கு கோதுமை மா விநியோகம்

சாவகச்சேரி,டிசெ.10

தென்மராட்சியில் கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனையடுத்து சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - கிளைச் சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு மாவை வழங்கி வருகிறது. பொது மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மா வழங்கப்பட்டு வருகிறது.

3 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு 3 கிலோகிராம் மாவும், 4 அங்கத்தவர்களும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட குடும்பத்திற்கு 4 கிலோ கிராம் மாவும் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படும் மா பொதுமக்களது தேவைகளுக்குப் போதாமல் உள்ளதாகப் பொதுமக்கள் கூறுகின்றனர். (ஐ-31)

## தடைகாண் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.10

அஞ்சல் திணைக்களத்தில் ஒருங்கிணைந்த அஞ்சல் சேவைத்திட்டத்தின் கீழ் உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான வினைத்தடைகாண் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

மாவட்ட அஞ்சல் திணைக்களம், அஞ்சலகங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் சிற்றூழியர்கள், உப அஞ்சல் அலுவலர்கள் ஆகியோரிடமிருந்து உத்தியோகத்தர்களை தெரிவுசெய்வதற்கே இப்பரீட்சை நடத்தப்படுகிறது.

இப்பதவிக்கான பரீட்சைக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து நூற்றுக்கணக்கானோர்கள் விண்ணப்பித்துள்ளனர். (8-173)

## கத்திகள், பொல்லுகள் சகிதம் கூடியிருந்த ஆறுபேர் கைது!

கோண்டாவில்,டிசெ.10


குற்றச்செயல் புரிவதற்காகக் கத்திகள், பொல்லுகள் சகிதம் கூடியிருந்தவர்கள் எனக் கூறப்படும் இளைஞர்கள் ஆறுபேரை கோப்பாய் பொலீஸார் கைதுசெய்தனர்.

கடந்த திங்களன்று இரவு 7.00 மணியளவில் கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயில் பகுதியில் வைத்தே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கைதாகிய இளைஞர்கள் கறுப்பு நிறத்திலான ரீசேட், ஜக்கட், இடுப்புப் பட்டி என்பவற்றை அணிந்திருந்ததுடன் ரோச் லைட், சங்கிலிக் கட்டைகள், கத்திகள், பொல்லுகள் ஆகியவற்றையும் தம்வசம் வைத்திருந்தனர் என கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்தார்.

இவர்களுடைய மூன்று துவிச்சக்கர வண்டிகள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றையும் பொலீஸார் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்றனர்.

சம்பவத்தில் கொக்குவில் கிழக்கைச் சேர்ந்தவர்களான கதிரமலை கோகுலன் (வயது 22), துரைசிங்கம் ரகுராம் (வயது 21), கோண்டா




வில் கிழக்கைச் சேர்ந்த கிருஸ்ணகுமார் கிருசாந்தன் (வயது 20), நந்தகுமார் செந்தூரன் (வயது 21), தர்மராசா சுகந்தன் (வயது 20), யோகநாதன் பார்த்தீபன் ஆகியோரே கைதுசெய்யப்பட்டனர். (ஐ-49)




**சர்வதேச சிறுவர், முதியோர் தின விழா அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வேலணை பிரதேச சமூக சேவை அலுவலர் வே.தபேந்திரன் உரையாற்றுவதையும் அருகில் வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபால் மற்றும் அண்மையில் விபத்தில் காலமாகிய தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபால்வாணிதாசன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (ஐ-75)**

## தொழிற்பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

நவாலி,டிசெ.11

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் ஊடாக வீட்டு மின்னிணைப்பு, மரவேலை, மேசன் வேலை ஆகிய தொழிற் பயிற்சிகளை வழங்குவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பம் செய்வோர் 10ஆம் தரத்தில் கல்வி பயின்றிருப்பதுடன் 18 வயதிற்கும் 35வயதிற்கும் இடைப்பட்டவர்களாகவும் இருத்தல்வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிநெறி 6 மாத காலத்திற்கு இடம்பெறும். பயிற்சிக் காலத்தின்போது ஊக்குவிப்புப் பணமாக மாதாந்தம் 450 ரூபா வழங்கப்படும்.

பயிற்சி வகுப்பில் சேர்ந்து பயன்பெற விரும்புவோர் இம்மாதம் 17 ஆம் திகதிக்கு முன்பதாக இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, கிராமிய தொழிற்பயிற்சி நிலையம், பிரதேச செயலகம் முன்பாக சண்டிலிப்பாய் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி வே.ஸ்ரீகுகன் கேட்டுள்ளார்.

பயிற்சிகள் யாவும் 2005ஆம் ஆண்டு ஜனவரி 3ஆம் திகதி ஆரம்பமாகுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(8-100)

## சத்திரத்துச் சந்தி அருகே கே.கே.எஸ். வீதியில் நெரிசல்

### அகலமாக்கிப் புனரமைக்கும் பணி ஆரம்பம்

அரியாலை,டிசெ.10

யாழ். சத்திரச் சந்தியில் இருந்து கோட்டைப் பக்கமாகச் செல்லும் காங்கேசன்துறை வீதியில் வாகன நெருக்கடி அதிகரித்ததை அடுத்து வீதியை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதியில் அண்மைக் காலமாக வாகனங்கள் மற்றும் பொதுமக்களின் நெரிசல் அதிகரித்துக் காணப்படுவதால் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தீவுப்பகுதியில் இருந்து வரும் வாகனங்களும் இந்த வீதியிலேயே தரித்து நின்று பயணத்தை மேற்கொண்டு வருகின்றன.

இதனை அடுத்தே வீதியைச் சற்று அகலமாக்கிச் செப்பனிடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (ஐ-17)

## கிளிநொச்சியில் 'பனைச் செல்வம்' நூல் அறிமுகம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், 'தால' மூலவள அபிவிருத்தி நிறுவன இயக்குநர் வி.ஜி.தங்கவேல் ஆகியோர் இணைந்து எழுதிய 'பனைச் செல்வம்' நூல் அறிமுக விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.கணேசலிங்கம் தலைமையில் கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் விடுதலைப் புலிகளின் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் கா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள். (ஐ-173)

## மீனவர்களுக்கு கட்டுமரங்கள்

வடமராட்சி,டிசெ.10

வடமராட்சி வடக்கு(பருத்தித்துறை) பிரதேச மீனவர்களுக்கு 'மூவிமெண்டோ' நிறுவனம் மீன்பிடி வலைகள், கட்டுமரங்களை தற்போது வழங்கிவருகிறது.

இப்பிரதேசத்தைச் சேர்ந்த 552 மீனவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் அல்லது கட்டுமரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் அனுசரணையுடன் இவை வழங்கப்படுகின்றன. (ஐ-173)

## விவசாய வீதி புனரமைப்பு

அரியாலை,டிசெ.10

நீர்வேலி தெற்கு, விவசாய வீதியை கிரவல் மண்ணினால் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல ஆண்டுகாலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்பட்ட இந்த வீதி தற்போது கிரவல் மண் கொண்டு புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி விவசாயிகள் தமது தோட்டங்களுக்குச் செல்லவும் மற்றும் மக்கள் இவ்வீதியூடாகச் சிரமம் இன்றி போக்குவரத்தை மேற்கொள்வதற்கு வசதியாகவுமே இந்த வீதி சீர்செய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை,

இந்த விவசாய வீதியில் இருந்து வெங்காயச் சங்கத்திற்குச் செல்லும் குறுக்கு வீதி பல ஆண்டுகாலமாக புனரமைக்கப்படாது காணப்படுகின்றது. (ஐ-17)

## பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் சொற்பொழிவு

வடமராட்சி,டிசெ.10

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுகள் வரிசையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை 'காரைக்கால் அம்மையார்' என்னும் தலைப்பில் பேராதனை பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவன் ம.பங்கயன் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ஐ-173)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர்

வடமராட்சி,டிசெ.10

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஆங்கிலபாடம் போதிக்க பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் ஆங்கில பாடத்தில் 'சி' தர சித்தியையும், உயர்தர பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியையும் பெற்றோர் எதிர்வரும் 20ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன் விண்ணப்பிக்குமாறு வலய நிர்வாக உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் கேட்டுள்ளார்.

(ஐ-173)

## கோப்பாயில் பிரதான வீதி புனரமைப்பு

அரியாலை,டிசெ.10

கோப்பாய்ச் சந்திக்கும் கரந்தன் சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த வீதி குண்டும் குழியுமாகக் காணப்பட்டது.

வீதியைப் புனரமைக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-17)

# ஐ.தே.கவிலிருந்து கூரேக்கு இன்னும் அழைப்பு வரவில்லை

கொழும்பு,டிசெ.10

'ஐக்கிய தேசியக் கட்சியுடன் மீள இணைந்து கொள்வதா என்பது குறித்து இதுவரை எந்தத் தீர்மானத்தையும் நான் எடுக்கவில்லை. இது விடயத்தில் வெறும் செய்திகள் அடிபடுகின்றனவே தவிர, உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் இதுவரை எனக்கு விடுக்கப்படவில்லை'.

- இவ்வாறு ஐ.தே.கவின் முன்னாள் முக்கியஸ்தர் சிறிசேன கூரே கூறினார். ஐ.தே.கவுடன் அவர் மீள இணையப் போகின்றார் என வெளிவந்துள்ள செய்திகள் பற்றிக் கருத்து வெளியிட்ட அவர், அவ்வாறான அழைப்பு வரும் பட்சத்தில் அதனைப் பரிசீலனை செய்ய முடியுமென்றும் கூறினார்.

"என்னிடம் பலர் இதுபற்றிக் கேட்கிறார்கள். ஆனால், இது சம்பந்தமான உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. மறுபுறம் ஐ.தே.க.தலைவர் எவருடனும் இதுபற்றிக் கதைக்கவுமில்லை. அழைப்பு முதலில் வரட்டுமே. பிறகு அதைப்பற்றி யோசிப்போம்" - என்றார் சிறிசேன கூரே.

(க-8)

## இந்திய - இலங்கைத் தரப்புகள் கூட்டு கடற்படை நடவடிக்கை

செவ்வாயன்று மேற்குக் கடலில் ஆரம்பம்

இலங்கைக் கடற்படையினருக்கும், இந்தியக் கரையோரக் காவல் படையினருக்கும் இடையிலான கூட்டுக் கடற்படைப் பயிற்சி நடவடிக்கை ஒன்று அடுத்த செவ்வாய்க் கிழமை முதல் இலங்கையின் மேற்குக் கடல் பிராந்தியத்தில் நடைபெறவிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இந்தியக் கரையோரக் காவல் படைத்தரப்பில் நவீன கரையோர ரோந்துக் கப்பல்கள் இரணடும், கடல் பிராந்தியக் கண்காணிப்பு விமானம் ஒன்றும், 'சேட்டக்' ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் இந்தக் கடற்படை நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

அதேவேளை, இலங்கைக் கடற்படை தனது கடற்படைக் கப்பலான சயூரா, கரையோர ரோந்துக் கப்பலான ஜெயசாகர மற்றும் பீரங்கிக் கப்பல் - ஒன்று, அதிவேகப் படகுகள் - இரண்டு ஆகியவற்றை இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தும்.

இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்புச் செயற்பாட்டின் ஓர் அங்கமாகவே இந்த கடற்படைக்கூட்டு நடவடிக்கை இடம்பெறுவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-8)

## முன்பள்ளிக் கலைவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.10

வலி.மேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள முனபள்ளிச் சிறார்களின் கலைவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி சாரதாதேவி மேரிதாசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், தமிழர் புனர்வாழவுக் கழக யாழ. மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(10-13)

# பதவி வெற்றிடம்

**ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்திற்கு காப்புறுதி முகவர்கள் வெற்றிடம் உடன் நிரப்புவதற்கு தேவை.**

கல்வித் தகைமைகள்: க.பொ.த.சாதாரணதரம் (கணிதம் முக்கியம்)

க.பொ.த.உயர்தரம்

வயதெல்லை: 18 - 55 வரை

**வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலைசெய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.**

**ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் 11.12.2004 இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த 17.12.2004 வரை கீழ் உள்ள முகவரிக்கு நேர்காணலுக்காகச் சமுகந்தரலாம்.**

**ஆயுட் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை**
**55, R.G. கட்டடம், கன்னாதிட்டி,**
**யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி இல: 6325, 6326.**

(39484)(39-11-16-42)




வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் [NESOHR] தனது முதலாவது மனித உரிமைகள் தினத்தை 10/12/2004 இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி A9 பிரதான சாலையில் அமைந்திருக்கும் இந்துகலாசார மண்டபத்தில் கொண்டாடுகின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**NESOHR**

# முக்கிய அறிவித்தல்

## காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது)

### கிளைக்குழு உறுப்பினர் தெரிவு 18.12.2004

**20.11.2004இல் மேற்படி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் கீழ்க் காணப்படும் கிளைகளின் பொதுச்சபைக் கூட்டங்களை நிறைவெண் இன்மையால் கூட்ட முடியாமல் போனதுடன், அவற்றின் கிளைக்குழு உறுப்பினர்களை தெரிவு செய்யவும் முடியவில்லை. எனவே, மீண்டும் இக்கிளைகளுக்கான பொதுச்சபைக்கூட்டம் 18.12.2004 இல் கூட்டுறவு உதவி ஆணையாளரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் கூட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தகுதியுள்ள அங்கத்தவர்கள் அவ்வவ் கிளைகளுக்குச் சென்று கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்துதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

| கிளை | இல . | கிளைப்பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடம் | திகதி நேரம் |
|---|---|---|---|
| ஆலடி | 06 | ஆலடிக்கிளைக் கட்டடம் | 18.12.04 10.00 மணி |
| வியாவில் | 09 | வியாவில்கிளைக்கட்டடம் | 18.12.04 10.00 மணி |
| பாலாவோடை | 11 | பாலாவோடை கிளைக்கட்டடம் | 18.12.04 10.00 மணி |
| வாரிவளவு | 12 | வாரிவளவுக் கிளைக் கட்டடம் | 18.12.04 10.00 மணி |
| நீலிப்பந்தனை | 13 | நீலிப்பந்தனை கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் | 18.12.04 10.00 மணி |

நிகழ்ச்சி நிரல்

1. மௌன இறைவணக்கம்
2. தவிசாளர் உரை
3. கிளைக்குழு உறுப்பினர்கள் தெரிவு
4. நன்றியுரை

- செயலாளர்.

(C/39781)(42-16-11)

**The Royal College Of Jaffna**

1இல் இருந்து O/L வரை
சனி, ஞாயிறு வகுப்புகள்
ஆங்கிலம் – விக்னேஸ்
தமிழ் – தயாநிதி
விஞ்ஞானம் – றதீஸ்
கணிதம் – பிரதீபன்
426, K.K.S.Rd, Jaffna

# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons up to 31.12.2004 for the under mentioned post.

## PHYSICAL EDUCATION UNIT

**VISITING INSTRUCTOR IN SPORTS**

Badminton(Men)/Chess(Men)/Chess(Women)/Gymnastic(Men)/Karate(Men)/Table Tennis(Men)/Table Tennis(Women)/Tennis (Men) /Thachchi (Men)/Volleyball (Men)/Elle(Men)/Elle (Women).

***Rate of payment - Rs.75/= per hour***

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments. either in person or by post, on a payment of Rs.20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the ***Bursar, University of Jaffna together with a self - addressed stamped envelope*** 23x10 cm in size.

Those who wish to apply for more than one field should apply in separate forms for each field.

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

**VICE-CHANCELLOR.**

2004.12.07.

(C/39750)(11-16-42)

# மரண அறிவித்தல்கள்

## வீரகத்தி நடராசா



கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மத்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நடராசா அவர்கள் நேற்று (09.12.2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினபூபதி (சுந்தரவல்லி) அவர்களின் அன்புக் கணவரும் இராசம்மா, விக்கினேஸ்வரராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுசிலாதேவி, சுகுணேந்திரன், சுஜாதா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தர்மலிங்கம் (முருகன் களஞ்சியம், சாவகச்சேரி), சிறீதரன் (அம்பாள் மில்), ஈஸ்வரி (கிளி) ஆகியோரின் மாமனாரும் சேனாதிராசாவின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2004 ஞாயிற்றுக்கிழமை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நுணாவில் மத்தி, சாவகச்சேரி.*
T.P.: *077-6149219.*

தகவல்:
**தர்மலிங்கம், சிறீதரன்.**

(39490)(42-11-16)

## வைரவன் செல்லத்துரை



அச்சுவேலி தெற்கு, அண்ணா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் செல்லத்துரை 07.12.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைரவன் - முத்தியின் அன்பு மகனும், காலஞ்சென்ற தில்லையர் - வீராசியின் அன்பு மருமகனும் கனகசபாவதி, ஆ.வனிதாமணி (ஜேர்மனி), இராசதுரை, அற்புதராசா (லண்டன்), சண்முகராசா (சுவிஸ்), வனிதராணி, சுந்தரராசா, சுதாமலர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்திரவதி, காலஞ்சென்ற ஆறுமுகம் (ஜேர்மனி), சிலேஸவரி, சித்திரா (லண்டன்), கர்மலீனா (சுவிஸ்), யோகரத்தினம், புஸ்பராணி, அழகுராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11-12-2004) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக அச்சுவேலி முழக்கன் மயானத்துக்கு எடுதது்செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறறுக் கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

*அண்ணா வீதி.*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
**பிள்ளைகள்.**

(39488)(39-16-11-42)

## திருமதி கந்தையா மங்கையர்க்கரசி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா மங்கையர்க்கரசி நேற்று (09-12-2004) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற S.S.கந்தையா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - கனகம்மா தம்பதியின் அருமை மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - இராசம்மா (கந்தர்மடம்) தம்பதியின் அன்பு மருமகளும் யோகலீலா (இளைப்பாறிய ஆசிரியை), யோகரட்ணராஜா (பிரான்ஸ்), பத்மலீலா (இளைப்பாறிய உத்தியோகத்தர், காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம்), இந்திரலீலா (யாழ்.பல்கலைக்கழகம்), சந்திரலீலா (கமநல அபிவிருத்தித் திணைகளம், நல்லூர்) ஆகியோரின் அன்புத் தாயாரும் தேவசுந்தரம், ஆனந்தவல்லி, ஜெகீஸ்வரன், இராசலிங்கம், பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் தங்கவடிவேல், பாலசுப்பிரமணியம், இராசகுலசிங்கம் ஆகியோரின் சகோதரியும் அபிராமி, குருபரன், சுதர்மன், நிதர்சன், தீபன், குமணா, சயந்தவி, கோபிரியன், சிந்தூரி, கஸ்தூரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-12-2004) வெள்ளிக்கிழமை பி.ப.3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*17/23, 'சண்முகப்பிரியா',*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
யோகலீலா தேவசுந்தரம் (மகள்).

(39486)(39-16-11-42)

# வடக்கு - கிழக்கில் உள்ளோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்த உருவாக்கப்பட்ட 'நிசோர்' அமைப்பு

**இன்று சர்வதேச மனித உரிமைகள் தினமாகும். வடக்கு - கிழக்கில் வாழும் மக்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கென வடக்கு - கிழக்கில் உள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களினால் அண்மையில் உருவாக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் (NESOHR) உருவாக்கம் பற்றிய தொகுப்பு இங்கு பிரசுரமாகின்றது.**

வடக்கு-கிழக்கு மனித உரிமைகளுக்கான செயலகம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், குடியியல் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச கூட்டு உடன்படிக்கை, இன ரீதியான பாரபட்சத்தின் அனைத்து வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான அமைப்பு, மனித உரிமைகள் தொடர்பான ஏனைய கருவிகள் ஆகியவை எமது மக்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு பயன்விளைவுள்ள வகையில் பங்களிப்புச் செய்யவில்லை என்பதை உணர்ந்து, தேசிய சர்வதேச ரீதியில் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் தனிநபர், குழுக்கள், நிறுவனங்களுக்கு இருக்கும் உரிமையையும் பொறுப்பையும் மனதில் ஏற்று வடக்குக் கிழக்கிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்டது.

வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR வடக்கு-கிழக்கிலுள்ள அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டது.

### அதன் செயற்பாடுகள்:

மனித உரிமை மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிப்பதுடன், அவை தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும், ஆவணப்படுத்துவதற்குமென இடம்பெயர்ந்தோர் வாழும் முகாம்கள், தடுப்புக் காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் போன்றவற்றுக்கு செயலாய்வுக் குழுகளை அனுப்பும்.

வடக்கு-கிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அவசர மேல்முறையீடுகள், பத்திரிகைத் தகவல்கள், அறிக்கைகள், வெளியீடுகள் போன்றவற்றை விநியோகிக்கும்.

தேசிய சர்வதேசிய ரீதியிலான வெளியீடுகள், மாநாடுகள், கருத்தரங்குகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றினூடாக தனிநபர்கள், குழுக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கி அவற்றை வளர்த்தெடுக்கும்.

தகவல்களைப் பெறும்பொருட்டு பரஸ்பர ரீதியில் நன்மையளிக்கும் கூட்டுறவை விருத்தி செய்வதற்கும், வடக்கு-கிழக்கில் மனித உரிமைக் கலாசாரத்தை மதிக்கவும் வளர்த்தெடுப்பதற்குமான செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்கும் தேசிய சர்வதேசிய அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை உருவாக்கும்.

### செயலகம் உங்களுக்கு எப்படி உதவும்?

★ எல்லா மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களையும் ஆய்வு செய்தல்.

★ இலவச சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல்.

★ உங்களுக்குத் தேவையான மனித உரிமைகளின் பாதுகாப்பை விசாரித்தறியும் மனிதத்துவத்தை மதித்தல்.

★ மனித உரிமைகள் பற்றிய கல்வியை வழங்கல்.

### 'நிசோர்' பட்டாயத்தின் மூல ஏற்பாடுகள்

இலங்கைத் தீவின் வடக்கு-கிழக்கு பகுதியில் வாழ்கின்ற எல்லா மக்களது உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் 'நிசோர்' அமைப்பு கடப்பாட்டைக் கொண்டுள்ளது. சர்வதேச மனித உரிமை பிரகடனம், சர்வதேச மனித உரிமைகள் கூட்டமைப்பாளர்கள், ஆபிரிக்க நாட்டின் மனித உரிமைகள் பிரகடனம், பெண்களுக்கெதிரான எல்லாவகையான பாகுபாடுகளையும் ஒழிக்கும் மாநாடு, சிறுவர்களின் உரிமைகளுக்கான மாநாட்டு கருத்துக்களையும், ஐநாவின் குறைந்த அளவிலான கைதிகளின் பராமரிப்பு விதிகளையும் தனது பட்டயத்தில் கொண்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நல்ல நோக்கத்திற்கான சூழ்நிலையிலும் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்படவோ, செயலிழக்கப்படவோ மாட்டாது. மேலும் மனித உரிமைகள் செயலகம் வடக்கு - கிழக்கில் வாழும் சுதந்திர வேட்கைகொண்ட ஒவ்வொருவரினதும் குடியியல் உரிமைகளை நம்பிக்கையுடனும் மரியாதையுடனும் பற்றி நிற்கிறது.

குடிசார் அரசியல் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் போன்ற அடிப்படை உரிமைகள் உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளால பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகளைப் பாதுகாக்கும் அம்சங்களை மனித உரிமைகள் பட்டயம் உள்ளடக்கியுள்ளது. சிறுவர், பெண்கள் போன்ற குறிப்பிட்ட வகையினர் உரிமைகளைப் பாதுகாக்கும் பணியையும் தம் வேலைத் திட்டத்தில் அடக்கியுள்ளது. அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது பெண்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் தனது அவசர வேலைத்திட்டத்தில் கொண்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள்.

#### அரசியல் உரிமைகள்

★ எல்லா மனிதர்களுக்கும் சுதந்திரமாக கருத்துக்களை வெளியிடவும் தங்களது அரசியல் அபிலாசைகள், சமய நம்பிக்கைகள் உட்பட மனச்சாட்சியில் சரியெனப்பட்டவற்றைத் தெரிவிப்பதற்கும் -

★ எல்லா மனிதருக்கும் சுதந்திரமாக தங்கள் கருத்தையும் நம்பிக்கையையும் தடையின்றி வெளிப்படுத்துவதற்கும் -

★ எல்லா மனிதருக்கும் சமாதானமாகக் கூடுவதற்கும் அந்நியோன்னியமாக மற்றவர்களுடன் பழகுவதற்கும் -

★ எல்லா மக்களும் சுதந்திரமாகத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும் -

★ எல்லா மனிதர்களும் அரசியலில் பங்கு கொள்வதற்கும் அரசியல் கட்சிகளில் இணைவதற்கும் தடையற்ற வகையில் பிரசாரம் செய்வதற்கும் -

★ காலத்துக்குக் காலம் நடைபெறும் தேர்தல்களில் தாம் விரும்பிய அரசைத் தெரிவு செய்வதற்கும் ஒவ்வொரு மனிதர்களும் தடையற்ற தகுதி பெற்றவர்கள்.

★ எல்லா மனிதர்களும் அரச சேவையில் இணைவதற்கும் பதவிகளில் தெரிவுசெய்யப்படுவதற்கும் உரிமைகள் உள்ளவர்கள்.

★ எல்லோரும் அரச அலுவலர்களுடன் தங்கள் குறைகள் தொடர்பில் பரிகாரம் தேடுவதற்கும் மனுவைச் சமர்ப்பிப்பதற்குமான உரிமை பெற்றவர்கள்.

#### உறுதிப்படுத்தப்பட்ட பெண்கள் உரிமைகள்

★ ஆண்களுக்குச் சமமாக கணிக்கப்பட பெண்களுக்கு உரிமையுண்டு.

★ ஆண்களைப் போன்ற தரத்துடன் ஒத்த அல்லது சமனான நிலைப்பாட்டில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்கும் ஆண்களைப் போன்றே ஊதியம் பெற உரிமையுண்டு.

★ திருமணத்திலும் பெண்கள் சமமான உரிமையுடையவர்களே.

★ சகல வடிவங்களிலும் காணப்படும் சுரண்டுதல்களிலிருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு பெண்கள் உரித்துடையவர்கள்.

★ பெண்கள் தொழில் புரியும் காலத்தில் பிள்ளையைப் பிரசவிப்பதற்கு முன்பும் பின்பும் நியாயமான காலத்திற்கு சம்பளத்துடன்கூடிய விடுப்பைப்பெற உரித்துடையவர்கள்

#### உறுதிப்படுத்தப்பட்ட சிறுவர்களின் உரிமைகள்

★ எல்லாச் சிறுவர்களும் பெயரை வைத்துக்கொள்வதற்கு உரித்துடையவர்கள்.

★ திருமணப் பிணைப்பில் பிறந்த பிள்ளைகள் அனுபவிக்கும் உரிமைகள் அவ்வாறற்ற பிள்ளைகளுக்கும் உண்டு.

★ தொடக்கக் கல்வியை பெறுவதற்கான வழிகளையும் இலவச, கட்டாய ஆரம்பக் கல்வியை உள்ளடக்கிய கல்வியை பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.

★ தொழில்முறைப் பயிற்சிகளையோ, ஏனைய தொழில் பயிற்சிகளையோ இலவசமாகப் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

★ கைது செய்யப்படும் சிறார்களுக்கு புனர்வாழ்வு கோருவதற்கு உரிமையுண்டு.

★ புறக்கணிப்பில் இருந்தும் கொடுமைகளில் இருந்தும் சுரண்டல் நிலைகளிலிருந்தும் தங்களைப் பாதுகாப்பதற்கான உரிமையுடையவர்கள்.

★ சிறுவயதில் வேலைக்கமர்த்தப்படுவதிலிருந்து விடுபடும் உரிமையுடையவர்கள்.

★ விளையாட்டுக்களிலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் வாய்ப்புப் பெறுவதற்கு உரிமையுடையவர்கள்.

★ எல்லா சமூக சேவைகளை ஆற்றுவதற்கும் உரிமையுடையவர்கள்.

★ சிறுவர்களுக்குத் தங்கள் எண்ணங்களை அவர்கள் விருப்பத்திற்கேற்ப வெளிப்படுத்துவதற்கு உரிமையுண்டு. இவை சுதந்திரமான தேடுதல் செய்யவும் அறிவுறுத்தல்களைப் பெறுவதற்கும் பலவிதமான எண்ணக் கருக்களைப் பெறுவதற்கும் எந்த நிலையிலும் விஞ்ஞான அறிவைப் பெறுவதற்கும் அவற்றை வாய்மூலமாகவோ, எழுத்துவடிவத்திலோ, வர்ணம் தீட்டல் மூலமோ படம் வரைதல் வாயிலாகவோ அல்லது வேறு சிறுவர்களுக்கான ஊடகங்கள் மூலமோ வெளிப்படுத்த முடியும்.

★ இராணுவச் சேவையிலோ அல்லது இராணுவப் பிரிவிலோ அல்லது போரிடும் குழுவிலோ இணைக்கப்படாமல் இருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமையுண்டு.

---

## உதயன்

## பதிவில் பொதிந்தவை

**கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் ஈழத் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தில், அவர்தம் வாழ்வியலில் ஒரு பகுதி.**

**உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.**

### 1986 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில்...

பண்டாரியின் ராஜதந்திரம் வெண்கலக் கடைக்குள் யானை
போன்றது - தமிழ்ப் போராளிகள்
02.01.1986

★ ஈழம் கோரிக்கை கைவிடப்படாதவரை
தமிழர் அமைப்புக்களுடன் இணங்கிப்போக இ. தொ. கா. தயாரில்லை!
மதுரையில் தொண்டமான்
02.01.1986

துப்பாக்கிச் சூட்டு மரணங்கள்; விசாரணை இனிக் கட்டாயம்
அவசரகாலச் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் கீழ் உத்தரவு
03.01.1986



02.01.1986
★ மன்னிப்புக் கோராமலே வந்த குடியுரிமை
இலங்கை அரசியலில் பெரும் மாற்றத்தைக் கொண்டு வரும்
சிறிமாவோ சொல்கிறார்

இனப் பிரச்சினைக்கு தீர்வுகாண தேர்தல் அவசியம்
சிறிமாவோ சொல்கிறார்
03.01.1986

மாநில சுயாட்சி குறித்து சர்வஜன வாக்கெடுப்பு?
தேர்தல் திணைக்களத்துக்கு மேலிடம் தயார் உத்தரவு
04.01.1986

★ இனப் பிரச்சினை தீர்வில் மற்றொரு திருப்பம்
சிறிமாவோ தலைமையில் ராஜீவிடம் தூதுக்குழு
எதிர்க்கட்சித் தலைவியானதும் புதுடில்லிக்கு விரைவார்
02.01.1986

03.01.1986
ஐக்கிய முன்னணிக்கு புத்துயிரா?

யாழ்நகரில் சூடு; குண்டு வெடிப்பு! முஸ்லிம் பெண் உட்பட 4 பேர் பலி!!
14 பேர் படுகாயம்: வானத்திலிருந்தும் வேட்டுகள் முழங்கின


05.01.1986

## பிரதேச சபை ஊர்காவற்றுறை வரவு செலவுத் திட்டம் 2005

1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க 171 ஏ பிரிவிற்கிணங்க ஊர்காவற்றுறை பிரதேச சபையின் 2005ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் பிரதேச சபையின் தலைமையகம் ஊர்காவற்றுறையில் 10.12.2004 - 15.12.2004 வரை எமது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

இரா. லோகநாதன்
செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை. (சி-39799) (22-11-16)

## யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ–து)

# பதவி வெற்றிடம்

### பின்வரும் பதவிக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது

01. தட்டெழுத்தாளர் (01) சம்.குறி. இல. 305.15
4750 - 6100
65X10, 70X10

சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக கூ.வே. ஆ. குழு சுற். இல. 50/2000, 53/2001 க்கு அமைய ரூ. 400/=, ரூ. 1200/= படியும் வழங்கப்படும்.

வயதெல்லை- 21 - 45 வரையாகும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் ரூ. 10/= செலுத்தி விண்ணப்பத்தினையும் கல்வித்தகைமை ஏனைய விவரங்களையும் சமாசக் காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

**விண்ணப்ப முடிவு திகதி : 2004.12.23 காலை 10.00 மணி.**

637, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். (சி-39788) (11-16)

பதில் மாவட்டச் செயலாளர்.

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

### உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட் தொடர் இல. 2088237 இலிருந்து 2106058 வரை

சீட்டிழுப்பு இல. 1563
திகதி 8.12.2004

வெற்றி எண்கள்
**02 06 14 32 57**

போனஸ் எண் **07**

ஜக்பொட் பரிசு ரூபா.15,00,000/- வெல்லப்பட்டுள்ளது.

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத்தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 15,00,000/- | 15,00,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 01 | 1,00,000/- | 1,00,000/- |
| 4 | 98 | 10,000/- | 9,80,000/- |
| 3 | 5,472 | 500/- | 27,36,000/- |
| 2 | 93,154 | 20/- | 18,63,080/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 02ம் எண் (போனஸ் எண் தவிர்ந்து) | 1,13,788 | 10/- | 11,37,880/- |

இந்த சனிக்கிழமை ஜக்பொட் வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.88,16,960/-

**Rs. 15,00,000/-**

தொடர் இல. 3020285 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுக்கள் 2004 டிசெம்பர் 11 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

சனிக்கிழமை அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் சுமார் 1,00,000/- பெறுமதியான தங்க நகை, தையல் இயந்திரம் மற்றும் சைக்கிளை வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2096406-4-90
2090443-5-31
2099051-6-63
2098889-8-98
2091498-5-71

## லக்ஷ்மி ஏஜென்சி

### S-Lon - DISTRIBUTORS FOR JAFFNA

# பதவி வெற்றிடம்

சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்

*தகைமை:*
அ. பாதுகாப்புச் சேவையில் பத்து வருடங்களுக்கு மேல் பணியாற்றிய அனுபவம்
ஆ. நல்ல தேகாரோக்கியமும் கண்பார்வையும் இருக்கவேண்டும்.
இ. வயது 45 வயதிற்கு மேல்

*சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:*
அ. கிராம அதிகாரியின் சான்றிதழ்
ஆ. தேசிய அடையாள அட்டை
இ. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
ஈ. கல்விச்சான்றிதழ்கள்
உ. வேலை அனுபவச் சான்றிதழ்

☞ சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

மேற்குறிப்பிட்ட ஆவணங்களுடன் கீழ்க்காணும் விலாசத்திலுள்ள எமது அலுவலகத்திற்கு நாளை (11-12-2004) சனிக்கிழமை காலை 10 மணிக்குச் சமுகமளிக்கவும்.

23/1, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-39785) (11-16)


# இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் மீள்புனரமைப்புச் செய்யப்பட்ட யாழ். கல்வி வலயத்தின் பாடசாலை வேலைப் பகுதி கட்டடம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

சுவிஸ் அபிவிருத்தி நிறுவனதின் பிராந்தியப் பணிப்பாளர் றுடொல்வ் கட்டடத்தைத் திறந்துவைப்பார். (3-5)

★ ★ ★

பலாலி ஆசிரிய கலாசாலையின் ஒளி விழா நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கலாசாலையில் கிறிஸ்தவ ஒன்றியத் தலைவர் ஆர்.விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது. (3-202)

★ ★ ★

கோப்பாய்,டிசெ.10

சர்வதேச எய்ட்ஸ் தினத்தினை முன்னிட்டு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மக்களிடையே எய்ட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கு ஒன்று இன்று முற்பகல் 11 மணியளவில் கோப்பாய் பனை, தென்னை அபிவிருத்திச் சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (3-190-72)

★ ★ ★

கோப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சைவநெறிப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கோப்பாய்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் இ.சிவஞானசுந்தரம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் முதலீட்டு, அபிவிருத்தி ஆலோசனை நிறுவனத்தினைச் சேர்ந்த இந்திரன் காராளசிங்கம், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

நிகழ்வில் ஆசியுரையை நீர்வை மணி பிரம்மஸ்ரீ கு.தியாகராஜக் குருக்களும் சிறப்புரையை புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசனும் நிகழ்த்துவர். (3-5-72)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.10

கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலய பரிசளிப்பு விழாவும், ஸ்தாபகர் பொன். கணபதிப்பிள்ளை மரகதவல்லி தம்பதியரின் நினைவுதினமும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய அதிபர் க.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ந.பாஸ்கரன் கலந்துகொள்வார். ஸ்தாபகரின் நினைவுப் பேருரையை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபரும், வாழ்த்துரையினை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினமும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து திருமதி இந்திராணி பாஸ்கரனினால் பரிசில்கள் வழங்கப்படும். (3-202)


## ஏலைற் கல்வி நிறுவனம்

147, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

**புதிய கல்வியாண்டு 2005**
தரம் 6 முதல் O/L வரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
15.12.2004 புதன் பி.ப.3.00 (ப.நே.)
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(39498)(22-11-16) - நிர்வாகி.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியில்
30 வருடங்கள் கடமையாற்றி
இளைப்பாறிய ஆசிரியை

திருமதி
**விமலாதேவி முத்துவேற்பிள்ளை**
(முன்னாள் அதிபர்,
முத்துவேற்பிள்ளையின்
துணைவியார்)

அவர்கள் கனடாவில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**கல்லூரிச் சமூகம்.**
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.
(சி-39789)(26)


## வேலணைப் பிரதேச அபிவிருத்திக் கூட்டம்

கைதடி,டிசெ.10

வேலணைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முறையே காலை 10.30மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் வேலணை உதவிப் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தலைமையில் நடைபெறும். (8-75)


## 6ஆம் நாள் நினைவுகளில்...



### அமரர் இளையதம்பி கர்ணா

*(இந்து மெய்யியல்துறை 2ஆம் வருட கலைப்பீட மாணவன் - யாழ். பல்கலைக்கழகம்)*

துள்ளித்திரிந்த உன்னை துடுக்கடக்கி
பள்ளிக்கனுப்பி பல்கலையில் ஏற்றிவிட
பொல்லாத காலனவன் பொடியாக்கி விட்டதனால்
பல்கலையில் பல்லுயிரும்
பரிதவித்து நிற்கிறதே!
எழிலான கர்ணாவே - உன் சொல்லாத பிரிவதனால்.

2ஆம் வருட மாணவர்கள்
கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்.
(39496)(22-11-16)

## வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு நிறுவனம்

### மணல் விநியோக அறிவித்தல்

மழை வெள்ளம் காரணமாக மணல் விநியோகம் ஆரம்பிக்க முடியாமலுள்ளது. அத்துடன் மணல் பெறுவதற்கான திகதியிடுதலும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. திகதியிடுவதற்காக ஒப்படைக்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களும் குறித்த திகதிகளில் வழங்கமுடியாதுள்ளது. இவைகளைப் பெறக்கூடிய திகதிகள் பின்னர் பத்திரிகையில் வெளியிடப்படும்.

(C/39795)(42-11-16) - நிர்வாகம்.

## மரண அறிவித்தல்கள்



### ஆசையப்பு மாரிமுத்து

(இளைப்பாறிய யாழ். வைத்தியசாலை ஆண் பரிசாரகர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடியை வசிப்பிடமாகவும், லண்டன் 87, சென்றல் வீதி, சட்பறியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய யாழ். வைத்தியசாலை ஆண் பரிசாரகர் ஆசையப்பு மாரிமுத்து 04.12.2004 சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் ஆசையப்பு - குஞ்சுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் மாரிமுத்து நல்லம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இராசையா, முத்துப்பிள்ளை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், லிங்கேஸ்வரன்(ஜேர்மனி), ராஜேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சித்திரா (ஜேர்மனி) தயாளினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், விதுன் நிருசா,கௌதம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 12.12.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் ஹென்டர் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்பு:*
*லிங்கேஸ்வரன் - ஜேர்மனி*
*0049521101439*
*ராஜேஸ்வரன் - லண்டன்*
*0208537 7324*

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(சி-39792)(22-11-16)

### செல்வி தேவிகா கனகரத்தினம்

யாழ்ப்பாணம், வைமன் வீதியைப் பிறப்பிடமாகவும் BPG.3 மனிங்ரவுண் தொடர் மாடிக் கட்டடத்திலும் தற்போது மொன்றியல், கனடாவில் வசித்து வந்தவருமான செல்வி தேவிகா கனகரத்தினம் 30.11.2004 இல் மொன்றியலில் அகாலமரணமானார்.

இவர் முன்னாள் பம்பலப்பிட்டி திருக்குடும்பக் கன்னியர்மடத்தின் மாணவியும் தற்போது மொன்றியல் டோஷன் (Dawson College) கல்லூரியின் மாணவியுமாவார்.

அன்னார் கனகரத்தினம் (முன்னாள் உதவிப் பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி) மகேந்திரமணி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி, கொழும்பு நல்லாயன் மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியை) ஆகியோரின் கனிஷ்ட புதல்வியும், சந்திரிக்கா (ரொறன்ரோ), ராதிகா(மொன்றியல்), நர்மதா(மொன்றியல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெயமோகன்(ரொறன்ரோ), குகானந்த குமார் (யு.எஸ்.ஏ.) ஆகியோரின் அன்பு மைத்துனியும் அஞ்சனாவின் அருமைச் சித்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.12.2004 திங்கட்கிழமை மொன்றியலில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4780, Vazina Street,*
*Apt # 11, Montreal, Quebec,*
*H3w 1B8, Canada*
*Tel. 514737 4787*

தகவல்:
மு.கனகரத்தினம்
(தந்தை).
(சி-39792)(22-11-16)

# சமாதானப் பேச்சு முயற்சிகளிலிருந்து ஐ.தே.க. விலகிக்கொள்வது நியாயமானதா?



தேசிய சமாதானப் பேரவையின் செயலாளர் கலாநிதி ஜெகான் பெரேரா 'லங்காதீப' சிங்கள நாளிதழுக்கு அளித்த செவ்வியின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.

அரசியல் அதிகாரப் போட்டியின் பலாபலனாக உருவான யுத்தம் காரணமாக கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் பெருமளவு உயிரிழப்புக்கள் ஏற்பட்டன; பெரும் சொத்துக்கள் அழிய நேரிட்டது; பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது; தற்போது போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டபோதிலும், அரசியல் அதிகாரப் போட்டியையும் நாட்டின் தேசிய பிரச்சினைக்கான தீர்வையும் வேறுபடுத்திப் பார்க்கும் இயல்பைக் காண முடியவில்லை. ஆட்சியைக் கைபபற்றும் தமது நோக்கத்துக்கு இத்தேசியப் பிரச்சினைக்கான தீர்வு குறித்த தமது நிலைப்பாட்டினை எந்த அளவுக்குப் பயன்படுத்த முடியுமென்ற நோக்கிலேயே அரசியல் கட்சிகள் செயற்பட்டு வருகின்றன. சமாதான நடவடிக்கைகளில் முன்னர் அரசுக்கு உதவ முன்வந்த ஐக்கிய தேசியக் கட்சி, தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அரசு தனது தரப்புக்கு கட்சி தாவவைத்தமை குறித்த ஆத்திரத்தால், தாம் சமாதான நடவடிக்கைகளுக்கு மேற்கொண்டு ஆதரவு தரத்தயாராயில்லையெனக் கூறுகிறது. இது தொடர்பாகத் தேசிய சமாதானப் பேரவையைச் சேர்ந்த கலாநிதி ஜெகான் பெரேரா தமது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார்.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பான அரசின் முயற்சிகளுக்குத் தான் இனிமேல் ஆதரவளிக்கப் போவதில்லையென்ற ஐ.தே.கவின் கருத்து வெளிப்பாடு குறித்து எனககு சநதேகமாயுள்ளது. இவ்வித கருத்து வெளிப்பாட்டின் நோக்கம் யாது? இது உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட கருத்தா? அல்லது தனியொருவரால் தன்னிச்சையாக வெளிபடுத்தப்பட்ட கருத்தா? என்பது சந்தேகத்துக்கு இடமானதே. இச் சந்தேகத்துக்கான காரணமும் உண்டு. கடந்த ஐந்து ஆண்டு காலமாக - குறிப்பாக ரணில் விக்கிரமசிங்க ஐ.தே.கவின் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் பின்னர்- இனப்பிரச்சினை தொடர்பான ஐ.தே.கவின் கொளகையில் மென்போக்குக் காணப்பட்டது. ரணில் எதிர்க்கட்சியில் இருந்த வேளையிலும் கூட யுத்தத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கவில்லை; சமாதான முயற்சிகளை எதிர்த்ததில்லை; தான் பிரதமராகப் பதவியேற்ற பின்னர், எவராலும் நிறுத்த முடியாதவகையில் தொடர்ந்து இடம்பெற்று வந்த யுத்தத்தை நிறுத்தும் பொருட்டுத் துணிச்சலுடன் செயற்பட்டார். பிரதமர் பதவியை இழந்த பின்னரும் கூட சமாதான முயற்சிகளுக்கு அரசுக்கு உதவத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தார். இவ்வித நிலைப்பாட்டுடன் இயங்கி வந்த தலைவரொருவர் இவ்வாறான முரணான நிலைப்பாட்டை எடுப்பதை நம்பமுடியவில்லை. உண்மையில் இவ்வித கருத்தை அவர் வெளிப்படுத்தியிருப்பாராயின் அது ஐ.தே.கவினுள் நிலவிய எதிர்ப்பு மற்றும் அழுத்தம் காரணமாகவே இடம் பெற்றிருக்க வேண்டும். ஆயினும், இவ்வித எதிர்ப்பை வெற்றிகொண்டு மீண்டும் அவர் சரியான நிலைபாட்டைக் கடைக்கொள்ள வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

அரசு இச்சமாதான முயற்சிகள் தொடர்பாக ஆக்கபூர்வமாகச் செயற்ப டுமானால் பிரதான எதிர்க் கட்சியான ஐ.தே.க. அவற்றை எதிர்க்காது, ஆதரவளிக்க முன்வரவேண்டும். அதை விடுத்து சமாதானத்துக்கு எதிராக இயங்க முயலுமாயின் அது குறுகிய அரசியல் அணுகுமுறையாகக் கருதப்படும். முன்னைய அரசுகளும, அரசியல்வாதிகளும், இவ்விதத்திலேயே செயற்பட்டுள்ளனர். இதன காரணமாகவே இன்று நாடு இததகைய சிரம நிலைககு உட்பட நேர்ந்துள்ளது. ரணில் இவ்வித குறுகிய நோக்கில் செயறபட மாட்டாரென நாம் நம்புவோம்; அவரது நிலைப்பாட்டால் ஐ.தே.கவுக்குள் கருத்து வேறுபாடுகள் தோன்றக்கூடும். இவ்வித கருத்து வெளிப்பாடு தப்பபிப்பிராயங்களை உருவாகக்கூடும்.

எதிர்க்கட்சி அல்லது ஏதாவதொரு கட்சி இவ்விதம் வெளியிடும் கருத்து, விடுதலைப் புலிகள் அமைப்பு மற்றும் தமிழ்ப் பொது மக்கள் மத்தியில் சிங்களப் பொதுமக்கள் மற்றும் நாட்டின் தலைமைத்துவம் தொடர்பான நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துமென்பது நியாயமானதே. தற்போதைய சமாதான முன்னெடுப்புக்கள் குறித்து சந்தேகத்தை ஏற்படுத்துமென்பதும் ஏற்கப்பட



வேண்டியதே. குறுகிய அரசியல் அபிலாஷை காரணமாக சமாதான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க மறுப்பது மிகப் பாரதூரமானதொரு விடயமாகும். அதற்கான காரணமும் ஒன்றுள்ளது.

ஜே.வி.பியினர் இச் சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்பது புதுமையானதல்ல; அவர்களது கொள்கை நிலைப்பாட்டின்படி

## நிரந்தர யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்திய பெருமை ஐ.தே.கவையே சாரும்

அதிகாரம் பரவலாக்கப்படுதல் ஏற்புடையதொன்றல்ல; தமிழ்மக்களுக்குப் பாரதூரமான பிரச்சினை எதுவும் இந்நாட்டில் கிடையாது; விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிவினைவாத அமைப்பென்பதால், அதனுடன் தொடர்பு வைப்பது பொருத்தமற்றது; இவ்வித கொள்கை நிலைபபாட்டைக் கொண்டியங்கும் ஜே.வி.பி. சமாதான நடவடிக்கைகளை எதிர்ப்பது புதுமையானதொன்றல்ல. ஆனால், அவர்கள் தமது கொள்கைக்கு அமையவே அவ்விதம் கருத்து வெளியிடுகின்றனர். அவர்கள் சிந்திபபதும் செயற்படுவதும் அக் கொள்கையையொட்டியே அவர்களது சிந்தனைகளும் குறுகிய வகையான வையே; பல மதங்களைப் பின்பற்றும் பல்லின மக்கள் வாழும் நாடு என்ற கோடபாடு அவர்களுக்குக் கசப்பான தொன்று.

ஜே.வி.பியினரின் இத்தகைய குறுகிய மதங்களைப் பின்பற்றும்-பல்லின மக்கள் வாழும் நாடு இது எனக் கருதும் விரிந்த பார்வை அவர்களுக்குண்டு. இவ்வித பரந்த பார்வை கொண்டதோர் கட்சித் தலைமைத்துவம், அரச தரப்பின் நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட அதிருப்தி நிலையால சமாதான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுப்பது பாரதூரமான தவறாகும். விடுதலைப் புலிகள் அமைப்பும் தமிழ் மக்களும் சிங்களத் தலைமைத்துவங்களுடன் தொடர்பு பேண இயலாதென முடிவு செய்யவும் இது வழிவகுக்கக கூடும்.

இக் குறுகிய அரசியல் போக்குக் காரணமாக இலங்கையில் சமாதானம் ஏற்பட வேணடுமென்ற எதிர்பார்ப்புடனுள்ள உலகின் ஏனைய நாடுகள் தமிழ் மக்களது சிக்கல்கள் நியாயமானவையே என சிந்திக்க வேணடியும் ஏற்படக்கூடும். அவ்வாறானதொரு நிலை மிகப் பயங்கரமானதென்றாகும். சிங்கள மக்களுடனும், சிங்களத் தலைமைகளுடனும் தீர்வொன்றை எட்டுவது சிரமமான தொன்றென தற்போது கூட தமிழ் மக்கள் எண்ணுகின்றனர். விடுதலைப் புலிகள் அமைப்பு வெளியிடும் கருத்துக்களில உண்மை இருப்பதாக சர்வதேச சமூகம் நம்ப எத்தனிக்குமாயின் அது இலங்கை அரசுக்கு ஆரோக்கியமானதொன்றாக அமையாது.

தனது அரசியல் ஆதாயம் கருதியே இன்றைய அரசு செயற்பட்டு வருகின்றது. அரசியல் அதிகாரம் என்பது மதிப்புமிக்கது. அரசியல் அதிகாரத்தைத் தக்கவைதது்க் கொள்ளும் நோக்கில் முன்னர் ஐ.தே.கவும் செயற்பட்டுள்ளது. அவ்வேளையில், அரசதரப்பிலிருந்து ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐ.தே.வுடன் இணைந்தனர். இது உண்மையில் ஒரு அதிகாரத்துககான போட்டியே. அதிகாரப் போட்டியையும் இனப்பிரச்சினைக்கான தீர்வையும் ஒன்றாக நோக்கலாகாது. அரசியல்வா[illegible] அதிகாரத்துக்காக பெருவிருப்பு கொள்பவர்கள் என்பதை நாம் அறிவோம்; அதிகாரத்தை அடைவதற்காக அவர்கள் பல தரப்பட்ட அணுகுமுறைகளைக் கைக்கொள்வது வழக்கம்; பல தியாகங்களை மேற்கொள்வதுண்டு; பல சதி முயற்சிகளை மேற்கொள்வதுண்டு. நாம் அவற்றையும் ஏற்றுக்கொண்டாலும் குறுகிய மனபபோக்கு காரணமாக நாட்டின் தேசியப் பிரச்சினையான இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகளுக்கு இடையூறு விளைவிக்க முயல்வதை அனுமதிக்க முடியாது.

தமிழ்மக்களது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டென தமது மாவீரர் தின உரையில் பிரபாகரன் சுட்டிக்காட்டியுள்ளார். இனியும் பொறுக்க இயலாமல் தாம் சுதந்திரத்துக்காக போராடத் தயாராவதாகவும் தொிவித்துள்ளார். இதன் கருத்து அச் சுதந்திரத்துக்கான போராட்டத்தை யுத்தமொன்றின் மூலமாக மட்டுமே முன்னெடுக்க முடியும் என்பதல்ல; வேறு இரு வித அணுகுமுறை மூலமும் சுதந்திரத்துக்கான போராடடத்தை முன்னெடுக்க இயலும்; அவற்றிலொன்று மக்கள் எழுச்சிமூலம் போராட்டத்தை முன்னெடுத்தலாகும். மற்றையது மெது மெதுவாக மேற்கொள்ளும் அழுத்தஙகளாகும். தென்னாபிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகள் மக்களை எழுச்சியுற வைத்தே தமது சுதந்திரப் போராடடத்தை முன்னெடுத்துச் சென்றன. விடுதலைப் புலிகள் அமைப்புக்கூட இவ்விரு வழிகள் மூலம் சுதந்திரத்துக்கான போராட்டத்தை ஆரம்பிக்கக் கூடும். தாம் சுதந்திரததுக்கான போராட்டத்தில் ஈடுபடப் போவதாகப் பிரபாகரன் தெரிவித்ததை அவர் மீணடும் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பிக்கப்போவதாகக் கூறியதாக அர்த்தப்பட இயலாது. ஒருவேளை அவர் மக்கள் சக்தியை ஒன்று திரட்டி போராட்டத்தை முன்னெடுக்கக் கூடும். தமது மாவீர்தின உரையில் பிரபாகரன் யுத்தமொன்று குறித்துப் பிரஸ்தாபித்திருக்காத போதிலும், தற்போதைய அரசியல் நிலைமை நிச்சயமற்றதொன்றாகவே தோன்றுகிறது.

சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக தாம் அரசுக்கு ஆதரவளிக்கப்போவதில்லை என ஐ.தே.கட்சி அமெரிக்காவுககுத் தெரிவித்திருந்தால் அதுவும் குறுகிய அரசியல் நோக்கமொன்றின் அடிப்படையிலேயேயாகும். அவ்விதம் ஐ.தே.க. கொளகை வெளிப்பாடொன்றை வெளியிட்டிருக்கிறது என நான் நம்புகின்றேன். அவ்விதம் இடம்பெற்றிருந்தால் எமது நாட்டின தலைமைத்துவம் குறித்து உலகநாடுகள் கௌரவமளிக்கமாட்டா. எந்தவொரு ஜனநாயக நாடும் இவ்வித பிரச்சினைக்கு தீர்வுகாண முயலும் வேளையில், பல தரப்பினரதும் ஒத்துழைப்புக் கிட்டுவதுண்டு .வட அயர்லாந்து, பிரித்தானியா, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலும் இவ்விதம் இடம்பெற்றுள்ளன. எமது அரசியல் தலைமைத்துவங்களுக்கும் இது தெரியாத விடயமல்ல. ஆனால், எமது நாட்டு அரசியலில் குறுகிய போக்கு பரந்து காணபபடுகிறது. இவ்வாறு ஐ.தே.க. குறுகிய போக்குடனான முடிவொன்றை மேற்கொளளாதென நான் நம்புவதே அக்கட்சிக்கு நான் அளிக்கும் கௌரவமாகும். உண்மையில் ஐ.தே.க. நாட்டுக்கு பெரும் சேவையாற்றியுள்ளது; அவர்களது திறமை காரணமாகவே யுத்தம் நிறுத்தப்பட்டது. ஆயினும், விடுதலைப் புலிகள் அமைப்புக்கு அதிக சலுகைகள் வழங்கிவிட்டதாக ஐ.தே.க. மீது குற்றம் காட்டப்படுவதை நாம் அறிந்துள்ளோம். ஆனால், அவ்விதம் எச் சலுகையையும் ஐ.தே.க. தமக்கு வழங்கி விடவில்லையெனப் புலிகள் கருத்து வெளியிட்டு வருகின்றனர். ஆயினும், நாட்டில் சமாதானம் நிலவுகிறது. அதற்கான பிற்புலத்தை உருவாக்கிய ஐ.தே.க. தற்போது அமெரிக்காவுக்கு இத்தகையதொரு கருத்தைத் தெரிவிப்பது பொருத்தமானதல்ல. ஐ.தே.க. இந்நாட்டின் பெரியதொரு அரசியல்கட்சி. அதில் பலதரப்பட்ட கருத்துக்கொண்டோர் அங்கம் வகிக்கின்றனர். தற்போதைய இக்கருத்து அவ்விதம் பல தரப்பட்ட கருத்துக்கொண்டோரில் ஒருவரது தனிப்பட்ட கருத்தாக இருக்கக்கூடும். ஆயினும், இது கட்சியின் ஒட்டுமொத்தக் கருத்தாக அமையக் கூடாதென்பது மட்டுமன்றி, அவ்விதம் முரண்பட்ட கருத்தாலெழும் தப்பபிப்பிராயம் களையப்படல் வேண்டும்.

போர் தவிர்ப்பு ஒப்பந்த மீறல் தொடர்பாக நோர்வே அரசு விடுதலைப் புலிகள் அமைப்பின் மீது அழுத்தம்கொடுககவில்லை எனக் கூறப்படுவதும் உண்மையே. அதற்கான காரணமும் உள்ளது. போர் தவிர்பபு ஒப்பந்தம் அரசு மற்றும் விடுதலைப புலிகள் அமைப்பு ஆகிய இரு தரப்பினரின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ளபபட்டதொன்று. இவ் ஒப்பந்த மீறல் தொடர்பாக செயற்படுவதற்கு நோர்வே விசேட கண்காணிப்பாளர்களுக்கு எவ்வித அதிகாரமும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இப்பிரச்சினைக்கான தீர்வு அரசும் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்றிணைந்து இவ் ஒப்பந்த சரத்துகளில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதன் மூலமே எட்டப்பட முடியும். இவ்விரு தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட்டாலொழிய இதற்குத் தீர்வு காண்பது இயலாத தாகிவிடும்.

இச் சமாதான நடவடிக்கையில் பெரும் பங்காற்றியுள்ள ஐ.தே.க. தற்போதைய நிலையில் அரசியல் அதிகாரப் போட்டி மனப்பாங்கைக் கைவிட்டு இப்பிரச்சினைககுத் தீர்வு காணும் முயற்சிக்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும். அதன் மூலமே நாட்டில் சமாதானம் எட்டப்பட வாய்ப்பு ஏற்படும்.

★ ★ ★

தமிழில்:-வீயெஸ்ரீ


# உற்பத்திப் பொருள் கண்காட்சி

கிளிநொச்சி, டிசெ.10

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனம், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்தும் மின்னொட்டுப் பயிற்சி, மரவேலைப் பயிற்சி ஆகிய பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த மாணவர்களின் உற்பத்திப் பொருள் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் முத்தையன் கட்டு வலதுகரை புனித பூமி சிறுவர் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

(8-202)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 03 - 08 - 1936

மறைவு 22 - 11 - 2003

**அமரர் சின்னத்தம்பி தம்பிப்பிள்ளை**

ஆண்டு ஒன்று ஓடி மறைந்து போனாலும்
உங்கள் நினைவு மட்டும் ஒருபோதும் மறையாது
ஈண்டு உங்கள் உருவம் கண்முன் தோன்றுகிறதே.
*ஆத்மா சாந்திபெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.*
*ஓம் சாந்தி!*

அச்செழு,
நீர்வேலி.
(39461)(26-11-16)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



தாயின் மடியில் 25 – 12 – 1953

ஆண்டவன் அரவணைப்பில் 10 – 11 – 2004

**திருமதி கமலினி குகதாசன்**

அன்னையைப்போல் அன்பு காட்டிய என்
அருமை அக்காவே! என்னைவிட்டு எங்கு
சென்றீர்கள்... ? என்றும் அன்பு காட்டி
ஆறுதல் தந்த என் அன்பு அக்காவே!
இனி ஒரு நிழல் தேடி நான் எங்கு செல்வேன்...?
நீங்கள் மறைந்து விட்டீர்கள் என்று
கற்பனை பண்ணிக்கூடப் பார்க்க முடியவில்லையே!
என் நினைவுகளிலே என்றும் மறையாமல்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்
என் அன்பு அக்காவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய நயினைஅம்மனை வேண்டிநிற்கிறேன்.

லிபியாவிலிருந்து கண்ணீருடன்
உங்கள் தம்பி மற்றும் மச்சாள், பிள்ளைகள்
மற்றும் அக்கா குடும்பத்தினர்,
தம்பி குடும்பத்தினர், தங்கை – வசந்தி
கண்ணீருடன் ஜேர்மனியிலிருந்து
அன்புத் தங்கை – சுபி குடும்பத்தினர்.

ந. சாந்தகுமார்,
அரசடி லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (26-11-16)

(39454)


# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் 75ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. (8-202)

# வதிவிடச் செயலமர்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், டிசெ.10

கொழும்பு றோயல் கல்லூரியில் இன்று தொடக்கம் நடைபெறவிருந்த கல்வித்துறையில் முகாமைத்துவ கலாசாரத்தை ஸ்தாபித்தல் தொடர்பான வதிவிடச் செயலமர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் எஸ். எஸ்.குணவர்த்தன அறிவித்துள்ளார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் இடைநிலைக்கல்வி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இச்செயலமர்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(8-173-202)

# பாராட்டு விழா

அரியாலை,டிசெ.10

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் மிக நீண்டகாலமாக இயக்குநராகச் சேவையாற்றிய வடபிராந்தியப் போக்குவரத்து சபையின் பிராந்திய கணக்காளர் சபா.தியாகராஜா சங்கத்தால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற மாவீரர் தின நிகழ்வில் இந்தப் பாராட்டு வைபவம் இடம்பெற்றது.

அத்துடன், சங்கத்தின் பொதுச்சபை உறுப்பினராக நீண்டகாலம் சேவையாற்றிய சங்கத்தின் சுண்டிக்குளி கிளையின் தலைவரான ஏ.பி.செல்வரத்தினம் என்பவருக்கும் பரிசில்கள் வழங்கிப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டன.

(8-17)

# சர்வதேச லயன்ஸ் கழகத்தின் தலைமைத்துவ மாநாடு இந்தியாவில்!

தென்மராட்சி, டிசெ.10

இந்தியாவின் குஜராத் மாநிலத்தின் அஹமதாபாத் நகரில் எதிர்வரும் 12ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கான ஐந்துநாள் தலைமைத்துவ மாநாட்டில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி மாநாட்டில் இந்தியா, தென்னாசியா, ஆபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள் ஆகியவற்றிலிருந்து லயன்ஸ் கழக உறுப்பினர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்டத்திலுள்ள யாழ்ப்பாணத்திலிருந்து சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா. நவரத்தினம் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(10-204-117)


**புதிய கல்வி ஆண்டிற்கான**

**தரம் 10, 11 - கணிதம்**

32 வருடங்கள் நிலைத்து நின்று
சேவை புரியும்

**வரதன் ஆசிரியரின் வகுப்புகள்**

ஆரம்பமாகின்றன.

The Express Institute
Irupalai, Kopay. - அதிபர்.

(சி-39354)

**London Language School**

*Sinhala*

By: Prof. Leelakrishnan
Commences on 11th 9.00 a.m.
**774, Hospital Road,**
**Jaffna.**
0777 - 238605.

(39334)

## புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்


எமது நிறுவனத்தினால் நவம்பர் 22 முதல் 30 வரையில் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருந்த புத்தக விற்பனையை பொதுநிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி வரை நீடித்துள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

234, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573.

(C/39459) (42-11-16-26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 13 - 08 - 1925

மறைவு 10 - 11 - 2004

**அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை**

(செல்லத்துரை)

*அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து*
*அமரர் ஆகிவிட்டீர்களே!*
***ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.***

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (10-12-2004) வெள்ளிக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறுகின்றன. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வீரபத்திரர் கோயிலடி,
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (சி-39772)(26-11-16) - குடும்பத்தினர்.

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 - 09 - 1942

உதிர்வு 22 - 11 - 1995

**திருமதி தங்கராசா பரமேஸ்வரி**

அம்மா எங்களின் அன்புத் தெய்வமே!
நீங்கள் உங்களையே அர்ப்பணித்து வளர்த்து
எங்களைத் தலைநிமிர்ந்து வாழ வைத்தீர்களம்மா!
உடலால் பிரிந்து ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் இதயத்தில் உங்களை நாம்
என்றுமே அழியாமல் காக்கிறோம்
நீங்கள் இறைவனோடு இருக்கின்றீர்கள்
என்று நாம் உணர்கிறோம்.

*தகவல்:* செ. தங்கராசா,
கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (39463)(26-11-16)

உங்கள் பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

## சண்றைஸ் மெடி கிளினிக்

யாழ்ப்பாணத்தில் **SUN RISE MEDI CLINIC**

சிறப்பான வைத்திய சேவைக்கு உகந்ததோர் இடம்:


- ★ யாழ்.போதனா வைத்தியசாலை MBBS டாக்டர்களின் வெளிநோயாளர் பிரிவு.
- ★ வாகன சாரதி அனுமதிப்பத்திர மருத்துவ அறிக்கை
- ★ ஆய்வுகூட பரிசோதனை ECG, X Ray
- ★ முழு உடற்பரிசோதனை.
- ★ அனுபவமிக்க வைத்திய நிபுணர்களின் தனியான கவனிப்பு
- ★ பல்வைத்திய சேவை / நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய பல்வைத்தியரின் சேவை.

❖ வைத்திய நிபுணத்துவ ஆலோசனை பெற்றுக்கொள்ளலாம்.
**Specialist Consultation Centre**
❖ ஆய்வுகூடத்தில் தினமும் நவீன கொம்பியூட்டர் மயமான இயந்திரங்கள் மூலமாக அனுபவம் மிக்கவர்களால் துல்லியமாக. சரியான பெறுபேறுகள்!

**வருகை தரும் வைத்திய நிபுணர்கள்**

1. குழந்தை வைத்திய நிபுணர் Paediatrician (தினமும் நண்பகல் / மாலை இரு தடவைகள்)
2. சத்திர சிகிச்சை நிபுணர்கள் Surgeons
3. பொது வைத்திய நிபுணர் Physicians
4. என்பு முறிவு நெரிவு சிகிச்சை நிபுணர் Orthopaedic Surgeon
5. கண் வைத்திய நிபுணர்கள் Eye Surgeons
6. மகப்பேற்று வைத்திய நிபுணர் Gynoecologist
7. உளநோய் மருத்துவ நிபுணர் Phychiastrict
8. தோல்வைத்திய நிபுணர் Dermatoligist








(யாழ்.மத்திய பஸ்நிலைய வைரவர் கோயிலுக்கு எதிரில்)
388, ஆஸ்பத்திரி வீதி, முதலாம் மாடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 6069.

(39720) UTHAYAN Graphics

# மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் இன்று கருத்துரைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.10

அனைத்துலக மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையில் இன்று விசேட கருத்துரைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் இன்று காலை 10 மணிக்கு கருத்துரை வழங்கும் நிகழ்வு ஆரம்பமாகும். உதவி அரச அதிபர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் கே.மகேந்திரலிங்கம் வரவேற்புரை நிகழ்த்துவார்.

'மனித உரிமைகளும் மதமாற்றங்களும்' என்ற பொருளில் ஊர்காவற்றுறை கணபதீஸ்வரம் சிவன்கோயில் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ஜெ.சந்திரகாந்தக் குருக்களும் -

'இலங்கையில் மனித உரிமைகள்' என்ற பொருளில் மனித உரிமை ஆணைக்குழுவின் சட்டத்தரணி எம்.நிரஞ்சனும் -

'மனித உரிமை பேணலின் அவசியம்' என்ற பொருளில் ஊர்காவற்றுறைப் பிரதேச கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஸ்ரீபதியும்-

'இளைய தலைமுறையினர் மத்தியில் மனித உரிமை விழிப்புணர்வு' என்ற பொருளில் ஊர்காவற்றுறைப் பிரதேச சமூகசேவை உத்தியோகத்தர் வே.சிவராஜாவும் - கருத்துரைகளை வழங்குவர்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கருத்துரை நிகழ்வை, ஊர்காவற்றுறை மற்றும் காரைநகர் பகுதிகளுக்கான பண்பாட்டு அலுவலர் நெறிப்படுத்துவார். (எ)

# தமிழர் ஆசிரியர் சங்க அவசரக் கூட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.10

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்டப் பிரதிநிதிகளுக்கான அவசரக் கூட்டமொன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட தாய்ச்சங்க மாவட்ட, வலய கோட்டங்களைச் சேர்ந்த அமைப்புகளின் தலைவர், செயலாளர், பொருளாளர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு தமிழர் ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார். (எ-13)

# பாடசாலை மட்டத் திட்டமிடல் செயலமர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.10

யாழ். கல்விவலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான பாடசாலை மட்டத் திட்டமிடற் செயலமர்வு நாளைமுதல் நான்கு நாள்கள் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளை சனிக்கிழமை, நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை, 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை, 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை செயலமர்வு நடைபெறும்.

சுமார் ஆயிரம் மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து அதிபரும், ஓர் ஆசிரியரும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் இருந்து அதிபரும் இரண்டு ஆசிரியர்களும் இச்செயலமர்வில் கலந்துகொள்ள அழைக்கப்பட்டுள்ளனர்.

செயலமர்விற்கு வருகை தருபவர்கள் திட்டமிடல் ஆலோசனை வழிகாட்டி, கடந்த ஐந்துவருடங்களுக்கான மாணவர் எண்ணிகை விவரம், இடைவிலகல், மீளக்கற்போர் எண்ணிக்கை, பாடசாலையின் தேவை மற்றும் பற்றாக்குறை விவரம் ஆகியவற்றை கொண்டு வருதல்வேண்டும் என்று வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-5-203)

## வரவு - செலவுத் திட்டம் - 2005

(255 ஆம் அத்தியாயமான) நகரசபைக் கட்டளைச் சட்டத்தின் 1979 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 178(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகக் கட்டளை இலக்கம்:05, 09.12.2004 ஆம் திகதிய தீர்மானத்தின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் 10.12.2004 ஆம் திகதி தொடக்கம் ஏழு(7) நாள்களுக்கு அலுவலக நேரத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி.
09.12.2004 (சி-39506)(29-15-18)

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சோமலிங்கம்



கச்சேரியைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற யாழ்.மாநகரசபை சுத்திகரிப்புப் பகுதி மேற்பார்வையாளரும் யாழ்.செயலக புனர்வாழ்வு உத்தியோகத்தரும் பிரபல சமூக சேவையாளரும் ஆகிய சோமசுந்தரம் சோமலிங்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் - யோகம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற அழகக்கோன் - பாக்கியம் தம்பதிகளின் மருமகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும் யாழ்.சுண்டுக்குளி மகளிர் கல்லூரி தரம் - 8 மாணவி வினோஜாவின் பாசமிகு தந்தையும் தங்கராணி, காலஞ்சென்ற ஜெயசுந்தரம் மற்றும் கோமதி, பத்மாவதி, சௌந்தராணி, யோகமலர், உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோகிலம், செல்வம், குணவதி, தர்மலிங்கம், கோபால், ருக்குமணி, தேவராசா, விஜயன், காலஞ்சென்ற முத்துராசா மற்றும் அருளானந்தம், இராஜ்குமார், பாலசிங்கம், செல்வரதி ஆகியோரின் மைத்துனரும் பூபாலசிங்கம், தம்பு, சோமசுந்தரம், இரத்தினபவானி, தனலச்சுமி, குணம், வசந்தா, பிறேமா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.12.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நடுத்தெரு லேன்,*
*மாம்பழம் சந்தி,*
*யாழ்ப்பாணம்.* (39504)(29-18-15)

தகவல்:
குடும்பத்தினர்.

# சுவிஸின் இலங்கைத் தூதர் யாழ்.வருகிறார்

யாழ்ப்பாணம்,டிசெ.10

சுவிஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் பேனாடினோ றெகஸோஸி நாளை சனிக்கிழமை உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

குடாநாட்டிற்கு வருகைதரும் இவர், அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்குமான சுவிஸ் நாட்டின் நிதி உதவியுடன் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டடம் மற்றும் செயற்பாட்டு அறைகளைத் திறந்துவைப்பார். (எ-5)


**இலங்கை ஆசிரியர் சங்கம்**
**(பதிவு எண் 984)**
**யாழ்.மாவட்டக் கிளை**
**வடமாகாண ஆசிரியர் சங்கம்**

75 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 11.12.2004 (சனி)
முற்பகல் 10.00 மணி
இடம்: யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
தலைமை: தோழர் சா.தியாகலிங்கம்
தாய்ச்சங்கச் செயலாளர்
தோழர் C.ஜெயதுங்க உட்படப்
பல தாய்ச்சங்க உறுப்பினர்கள்
பங்குகொள்ளுவார்கள்.
- செயலாளர். (சி-39514)

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
G.A.Q., 1st in Com., B.A. Part-I, Part-II
யாழ்.பேராதனைப் பல்கலைக்கழகம்
G.A.Q. Paper Class , A/L 2005 Paper Class
2006 புதிய கலைப்பிரிவு
ஆரம்பம்: 11.12.2004 சனி காலை 8.00 மணி

D.C.S
DEGREE COLLEGE OF HIGHER STUDIES
342, ஸ்ரான்லி வீதி,
ஆரியகுளம் சந்தி அருகில்.
நியூட்டன், யாழ்ப்பாணம். (39489)

**N.E.I**

நல்லூர் கொக்குவில்
2005
புதிய பிரிவு (39449)(29)

ஆரம்பம்:
இன்று (10.12.2004) 4 p.m.

யாழ்.நகர் முன்னணி ஆசிரியர்களின் சேவை

**D.C.A.**

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்
ஸ்ரான்லி றோட் , மக்கள் வங்கி அருகல் யாழ்ப்பாணம்.
மழையால் தடைப்பட்ட
புதிய பிரிவுகள் (B.A. Part-1, Final
ஆரம்பம்: 11.12.2004 சனி 9.00 a.m.

| | |
|---|---|
| இ.நா. | சிவமகாலிங்கம் |
| தமிழ்: | மகாலிங்கசிவம் |
| புவியியல்: | கிரிதரன் |
| மெய்யியல்: | மோகன் |
| அரசறிவியல்: | பொன்சந்துரு |
| நாடகம்: | சந்திரன் (சி-39512)(29-15-18) |

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**

அஜித்(இருவேடம்). பூஜா நடித்த
அட்டகாசம்



தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே)

அடுத்த வெளியீடாக மிகவிரைவில் இந்தியாவிலும் இலங்கையிலும் அர்ஜுன், லைலா, வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா

**ராஜா யாழ்ப்பாணம்**

சில தினங்கள் மட்டும் இந்தியாவில் 200 நாள்கள் ஓடிய வெற்றிச்சித்திரம்
சேரன், சிநேகா, கோபிகா நடித்த
ஆட்டோகிராப்



காட்சிநேரம்: 10.30, 2.30,6.30, 9.30

**நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்**

குளிரூட்டப்பட்டது (சம்பந்தர் கிளினிக் ஒழுங்கை)
காலை 10.30, 2.30 (பு.நே.)
இளையதளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீஸ்)
தினசரி இரவு: 6.30, 9.00 (பு.நே.)
ஆங்கிலப்படம் VAN HELSING (தமிழ் படம்)

**நிரஞ்சனாஸ் சங்கானை**

சரத்குமார், லாரா நடித்த
சித்ரபதி (ரீஸ்)
காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45(பு.நே.) SPIDER MAN-2


# 'விளக்கு' சஞ்சிகை நடத்திய எழுத்தாக்கத்திறன் போட்டி முடிவுகள்

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் வெளியீடாகிய 'விளக்கு' சஞ்சிகை உலக ஆசிரியர் தினத்தையொட்டி நடத்திய தமிழ்மொழி எழுத்தாக்கத்திறன் போட்டியின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

**கட்டுரை**

மு.மோகனேந்திரன் - திருமலை ஈச்சந்தீவு, விபுலாநந்த வித்தியாலயம், கே.ஞானரெத்தினம் - கல்லடி சிவானந்த வித்தியாலயம், திருமதி கோகுலவாணி தேவராஜா - மல்லாவி மத்திய கல்லூரி.

**சிறுகதை**

யோசெப் ஆரோக்கியம் குரூஸ் - மடு வலயக்கல்விப் பணிமனை, மு.இராசநாயகம் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், செல்வி இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் - கண்டாவளைக் கல்விக் கோட்டம்.

**கவிதை**

திருமதி எம்.வீ.எ.ஃப்.ஸூல்.ஃபிகா - அல் கஸ்ஸாலி மத்திய கல்லூரி, அருட்சகோதரி ஞா.இமல்டா சுபாஜினி - வவுனியா தேசியக் கல்வியியற் கல்லூரி, செல்வி இரத்தினேஸ்வரி சிவசிதம்பரம் - கண்டாவளைக் கல்விக் கோட்டம்.

**விமர்சனம் எழுதுதல்**

கா.சசிதரன் - அளவெட்டி அருணோதயக் கல்லூரி. (3-10-202)

# தென்மராட்சி அதிபர்கள் கவனத்துக்கு!

உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் சோளன், சோயா மா (சி.பி.எஸ்) ஆகியவற்றைத் தென்மராட்சிப் பாடசாலை அதிபர்கள் இன்று காலை 9 மணிக்கு பின்வரும் பாடசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம் என்று தென்மராட்சி வயலக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

நாவற்குளி ம.வி., கைதடி முத்துக்குமாரசாமி ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை வீரசிங்கம் ம.வி, வரணி ம.வி., உசன் இராமநாதன் ம.வி. ஆகியவற்றில் கொத்தணி அடிப்படையில் இந்த உணவுப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை - சாவகச்சேரிப் பாடசாலைகளுக்கு, சாவகச்சேரி பல நோ.கூட்டுறவுச் சங்கத்தினால் அவரவர் பாடசாலைகளில் வைத்து சோளன், சோயா மா (சி.பி.எஸ்) ஆகியன வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-12)

# நுண்கலைக்கழகப் பரீட்சைகள்

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழக வாய்ப்பாட்டு, நடனம், சித்திரமும் வடிவமைப்பும் 4ஆம் வருட மாணவர்களிற்கான 2 ஆம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் இராமநாதன் மண்டபத்தில் நடைபெறும். பரீட்சை நேர அட்டவணையினை இராமநாதன் நுண்கலைக் கழகத்திலும், கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையிலும் பார்வையிடலாம் என பரீட்சைக் கிளை சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறியத்தந்துள்ளார். (3)

## கண்ணீர் அஞ்சலி

ஊருமல்ல, உறவுமல்ல, சுற்றமுமல்ல, சூழலுமல்ல
சிறுசுகளின் நட்பு, அன்பாய், பாசமாய்
பிணித்து, உற்றபோதும், அற்றபோதும்,
ஓடியோடி உதவி உடன் பிறந்தார்போல்
உறுதுணையாய் நின்ற உயர்திருவாளர்

### நடராசா பாலகுமாரன்

(கொக்குவில் - உசன்)
(Retired Signal Inspector-Dept.of Railway)

அவர்களின் வாழ்வு இலண்டன் மாநகரில் நிறைவுற்ற செய்தி நெஞ்சில் நெருப்பாய் இறங்கக் கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்யும்.

ஐயம்பிள்ளை யாதவராஜன் குடும்பம் - நெடுந்தீவு.
யாதவராஜன் மணிவண்ணன் குடும்பம்.
யாதவராஜன் நக்கீரன் குடும்பம்.

(39485)(42-13-15-29)

## 6 ஆம் நாள் நினைவுகளில்...



### அமரர் இளையதம்பி கர்ணா

(இந்து மெய்யியல் துறை,
2 ஆம் வருடக் கலைப்பீட மாணவன்,
யாழ். பல்கலைக்கழகம்)

இறைவா!
இந்து மெய்யியல் பயின்ற எம் இனிய நண்பனை
நன்று இவன் நமக்கு உதவிடுவான்
என்று எண்ணியா! உங்கு அழைத்தனை?
கன்று தவறிய தாய்ப்பசுவின் வேதனை
கலங்கி அழுதிடும் நண்பரின் வேதனை
உண்டோ உனக்கு உரைத்திடுவாயா? – கருணா
உயிரைத் திருப்பித் தந்திடுவாயா?

(39497)(29-15-18)

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

## கண்ணீர் அஞ்சலி

### சோ.சோமலிங்கம் (அரியாலை)

எமது நண்பனும் எமது அன்புக்கும் பாசத்துக்கும் உரியவரும் எமது நிறுவன வளர்ச்சியில் கூடிய அக்கறை உடைய சோமலிங்கம் அண்ணா அவர்களின் மறைவு எமக்கு பேரிழப்பைத் தருகிறது.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, மகள், உறவினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"ருவிங்கிள் ஸ்ரார்"
(39502)(29-15-18) பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

## மீராவோடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவர் அங்கு தங்கியிருக்கவில்லை என்றும், அவரது தகப்பனார் மட்டுமே தங்கியிருந்தார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதனை அறிந்து ஏமாற்றமடைந்த துப்பாக்கிதாரிகள் வீட்டின்மீது சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என வாழைச்சேனைப் பொலீஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீட்டுத் தளபாடங்கள் சேதமடைந்துள்ள போதிலும் ஆள்களுக்குப் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவும் இதே பாணியில் வாழைச்சேனையில் உள்ள வீடொன்றின்மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு வீட்டுத் தளபாடங்கள் சேதமாக்கப்பட்டன என வாழைச்சேனைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (க-3)

## ரூ. 25 ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போரினால் பாதிக்கப்பட்ட தாம் மீளக் குடியமர்ந்த போதிலும் தமக்கான மீள்குடியமர்வுக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை எனவும் -

ஆனால், கொடுப்பனவு வழங்குவதற்கான படிவத்தில் தம்மிடம் கையொப்பம் பெறப்பட்டு ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது எனவும் - மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பொது அமைப்புக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போராட்டத்தில் சுமார் 250 பேர் கலந்து கொண்டனர். சுலோக அட்டைகளைக் கையில் ஏந்தியவாறு இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவை வழங்கவேண்டும் என்றும் - அவ்வாறு வழங்காத பட்சத்தில் 15ஆம் திகதியில் இருந்து தொடர் மறியற்போராட்டத்தில் தாம் ஈடுபடவுள்ளதாகவும் - அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

முற்பகல் 11.30 மணிவரை இடம்பெற்ற இப்போராட்டத்தின் இறுதியில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. மறியற் போராட்டம் முற்பகல் 11.30 மணியளவில் முடிவுற்றதை அடுத்து செயலக உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் தமது பணிகளில் ஈடுபட்டனர்.

முன்னதாக யாழ். செயலகத் திட்டப் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார்.

(எ-10-5-6-15-30-74-139-173-31-117)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

கடந்த இரு நாள்களாக ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் சபையில் நடந்துகொண்டவிதம் மற்றும் தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் சபாநாயகர் வருவதைத் தடுத்தமை போன்ற செயற்பாடுகள் சபையின் சிறப்புரிமைகளை மீறுவதால் அவற்றிற்கெதிரான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவையுள்ளதாக சபை முதல்வரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன அங்கு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பான பிரேரணையை சபையில் சமர்ப்பிப்பதற்கு இந்தக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டது.

இதற்கிடையில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சபையில் நடந்துகொள்ளும் விதம் குறித்து இக்கூட்டத்தில் அமைச்சர்களான டியூ குணசேகர, தினேஷ் குணவர்த்தன ஆகியோர் கடும் விமர்சனங்களைச் செய்தனர். இது தொடர்பில் ஐ.தே.க. தலைவர் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமெனவும் அவர்கள் அங்கு வலியுறுத்தியிருக்கின்றனர்.

## நீதிமன்றை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, எஸ்.பி.திஸநாயக்காவின் அபிப்பிராயம் தொடர்பில் இதே நடைமுறையை ஏன் பின்பற்றியிருக்கக் கூடாது? திஸநாயக்காவின் உரை குற்றவியல் அல்லது தேர்தல் சட்டங்களை மீறவில்லை.

அரசமைப்பின் ஒரு பிரிவுக்கு முரணாக அவரின் கருத்து இருக்குமானால் கூட அவரால் மீண்டும் நாடாளுமன்றத்திற்கு வரமுடியும். இதற்கான பிரேரணையை விரைவில் நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி சமர்ப்பிக்கும்.

ஹபராதுவையில் நடைபெற்ற ஏர்பூட்டு விழாவில் உரையாற்றிய போது திஸநாயக்கா தெரிவித்த கருத்துக்கள், அப்போது எதற்கும் பொருந்தவில்லை. ஆனால், அவரது வழக்கின் மீதான இப்போதைய தீர்ப்பின் பின்னணியில் அந்தக் கருத்துக்கள் கனகச்சிதமாகப் பொருந்தியுள்ளன.

அவரின் ஹபராதுவ உரை நீதிமன்றத்தை அவமதிக்கவில்லை. அவர் தனது அபிப்பிராயத்தை மட்டுமே கூறினார்.

ஏற்கனவே நீதிமன்றம் தொடர்பில் முரணான கருத்துக்களை ஜனாதிபதி வெளிப்படுத்தினார். பிறகு தான் அப்படிக் கூறவில்லையெனக் கடிதத்தின் மூலம் ஜனாதிபதியே பதிலளித்தார். அவருக்குள்ள அந்த அடிப்படை உரிமை திஸநாயக்காவுக்கு இல்லாமற்போனது ஏன்?

இப்போது ஜனாதிபதிக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. நாட்டின் தலைவி என்ற ரீதியில் அவர் இந்த விடயத்தில் உரிய நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், நாம் அவரிடம் கெஞ்சப் போவதில்லை.

ஹபராதுவைக் கூட்டத்தின்போது அப்போதைய ஆட்சியின் பலம் குறித்தே திஸநாயக்கா பேசினார். அப்போது சந்திரிகாவை விட நாம் வலுவாக இருந்தோம். அவரை பிரபாகரன்கூட நம்பாத நிலை இருந்தது. இவ்வாறான சூழ்நிலையில் திஸநாயக்கா ஆற்றிய உரையில் வார்த்தை துஷ்பிரயோகம் இருக்கலாம். ஆனால், அது, நீதிமன்ற அவமதிப்பு அல்ல. திஸநாயக்காவுக்கு இப்போதும் வாக்குரிமை உள்ளது. தேர்தலில் அவரால் போட்டியிட முடியும்.

நீதிமன்றத்தை வைத்து ஆட்சியை நடத்துவதற்கு சந்திரிகா முயன்றார். பிரபாகரன்தான் அவரது ஆட்சியை தீர்மானிக்க வேண்டும் - என்றார் மஹிந்த விஜயசேகர. (க-3)

## கத்திக்குத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மரணம் குறித்து பருத்தித்துறை நீதிவான் க.அரியநாயகம் மரண விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனை நடத்திய பருத்தித்துறை வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

கூரிய கத்தியால் வயிறு, நெஞ்சுப் பகுதிகளில் குத்தியதால் ஏற்பட்ட இரத்தப் பெருக்குக் காரணமாக மரணம் சம்பவித்துள்ளது என்று அந்த அறிக்கையில் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

கூரிய ஆயுதத்தினால் குத்தப்பட்டு ஏற்பட்ட இரத்தப் போக்கே மரணத்துக்குக் காரணம் எனத் தெரிவித்த நீதிவான், கொலைக்கான காரணத்தைக் கண்டுபிடிக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார். மரண விசாரணையின் பின் சடலம் உறவி னர்களிடம் ஒப்படைக் கப் பட்டது.

(எ-3-15-36-70-173)

## தமிழ்க் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிரஸ் உறுப்பினர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நேற்றுக்காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடுவதற்கான கோரம் மணி ஒலித்தது; பிரதான வாயில் திறக்கப்பட்டது.

பிரதான நுழைவாயிலில் படைக்கல சேவிதர் செங்கோலை ஏந்தி முன்னே வர நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பிரதி உதவிச் செயலாளர்கள் அணிவகுத்துவர சபாநாயகர் சபைக்குள் பிரவேசித்தார்.

இந்தச் சமயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் திரண்டெழுந்து நுழைவாயிலின் முன் சென்று சபாநாயகரை சபைக்குள் வரவிடாமல் தடுத்துவிட்டனர்.

அதேவேளை, செங்கோலையும் வழமையாக வைக்கப்படும் பீடத்தில் வைக்கவிடமாட்டோம் என அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆனால், செங்கோலின் மீது அவர்கள் கைவைக்கவில்லை. அதற்கு ஊறு ஏதும் விளைவிக்கவுமில்லை. வழமையான சம்பிரதாயப்படி கொண்டு வரவிடமாட்டோம் என்றே அவர்கள் தடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் சபாநாயகர் தட்டுத் தடுமாறி ஆளும் தரப்பினரின் பக்கத்தின் ஊடாக ஒருவாறு நுழைந்து முன்னேறி தனது ஆசனத்தில் வந்து அமர்ந்து கொண்டார்.

படைக்கல சேவிதரும் செங்கோல் சகிதம் ஆளும் கட்சியின் பக்கம் சுற்றி வளைத்து வந்து சபாநாயகரின் மேசை மீது செங்கோலை ஒருவாறு வைத்துவிட்டார்.

வழமையாகச் செங்கோல் வைக்கப்படும் பீடத்தில் அதனை வைக்கவிடமாட்டோம் எனத் தமிழ்க் கூட்டமைப்பினர் அடம்பிடித்தனர்.

நேற்றுமுன்தினம் மகாவலி அபிவிருத்தி, பள்ளத்தாக்கு அபிவிருத்தி, உடரட்ட அபிவிருத்தி அமைச்சுக்கான ஒதுக்கீடுகள் எந்தவிதமான விவாதமும் வாக்கெடுப்பும் இன்றி அங்கீகரிக்கப்பட்ட விதத்தை ஆட்சேபித்தே தமிழ்க்கூட்டமைப்பு உறுப்பினர்கள் இப்படி ஆர்ப்பாட்டத்தில் இறங்கினர்.

"கொல்லாதே! கொல்லாதே! ஜனநாயகத்தைக் கொல்லாதே!" எனக் கோஷமிட்டபடியே சபை நடுவில் அவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியதோடு சபாபீடத்தின் முன்வந்து அமர்ந்துவிட்டனர்.

அவர்களுடன் மலையக மக்கள் முன்னணி உறுப்பினர்களும், ஐ.தே.க. உறுப்பினர் மகேஸ்வரனும் வந்து அமர்ந்து கொண்டனர்.

இதனால் சபை அமர்வுகளைக் கொண்டு நடத்தமுடியாத சபாநாயகர், சபை அமர்வை 15 நிமிட நேரத்துக்கு ஒத்திவைக்கிறார் எனக்கூறி சபையை ஒத்திவைத்துவிட்டார். (க-3)

## முகாமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றைக் கையளிக்க அவ்வூர்ப் பெண்கள் ஏற்பாடு செய்தனர். தற்போதுள்ள சூழ்நிலையில் ஊர்வலம் நடத்துவதைத் தவிர்க்கும்படி விடுதலைப் புலிகள் அவர்களிடம் கோரினர்.

இதை ஏற்று ஊர்வலம் நடத்தும் திட்டத்தைக் கைவிட்டு குழுக்களாகச் சென்ற பெண்கள் தமது கோரிக்கையை வலியுறுத்தி மகஜர் ஒன்றை கண்காணிப்புக் குழுவிடம் கையளித்தனர்.(3)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத் தளத்தில் பார்வையிடலாம் என்றும் -

தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் எதிர்வரும் 20ஆம் திகதிமுதல் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுவர் என்றும் - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(எ-3-13)

## பொலீஸ் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்டுள்ளார் என மட்டக்களப்புப் பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - பாரதிலேனில் இவர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை இவரைப் பின் தொடர்ந்து சென்ற இனந்தெரியாத நபர்கள் இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவரின் சடலம் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கொலையுண்டவர் அம்பாறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் -

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெள்ளிமலையின் (தங்கவடிவேலு) மெய்க்காப்பாளராக இவர் முன்பு கடமையாற்றியவர் என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.

(க-3)

## மகேஸ்வரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக மகேஸ்வரன் எம்.பி. நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியைக் காட்டமாக விமர்சித்ததுடன் நாடாளுமன்றத்தில் குழப்பம் விளைவிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுவந்தார்.

இவற்றைத் தொடர்ந்தே அவரது பாதுகாப்பு அகற்றப்பட்டுள்ளது. இதுபற்றி நேற்று அவர் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டாரவின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்புரையாற்றி ஒழுங்குப் பிரச்சினையையும் அவர் எழுப்பினார்.

தனது பாதுகாப்பு திரும்பப் பெறப்பட்டுள்ளது தொடர்பாக ஊடகங்களுக்கு அவர் தெரிவித்ததாவது:-

எனது வீட்டை அண்மித்த பகுதிகளில் சிவில் உடையில் ஆயுதம் தரித்தவர்களின் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் காணப்படுகின்றன. இப்படியான சூழ்நிலையில் எனது பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் எனது பாதுகாப்புக்கு ஏதாவது அச்சுறுத்தலோ அல்லது பாதிப்போ ஏற்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் ஸ்ரீலங்கா அரசும், ஜனாதிபதியும்தான் ஏற்கவேண்டும்.

எனது பாதுகாப்பை திரும்பப் பெறுவது பற்றி நேற்றிரவு அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவிற்குப் பொறுப்பான பணிப்பாளர் என்னுடன் தொடர்பு கொண்டார். உடனடியாக அதனைத் திரும்பப் பெறவேண்டியநிலை என்றார்.

சிறிதுகால அவகாசம் தாருங்கள் எனக் கேட்டபோது மேலிடத்தின் அழுத்தம் காரணமாக உடனடியாக வாபஸ் பெறவேண்டிய நிலை என அந்த அதிகாரி என்னிடம் கூறினார்.

இந்த விடயம் தொடர்பாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமுள்ள சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் கவனத்திற்கு நான் கொண்டு வரப் போகின்றேன் - என்றும் மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (க-3)

NEW SCIENCE COLLEGE
விடுமுறைக் கால வகுப்பு
சடமும் கதிர்ப்பும்
Mon., Thu., 1.00-2.30
சடப்பொருளியல்
Mon., Thu., 2.30-4.00
ஆரம்பம்: 13.12.2004
2006
வெப்பவியல்
Tue., Thu., 6.00 - 7.00 a.m.
ஆரம்பம்: 14.12.2004
அலைகளும் அதிர்வுகளும்
Sat., Sun., 6.00 - 7.00 a.m.
ஆரம்பம்: 11.12.2004
Paper Class
Wed., 3.30 - 5.00
ஆரம்பம்: 15.12.2004
By: கருணாநிதி
(39503)

## மரண அறிவித்தல்

### திருமதி ஜெசி மேரி யோசப்பின் யோசப்

இல.16, மருதடி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெசி மேரி யோசப்பின் யோசப் (டெய்சி) அவர்கள் புதன்கிழமை 08.12.2004 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப் பொன்ராசாவின் அன்பு மனைவியும் மேரி மாகிரட், காலஞ்சென்ற அருளானந்தம், ரத்னம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஐடா, அன்ரன், கில்டா, ரவி, லிண்டா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (10.12.2004) வெள்ளிக்கிழமை பி.ப.3 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித மரியாள் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, மருதடி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(39505)(15-18-29)

தகவல்:
பிள்ளைகள்.

கற்சுமி கல்வி நிறுவனம்
பிரத்தியேக வகுப்புகள் சேவை
166, நாவலர் வீதி, யாழ்.
தரம் 3 - 11 (O/L) வரை
கல்வியாண்டு - 2005
ஆரம்பம்: 10.12.2004
வெள்ளி 4.30 p.m.
★ தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
(39407)

CHEMISTRY Group Classes
By:
N.Vakeesan
A/L 2006 பிரிவு II
Inorganic
ஆரம்பம்: 10.12.2004
வெள்ளி 6.00 a.m.
★ திருநெல்வேலி (பல்கலைக்கழகம் முன்பாக)
★ யாவும் புதிய நேரப்படி
(39405)

குதூகல ஆரம்பம்...
COLLEGE OF ENGLISH
75/10, பிறவுண் வீதி, யாழ். நீராவியடி.
யாழ்.நகரிலேயே ஆங்கிலக் கல்விக்கான தனித்துவம் வாய்ந்த நிறுவனம்
ஆறே மாதத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க.
SPOKEN ENGLISH
BY. த.தனேந்திரன் S.L.T.S. 2 - II
B.Com (Hons), M.M. Spl., H.N.Dip. In. ACC., P.G.Dip. In. Edu.
பகுதிநேர விரிவுரையாளர் (English) தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.
★ A/L மாணவர்களிற்கான General English
★ பல்கலைக்கழக மாணவர்களிற்கான English Paper Class
★ G.A.Q, B.A, B.Com. வெளிவாரிப்பட்டப்படிப்பினருக்கான English Paper Class
★ அலுவலர்களிற்கான Special English
★ 9, 10, O/L மாணவர்களிற்கான Special English
ஆரம்பம்: 11.12.2004 சனி 4 மணி
★ வரையறுக்கப்பட்ட மாணவர்களே அனுமதிக்கப்படவுள்ளதால் அனுமதியினை அன்றே உறுதிப்படுத்துங்கள்.
T.P. : 0777 686713
(39471)(38-15-18-29)
-நிர்வாகம்.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.12.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.